# உதயன்

28 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 067 வள்ளுவர் ஆண்டு 2044 தை 19 வெள்ளிக்கிழமை (01/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily




நீச்சல் குளத்தை எட்டிப்பார்த்தாரா டில்ஷான் 23

மஹிந்தவின் இந்திய வருகைக்கு தி.மு.க. எதிர்ப்புத் தெரிவிக்குமா? 08



தீவிரவாதிகளின் இறுதித் தளத்துக்குள் எதிர்ப்பின்றி நுழைந்தது பிரான்ஸ் படை 09



மொசாம்பிக்கில் வெள்ளம்; 40 பேர் சாவு 10



# நட்டாற்றில் நாம்


## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சரிடம் கேப்பாபிலவு மக்கள்

முல்லைத்தீவு, பெப்ரவரி 1

எந்த விதமான அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படாமல் நாங்கள் நட்டாற்றில் தவிக்கவிடப்பட்டுள்ளோம். மீள்குடியமர்வு என்ற பெயரில் எம்மைக் காட்டுக்குள் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு நேற்று வியாழக்கிழமை தம்மைச் சந்திக்க வந்த பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் அலஸ்ரயர் பேர்ட்டிடம் தமது அவலங்களை எடுத்துக் கூறினார்கள் கேப்பாபிலவு மக்கள்.

இரண்டு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் நேற்றுத் தமது முதல் பயணமாக முல்லைத்தீவுக்குச் சென்றார். அங்கு அவர் முள்ளியவளையில் இலங்கை இளைஞர் நல்லிணக்க பார்க்க பக்கம் 04



## இராணுவ ஆட்சியை உடனடியாக நீக்குக

வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.1

"வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியை நீக்கு, கைது செய்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய், காணி உரிமையை மக்களிடம் கையளிக்குக."

இவ்வாறு வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை தமிழ் - சிங்கள மக்கள் விண்ணதிர முழக்கமிட்டனர்.

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தக் கோரி 'சகோதரத்துவத்துக்கான மக்கள் அரண்' அமைப்பு வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இதில் கலந்துகொண்ட தமிழ், சிங்கள மக்களே மேற்கண்டவாறு கோஷமிட்டனர். பார்க்க பக்கம் 04

## வவுனியாவில் இரு சடலங்கள்

வவுனியா, பெப்.1

வவுனியாவில் இரு வேறு இடங்களில் இருந்து நேற்று முன்தினம் இரு சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா தாண்டிக்குளத்தில் இராணுவ உணவகத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்றில் இருந்து அதன் சாரதி நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கிரிபத்கொட பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த இந்திக்க பெரேரா (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி வந்த ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மூன்றுமுறிப்பு பிரதேசத்தில் இரவு 10.30 பார்க்க பக்கம் 04

# ஜெனிவா பிரேரணைக்கு இந்தியா முழு ஆதரவு

## திடமாக நம்புகிறது அமெரிக்கா

கொழும்பு, பெப். 1

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கை மீது அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு இந்தியா முழு ஆதரவளிக்கும் என்று அமெரிக்கா உறுதியாகத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கடந்த ஆண்டு அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா உட்பட அனைத்து நாடுகளும், இவ்வாண்டு கொண்டுவரப்படும் பிரேரணைக்கும் ஆதரவாக வாக்களிக்கும் என அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜேம்ஸ் மூர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். பார்க்க பக்கம் 04

# இலங்கைக்கு ஒரே வழி சர்வதேச விசாரணையே

## இந்தியா இதனை ஆதரிக்க வேண்டும் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப். 1

சர்வதேச விசாரணைப் பொறிமுறையினூடாக மாத்திரமே இலங்கையில் நீதி, நியாயத்தை நிலைநாட்ட முடியும். எனவே, இலங்கை மக்களின் நலனில் இந்தியாவுக்கு அக்கறை இருக்குமானால், சர்வதேச விசாரணைக்கு அது ஆதரவளிக்கவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை மையப்படுத்தியே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜதந்திரிகள் குழுவினர், ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் தமது நாடு இலங்கைக்கு எதிராக மற்றுமொரு புதிய பிரேரணையைக் கொண்டுவரவுள்ளதைப் பகிரங்கமாக அறிவித்தனர். பார்க்க பக்கம் 04

# இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கே கிடைக்கும்

## சவாலை முறியடிப்போம் என்கிறார் கெஹலிய

கொழும்பு, பெப்.1

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால், இந்தியா இலங்கைக்கே ஆதரவு வழங்கும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் தமக்கு உதவிகளை வழங்கிய அந் பார்க்க பக்கம் 04

# சிங்கள மீனவர்களின் வாடிகள் மாத்தளனில்

## நிரந்தரமாகத் தங்குவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், பெப்.1

முல்லைத்தீவு, மாத்தளன் பகுதிக்கு தென்னிலங்கையிலிருந்து கடந்த 29 ஆம் திகதி வந்திறங்கிய சிங்கள மீனவர்கள், அந்தப் பகுதியில் இராணுவப் பாதுகாப்புடன் வாடிகளை அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பார்க்க பக்கம் 04

# நாம் கெஞ்சியபோதும் கண் முன்பாகவே வீடுகளை இடித்து அழித்தனர் படையினர்

## சரவணபவன் எம்.பியிடம் வலி.வடக்கு மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.1

தமது வீடுகளை உடைக்க வேண்டாம் என்று படையினரிடம் கெஞ்சியபோதும் தமக்கு மேலிடத்து உத்தரவு கிடைத்துள்ளது எனத் தெரிவித்து வீடுகளை அவர்கள் இடித்து வருவதாக வலி.வடக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் முறைப்பாடு செய்தனர்.

தெல்லிப்பழை தொடங்கி காங்கேசன்துறை வரை படையினர் அமைத்துள்ள நிரந்தரப் பாதுகாப்பு வேலியோடு அமைந்துள்ள வீடுகளே இவ்வாறு இடித்தழிக்கப்பட்டு வருவதாக அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடமும் வலி.வடக்கு பிரதேச சபை தலைவர் சோ.சுகிர்தனிடமும் மேலும் தெரிவித்தனர்.

வலி.வடக்கில் இருந்து 23 வருடங்களாக இடம்பெயர்ந்த நிலையில் 7 ஆயிரத்து 60 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 328 பேர் வாழ்ந்து வருகின்றனர். தேசிய பாதுகாப் பார்க்க பக்கம் 04



# வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் இன்று முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,பெப்.01

வடமாகாண வருடாந்த ஆசிரிய இடமாற்றமும், சேவையின் தேவை கருதிய இடமாற்றமும் இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், இடமாற்றக் கடிதங்கள் ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1964 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்ட ஆண் ஆசிரியர்கள், 1969 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்ட பெண் ஆசிரியர்களில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டுச் சேவையின் தேவை கருதி இடமாற்றம் வழங்கப்படவுள்ள பட்டியல் தயாரிக்கப்பட்டது.

மருத்துவச் சான்றிதழ்கள் சமர்ப்பித்துள்ள ஆசிரியர்கள், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட மருத்துவச் சபைக்கு முன் தோன்றி பின்னர் அந்த மருத்துவச் சபையின் பரிந்துரைக்கு அமைவாக இடமாற்றச் சபையினால் அவர்களின் இடமாற்ற மேன்முறையீடுகள் குறித்து முடிவு எடுக்கப்படும்.

வருடாந்த இடமாற்றத்துக்குரிய ஆசிரியர்கள் விவரம் வலய ரீதியாக வருமாறு,

கிளிநொச்சி வலயத்திலிருந்து59 ஆசிரியர்களும், முல்லைத்தீவு வலயத்திலிருந்து 25ஆசிரியர்களும், துணுக்காய் வலயத்திலிருந்து 36 ஆசிரியர்களும், மடு வலயத்திலிருந்து 14 ஆசிரியர்களும், வவுனியா வடக்கு வலயத்திலிருந்து 50 ஆசிரியர்களுமாக 184 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுக் செல்கின்றனர்.

இந்த ஆசிரியர்களுக்குப் பதிலாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் விவரம் வலய ரீதியாக வருமாறு,

யாழ்ப்பாண வலயத்திலிருந்து 18 பேர் கிளிநொச்சிக்கும், 4 பேர் முல்லைத் தீவு வலயத்துக்கும், 7 பேர் துணுக்காய் வலயத்துக்கும், 2 பேர் தீவக வலயத்துக்கும்,

வலிகாமம் வலயத்திலிருந்து கிளிநொச்சிக்கு 68 பேரும், முல்லைத்தீவுக்கு 22 பேரும், துணுக்காய்க்கு 18 பேரும், மடுவுக்கு 6 பேரும்,

வடமராட்சி வலயத்திலிருந்து கிளிநொச்சிக்கு 22 பேரும், முல்லைத்தீவுக்கு 8பேரும், துணுக்காய்க்கு 15 பேரும், தென்மராட்சி வலயத்திலிருந்து கிளிநொச்சிக்கு 13பேரும், முல்லைத்தீவுக்கு ஒருவரும், துணுக்காய்க்கு 3 பேரும், வவுனியா தெற்கு வலயத்திலிருந்து வவுனியா வடக்கு வலயத்துக்கு 14 பேருமாக 221பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும். எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் புதிய நிலையத்தில் பொறுப்புக்களை ஏற்பது கட்டாயமானதாகும். மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலும் பதிலீட்டு இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர்கள் தாம் புதிய நிலையத்தில் கடமையேற்ற திகதியிலிருந்து 2 வருடங்கள் பூர்த்தியடைந்ததும் தமது நிரந்தர வலயத்துக்கு இடமாற்றம் பெறுவர் என்றுள்ளது.

(த-5)

## சாதிப்பதற்கு ஊனம் ஒருபோதும் தடையல்ல

### '3ஏ' சித்தி பெற்ற வாழ்வக மாணவன் தர்மதன்



யாழ்ப்பாணம்,பெப்.1

ஊனமென்பது எதற்கும் தடையில்லை எதையும் முயற்சித்தால் நாம் சாதித்து காட்ட முடியும்.

கலைப்பிரிவில் 3ஏ சித்திபெற்று மாவட்ட நிலையில் 4ஆவது இடத்தைப் பிடித்து சாதித்த சுன்னாகம் வாழ்வக மாணவன் சொர்ணலிங்கம் தர்மதன் கூறுகின்றார்.

தனது இரு கண்களில் பார்வையை இழந்த நிலையிலும் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் விடா முயற்சியுடனும் கற்றேனென உதயனுக்கு வழங்கிய செவ்வியில் மிகவும் உருக்கமாக தெரிவித்தார் அவர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்.மாவட்டத்தில் என்னைப் போன்ற விசேட திறமையுள்ள மாணவர்களுக்கு கற்றலை தொடர்வதற்கான போதிய வசதிகள் செய்து தரப்படவில்லை.

சாதர்ரண மாணவர்களுடன் ஒப்பிடும்போது எமக்கு விசேட வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனது 9 வயதில் இரு கண்பார்வையையும் முற்றாக இழந்து விட்டேன். ஆனால் நம்பிக்கையை நான் இழக்கவில்லை.

வாழ்வகத்தின் உதவியுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கண்பார்வையுள்ள சாதாரண மாணவர்களுடனேயே கற்றேன். எனது விடாமுயற்சிக்கு ஆசிரியர்களும், நண்பர்களும் உறுதுணையாக இருந்தார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்- என்றார். (த-16)

## வலி.வடக்கில் குடியமராத மக்களுடன் கலந்துரையாடல்

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் படையினர் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அந்தப் பகுதி நிரந்தரமாக விடுவிக்கப்படாமல் போகலாம் என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

எனவே அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு மல்லாகம் வலி.வடக்கு பிரதேச சபையில் நடைபெறவுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் 7 ஆயிரத்து 601 குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்காக பதிவு செய்துள்ளன. அவர்கள் தமது பிரதேசங்கள் எப்போது விடுவிக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கின்றனர்.

ஆயினும் படையினரோ மக்களின் காணிகளில் விவசாயம் செய்வதிலும், 'யோகட் ஆலை' அமைப்பதிலும், வீடுகளை இடித்துத் தரை மட்டமாக்குவதிலும் குறியாக உள்ளனர். இதனால் மக்களின் மீளக்குடியமர்வு நடவடிக்கை கேள்விக் குறியாகியுள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

## சிறுவரைத் துன்புறுத்தியதாக பணியாளர்கள் மீது வழக்கு

கிளிநொச்சி,பெப்.01

சிறுவர்களைத் துன்புறுத்திய குற்றச்சாட்டில் காந்தி சிறுவர் இல்லப் பணியாளர்கள் இருவர் மீது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்து சிறுவர் இல்லத்தை வாராந்தம் சோதனையிடும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் இயங்கிவரும் காந்தி சிறுவர் இல்லத்தில் சுமார் 30 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை சில பிள்ளைகளை மேற்குறித்த இரு பணியாளர்களும் அடித்துத் துன்புறுத்தியுள்ளனர் என பெற்றோர் நன்னடத்தை அதிகாரிகளுக்கு முறையிட்டிருந்தனர்.

இல்லத் துக்குச் சென்று விசாரணை நடத்திய அதிகாரிகள் குறித்த பிள்ளைகளின் உடலில் அடிகாயத்துக்கான அடையாளங்கள் இருப்பதை உறுதிப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் குற்றஞ்சாட்டப்பட்ட இரு பணியாளர்களையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளார்.(த-16-6)

## ஓட்டோவிலிருந்து பாய்ந்த பெண் படுகாயம்

ஓட்டோவில் இருந்து பாய்ந்த குடும்பப் பெண் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவத்தில் கைதடி நுணாவிலைச் சேர்ந்த புஸ்பராசா கிருஷா (வயது-40) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கைதடிப் பிள்ளையார் கோயிலுக்கு நேற்று வழிபடச் சென்று திரும்பும் வழியில் இவரை மறித்த ஓட்டோ சாரதி நன்றாகப் பேசி இவரது வீட்டுக்கு முன்னால் இறக்கி விடுவதாகத் தெரிவித்து அழைத்துச் சென்றதாகவும் வீட்டுக்குஅருகில் இறக்கி விட மறுத்ததால் பதற்றமடைந்த குடும்பப் பெண் ஓட்டோவிலிருந்து வெளியே பாய்ந்தார் என்று கூறப்படுகிறது.

மயக்க நிலையில் விழுந்து கிடந்த இவரை அங்கு நின்ற மக்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (த-16-23-9)

## அண்ணனின் வழியில் நானும் சாதித்தேன்

### கணிதப் பிரிவில் முதலிடம் வென்ற கோபாலன்



யாழ்ப்பாணம்,பெப்.01

அண்ணன் கல்விகற்று உயர்ந்ததுபோல நானும் நன்றாகக் கற்று ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என விரும்பி, அண்ணன் காட்டிய வழியில் நானும் இடைவிடாது கற்றதனால் உயர்தரப் பரீட்சையில் முன்னிலையில் சித்தியடைந்தேன். இதையிட்டு நானும் எனது குடும்பத்தினரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணித பாடத்தில் தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும், யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனான புலோலி தெற்கு பெருந்தெருவைச் சேர்ந்த பாலகோபாலன் கபிலன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் ஆரம்பக் கல்வியை புற்றளை மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் மேற்கொண்டேன். புற்றளை மகா வித்தியாலயத்தில் கற்றபோது 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுக்கு 118 வெட்டுப் புள்ளியாகவிருக்க 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தேன்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயர்தர வகுப்பில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் எனது அண்ணன் கோகுலன் 3ஏ சித்திகளைப் பெற்று தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றிருந்தார். அவரைப் பின்பற்றி நானும் படித்ததால் இன்று அதேதரச் சித்தியை நானும் பெற்றுள்ளேன். பாடங்கள்தான் வேறே தவிர சித்தி நிலை ஒன்றாகப் பெற்றதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். அண்ணன் உள்ளிட்ட எனது குடும்பத்தினர் அனைவருக்கும் இது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

நண்பர்களுடன் இணைந்தும், சுயமாகவும் பாடங்களைக் கற்றேன். நண்பர்களுடன் சேர்ந்து படிக்கும்போது பல ஐயங்களைக் களையக் கூடியதாக இருந்தது. ஆசிரியர்கள், அதிபர் மற்றும் குடும்பத்தினர் என்னை ஊக்குவித்தார்கள். தனியார் கல்வி நிலையத்திலும் கல்வி கற்றேன். கூடுதலாக வீட்டில் இரவு வேளைகளில் படிப்பேன். இடையிடையே அதிகாலையிலும் எழுந்து படிப்பேன். பொதுவாக பாடசாலையில் கற்ற கல்விபோதுமானதாக எனக்குத் தென்பட்டது. பாடங்களில் உள்ள ஐயங்களுக்கு நண்பர்களிடம் விடை கிடைக்காதவிடத்து ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். எனது உயர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், பெற்றோர் பெரிதும் உதவினார்கள் - என்றார். (த-8)

## பாடசாலையில் மாணவி பணியாளரால் துஷ்பிரயோகம்

### பொலிஸாரால் ஊழியர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.01

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல ஆரம்பப் பாடசாலை ஒன்றில் தரம் நான்கில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் பாடசாலை சிற்றூழியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவி, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்றுக் காலை வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டார். அதேவேளை, துஷ் பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் 60 வயதான சிற்றூழியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பாடசாலையில் பணியாற்றும் சிற்றூழியர் பாடசாலை மாணவியை மிரட்டி துஷ்பிரயோகம் செய்துள்ளார். பாடசாலை நேரத்தில் மலசலகூடத்தில் வைத்தே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

மாணவி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை பெற்றோருக்கு தெரிய வந்ததையடுத்து இந்தச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது. நேற்று குறித்த மாணவியை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற உறவினர்கள் பாடசாலை அலுவலகத்துக்குள் சென்று குறித்த சிற்றூழியரை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதன் பின்னர் பாடசாலைக்கு பிள்ளைகளைக் கூட்டி வந்த பெற்றோர் சிலரும் சிற்றூழியரைத் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து பாடசாலை நிர்வாகத்தால் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் குறித்த சிற்றூழியரைக் கைது செய்தனர். மாணவியை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட மாணவியை பார்க்க பார்வையாளர்களுக்கான நேரம் அல்லாத வேளை ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் சிலர் வைத்தியசாலைப் பணிப்பாளருடன் விடுதிக்குள் நுழைந்தனர். இந்த வேளையில் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட சிறுமியை கூட்டாக வந்து பார்வையிடுவதற்கு அவர் ஒன்றும் காட்சிப் பொருள் அல்ல என்று தெரிவித்து விடுதி வைத்தியர் அவர்களைப் பார்வையிட அனுமதிக்கவில்லை. இதனையடுத்து குறித்த ஆளும் தரப்பு அரசியல் வாதிகள் விடுதி வைத்தியருடன் முரண்பட்டுக் கொண்டு வெளியேறியுள்ளனர். (த-5-ரி)

## அதிபர்களுக்கு இடமாற்றம்

வடமாகாணத்திலுள்ள ஒரு பாடசாலையில் 7 வருட சேவையினைப் பூர்த்தி செய்த அதிபர்கள் 35 பேர் இன்று முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விசேட இடமாற்றச் சபையின் பரிந்துரைக்கு அமைவாக, இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதிக்குள் அதிபர்கள் தமது புதிய நிலையத்தில் கட்டாயம் பதவியேற்க வேண்டும். இது தொடர்பாக எவ்வித மேன்முறையீடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றார்.(த-5)

## குடும்பஸ்தரின் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைப்பு

வடமராட்சி, பெப்.1

குடும்பஸ்தர் ஒருவரின் சடலமொன்று நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உடுத்துறையைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி ராஜசிங்கம் (வயது-57) என்பவரின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பிரதேச பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இவர் சிகிச்சைக்காக மருதங்கேணி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரும்போது உயிரிழந்துள்ளார்.

. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-16-8)

## வயலில் தொழிலில் ஈடுபட்ட வயோதிபர் மயங்கி வீழ்ந்து சாவு

தென்மராட்சி, பெப்.1

குடியிருப்புடன் இணைந்த நெல் வயலில் வேலை செய்து கொண்டிருந்த வேளையில் மயங்கி வீழ்ந்த வயோதிபர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வரணி நாவற்காட்டில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னட்டி தர்மகுலசிங்கம் (வயது 78) என்பவரே உயிரிழந்தவராவார்.

மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளித்த போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வயோதிபரின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் நாயக விசாரணைகளை மேற்கொண்டு சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (வ-9)

## அறுவடை தாமதம்

அளவெட்டி,பெப்.1

காலபோக நெற்பயிர்கள் முற்றி காய்ந்த நிலையில் அறுவடைக்காக காத்துக் கிடக்கின்றன. ஆயினும் பெரும்பாலான வயல்களில் நீர் நிறைந்தும், சேறும் சகதியுமாக உள்ளதால் அறுவடை செய்ய முடியாதுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இம்முறை நெல் விளைச்சல் எதிர்பார்த்தளவு பயனளிக்கவில்லை. இவ்வாறான நிலையில் கூடிய பணம் செலவு செய்து அறுவடை மேற்கொண்டு அவற்றை வேறு இடத்துக்கு ஏற்றிச் சென்றே சூடு மிதிக்க வேண்டியுள்ளதாகவும் நெல் வயல்கள் சேறாக உள்ளமையே இதற்குக் காரணம் எனவும் கந்தரோடை விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (த-36)

## திராட்சை செய்கையை விவசாயப் பணிப்பாளர் பார்வையிட்டார்

வேலணை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் திராட்சை செய்கையை வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் திராட்சை செய்கை தற்போது நல்ல நிலையில் காணப்படுகின்றது.

அல்லைப்பிட்டி, மண்கும்பான், நாரந்தனை ஆகிய இடங்களில் விவசாயிகள் திராட்சைச் செய்கையில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம், போதனாசிரியர் எஸ்.இராமநாதன் ஆகியோரும் விவசாயப் பணிப்பாளருடன் சென்றிருந்தனர். (த-17)

# நிரந்தர தரிப்பிடம் இல்லை வெளிமாவட்ட பஸ்கள் சிரமம்

### பயணிகளும் அந்தரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1

*வெளிமாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான நிரந்தர தரிப்பிடம் இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் பயணிகளும், பஸ் சாரதிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.*

யாழ்.நகரில் இருந்து வெளிமாவட்டங்களுக்கான சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான நிரந்தர தரிப்பிடம் இதுவரை யாழ். மாநகர சபையால் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை.

யாழ்.ஸ்ரான்லி வீதியையும் மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதியில் முன்னர் அமைந்திருந்த இந்தத் தனியார் பஸ் தரிப்பிடத்தை அருகில் உள்ள குளம் புனரமைப்பு எனக்கூறி அங்கிருந்து அகற்றினர். பின்னர் அது முனீஸ்வரன் வீதிக்கு மாற்றப்பட்டது.

இந்தத் தற்காலிக பஸ் தரிப்பிடக் காணியும் தனியார்களுக்குச் சொந்தமானது என்பதால் காணி உரிமையாளர்கள் பஸ் தரிப்பிடத்தை அங்கிருந்து அகற்றுமாறு மாநகர சபையிடம் கோரியுள்ளதுடன் நீதிமன்றத்திலும் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் பழைய பஸ் தரிப்பிடமும், தற்காலிகத் தரிப்பிடமும் பறிபோய் உள்ளமையால் நிரந்தரமாக பஸ் தரிப்பிடத்தை அமைக்க முடியாமல் யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் திண்டாடி வருகின்றது.

நிரந்தர பஸ் தரிப்பிடத்தை அமைத்து தருமாறு யாழ்.மாநகர சபையிடம் இணையம் கோரிக்கை விடுத்த போதும் இது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிமாவட்டங்களுக்கான பஸ் தரிப்பிடம் முனீஸ்வரன் வீதியில் உள்ளமையால் இரவு வேளைகளில் பயணிகள் அங்கு செல்ல அச்சப்படுவதுடன் சிலர் தரிப்பிடம் தெரியாமல் அலைந்து திரிவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இதனால் பஸ் சாரதிகளும் உரிய நேரத்துக்கு பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

எனவே வெளிமாவட்ட பஸ் சேவையைச் சீராக வழங்க நிரந்தர பஸ் தரிப்பிடத்தை அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-14)

## கிரவல் தூசியினால் பாதிப்பு

கொடிகாமம்,பெப்.1

**உணவு கையாளும் நிலையங்களில் தூசி உட்சென்று உணவுப் பொருள்களுடன் கலப்பதால் அதனை விற்பனை செய்யமுடியவில்லை**

வீதி அகலிப்புக்காக வீதியோரத்தில் போடப்பட்ட சிவப்பு நிறகிரவல் மண்ணிலிருந்து எழும் தூசியினால் விற்பனைப் பொருள்கள் மட்டுமன்றி வர்த்தகர்களும் பாதிப்படைகின்றனர் என்று கொடிகாமம் வணிகர் மன்றத்தினர் தெரிவித்தனர்.

ஏ-9 வீதி அகலிப்புக்காக பறிக்கப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்பட்ட பின்னர் வீதியோரத்தில் காணப்படும் கிரவல் மணல் வாகனங்கள் செல்லும் போது தூசியாகக் காற்றுடன் கலந்து கடைகளுக்குள் போவதால் கடையில் உள்ள பொருள்கள் தூசிகள்படர்ந்த நிலையில் சிவப்பு நிறமாக மாறுவதாகவும் வீதியுடன் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் தூசி உட்சென்று உணவுப் பொருள்களுடன் கலப்பதால் அதனை விற்பனை செய்யமுடியவில்லை என்றும் தெரிவித்தனர்.

வியாபார நிலையங்களை அண்டியுள்ள வீதிகளில் கிரவல் மண்ணிலிருந்து தூசி எழாமல் இருக்க மாற்று ஒழுங்கினை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வணிகர் மன்றத்தினர் கேட்டுள்ளனர். (த-9)

## எண்ணெய் சட்டிக்குள் பெற்றோல் ஊற்றிய குடும்பப் பெண் காயம்

தென்மராட்சி,பெப்.1

*கொண்டாட்டம் ஒன்றுக்காகப் பலகாரம் செய்து கொண்டிருந்த குடும்பப்பெண் ஒருவர் பலகாரச் சட்டிக்குள் தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக பெற்றோலை ஊற்றியதால் அது பற்றியெரிந்து படுகாயமடைந்தார்.*

*தேங்காய் எண்ணெய் போத்தலுக்குப் பதிலாக பெற்றோல் போத்தலை எடுத்துவந்து கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிக்குள் ஊற்றியபோது அது வெடித்துத் தீப்பற்றியது. இதனால் அவர் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கானார்.*

*இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு பாலாவி வடக்கில் இடம்பெற்றது.*

*அதே இடத்தைச் சேர்ந்த யோகராசா கமலாதேவி (வயது-45) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.* (த-9)

## கொள்ளையிட்ட நகைகளை விற்ற மூவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப்.1

பல்வேறு திருட்டு, கொள்ளைச் சம்பபவங்களில் எடுக்கப்பட்ட நகைகளில் ஒரு பகுதி யாழ். நகர நகைக்கட ஒன்றில் விற்கப்பட்ட நிலையில் பொலிஸார் அவற்றை மீட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 3பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கடுமையான நிபந்தனைகளின் கீழ் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

வேலணைப் பகுதியில் அண்மையில் இரண்டு கொள்ளைச் சம்பவங்களில் 11 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பொருள்கள் எனப் பல இலட்சக்கணக்கான பெறுமதியுடைய உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையிலேயே யாழ். நகரப்பகுதியிலுள்ள நகைக் கடை ஒன்றிலிருந்து ஒரு பகுதி நகைகளை பொலிஸார் மீட்டனர். அது தொடர்பில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களைக் கைது செய்தனர் அவர்களில் இரண்டு பேர் ஏற்கனவே பல திருட்டுக்களுடன் தொடர்புபட்ட குற்றத்துக்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர்கள். சில குற்றச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டமை தொடர்பிலான வழக்குகள் விசாரணையில் உள்ளன.

மூவரும் கடந்த சனிக்கிழமை நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டதோடு அவர்களுக்கு எதிரான இரண்டு குற்றப் பத்திரமும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை நீதிவான் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது சந்தேக நபர்கள் மூவரும், தாம் சுற்றவாளிகள் என்று நீதிமன்றில் தெரிவித்தனர். எனவே வழக்குகளை விசாரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி முதல் வழக்கில் ஒவ்வொரு சந்தேக நபரும், தலா ஒரு இலட்சம் ரூபா ரொக்கப்பிணையில் விடுவிக்கப்பட்டனர். தவிர வாராந்தம் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் முற்பகல் 9 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

இரண்டாவது வழக்கில், ஒவ்வொரு சந்தேகநபரும் தலா ஒரு இலட்சம் ரொக்கப் பிணையிலும், தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். இது தவிர இந்த வழக்கில் வாராந்தம் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முற்பகல் 9 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டும் எனவும் பிணையாளர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனையில் ஏதாவது ஒரு நிபந்தனை மீறப்படும் பட்சத்தில் பிணை இரத்துச் செய்யப்பட்டு சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவர் எனவும் அறிவுறுத்தப்பட்டது. (த-4)

## 3 குற்றங்களுக்கு அபராதம்

தென்மராட்சி,பெப்.1

ஒரே நாளில் ஒரு நபர் வெவ்வேறு மூன்று குற்றங்களுக்காக அபராதம் செலுத்துமாறு நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

பயண வழி அனுமதிப் பத்திரமின்றி பயணிகள் வாகனம் செலுத்தியமைக்காக கொடிகாமம் பொலிஸாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

மூன்று தினங்களின் பின்னர் இந்தக் குற்றத்திற்காக மீண்டும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமைக்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மூன்று வழக்குகளும் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழிப்பயண அனுமதிப் பத்திரமின்றி பயனாளிகள் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக இரு வழக்குகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமைக்காக 500 ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அபராதமாக விதித்தார். (த-9)

## வாழ்வாதார உதவி வழங்கல்

**ஐந்து சமுர்த்தி பயனாளிகளுக்கு சுயதொழில் உதவித் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.**

தென்மராட்சி,பெப்.1

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாணவர்களுக்கு கல்வி உதவு நிதி வழங்கல் மற்றும் சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரினும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.. மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.கிருஸ்ணகுமார், சாவகச்சேரி நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் வறுமை நிலையில் உள்ள ஐந்து சமுர்த்தி பயனாளிகளுக்கு சுயதொழில் உதவித் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்களும், பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோருக்கு சைக்கிள்களும் மாணவர்களுக்காக புலமைப்பரிசில் நிதி, கற்றல் உதவி நிதி ஆகியவை வழங்கலும் இடம் பெறும். (த-9)

## முறைகேடாக அனுமதி வழங்கிய ஆணையாளர் கைது

கொழும்பு, பெப்.1

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் குற்றத்தடுப்பு பொலிஸ் திணைக்கள பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைக்கேடாக சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒருவருக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பிரதி ஆணையாளர் கங்கொடவில நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## இராணுவ..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன், சகோதரத்துவத்துக்கான மக்கள் அரண் அமைப்பின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் காணமல் போன மற்றும் கைதுசெய்யப்பட்டவர்களின் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

'வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை உறுதிசெய்', 'வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியை நீக்கு', 'கைதுசெய்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்', 'அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்', 'சட்டவிரோதக் கைதுகள், கடத்தல்களை உடனடியாக நிறுத்து', 'வடக்கில் நடத்தும் காணி அபகரிப்பை உடன் நிறுத்து' எனப் பல கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் சகோதரத்துவத்துக்கான மக்கள் அரண் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டம் வவுனியா பஸ் நிலையத்தில் நடைபெற்றபோது அங்கு இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும், எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. (த-402)

## இலங்கைக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் அரசும், எதிர்க்கட்சிகளும் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றன. இந்நிலையில், இலங்கைக்கு எதிராகப் பிரேரணை வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அது விடயத்தில் இந்தியா எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும் என்பது தொடர்பிலும் அரசியல் களத்தில் சூடான வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு இலங்கை விடயத்தில் டில்லியின் நிலைப்பாடு தொடர்பில் எதிரும் புதிருமாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல விடம் ஜெனிவா விவகாரம், அந்த மாநாட்டின்போது இந்தியாவின் நிலைப்பாடு ஆகியவை தொடர்பில் 'உதயன்' வினவியது.

இதன்போது சர்வதேசத்தின் நடவடிக்கை நாட்டுக்கு எதிரானது அல்ல, அரசின் செயற்பாடுகளுக்கு எதிரானதே என்ற விடயத்தை ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டிய அவர், மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து சர்வதேச சமூகத்துக்கு அரசு உறுதியளித்துள்ளது. அந்த அறிக்கையில் சுயாதீனக் குழுக்கள் நிறுவப்படவேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது. எனவே, பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தால் பரவாயில்லை என்ற இராணுவ விசாரணை அறிக்கையின் பரிந்துரை குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இங்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையே முக்கியம் பெறுகின்றது.

**சர்வதேச விசாரணை தேவை**

அதேவேளை, கடந்த காலங்களில் நாட்டில் நீதித்துறை சுயாதீனமாகவுள்ளது என்று உலக நாடுகளிடம் தெரிவித்து, அந்நிறுவனத்தினூடாக மனித உரிமை மீறல் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு கூறியது. ஆனால், தற்போது நீதித்துறையின் சுயாதீனத்துக்கு என்ன நடந்துள்ளது? எதிர்காலத்தில் சொல்வதற்கு அரசிடம் எதுவுமே இல்லை. செய்வதற்கு வழியில்லாத நிலையிலேயே அது ஜெனிவா மாநாட்டைச் சந்திக்கவுள்ளது.

அத்துடன், அரசு செய்வதாக உலக நாடுகளிடமும் உள்நாட்டிலும் கூறிவந்துள்ள எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஊடக அடக்குமுறை, வெள்ளைவான் கலாசாரம் ஆகியன தொடர்கின்றன.

வெள்ளைவான் கலாசாரம், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அடக்குமுறை, ஊடக அடக்குமுறை, நீதித்துறை, சுயாதீனத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஆகியன குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும்.

குறிப்பாக, தமிழ் மக்கள் மட்டுமல்ல, நாட்டில் தற்போது சிங்கள மக்களும் துன்பங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, இலங்கை மக்களின் நலன் குறித்து இந்தியாவுக்கு அக்கறையிருந்தால் சர்வதேச விசாரணைக்கு இந்தியா ஆதரவளிக்கவேண்டும். நாட்டு மக்களின் நலனுக்காகவே நாம் இந்தக் கோரிக்கையை விடுக்கின்றோம் - என்றார். (த-சி)

## ஜெனிவா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

இந்தத் தகவலை இந்தியாவின் 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார பிரதியமைச்சர் ஜேம்ஸ் மூர், தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளருடனான சந்திப்பில் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

புதிய பிரேரணை நேரிய நோக்கைக் கொண்டது. நேர்மையை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பிரேரணை முன்னெடுக்கப்படும். நல்லிணக்கப்பாட்டையும், பொறுப்புக்கூறும் பாரிய கடமையையும் மேலும் ஊக்குவிக்குமாறு 2012 ஆம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையை வலியுறுத்தியது. அந்தத் தீர்மானத்தை மூலாதாரமாகக் கொண்டே புதிய பிரேரணை உருவாக்கப்பட்டுள்ளது.

**மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்**

இலங்கை அரசு தனது மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகள், கடமைப்பாடு ஆகியவற்றை நிறைவேற்றவேண்டும். அத்துடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தவேண்டும். புதிய பிரேரணை இவற்றை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடுக்கின்றது.

கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட இத்தகைய பிரேரணைக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை அளித்தது. அவ்வழியில் அனைத்து இதர நாடுகளும் தம் ஆதரவை அளிக்கத் தயங்கவில்லை; பின்வாங்கவில்லை. தற்போதைய பிரேரணைக்கும் இந்த ஆதரவு நீடிக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

நாங்கள் இந்த இரண்டாவது பிரேரணையைக் கொண்டுவருவதற்குக் காரணமுண்டு. 2012 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு நாங்களும், மனித உரிமைகள் பேரவையின் 23 உறுப்பினர்களும் இணைந்து ஆதரவு அளித்துள்ளோம். இலங்கை அரசு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு மூலமாகத் தனது மக்களுக்கு அளித்துள்ள கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டுமென நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக எதிர்பார்க்கிறோம்.

**புதிய பிரேரணை எங்கள் ஆதரவின் பிரதிபலிப்பே**

இதை இலங்கை அரசுக்கு மேலும் வலியுறுத்தவே இந்த இரண்டாவது பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

இலங்கை அரசு தனது வாக்குறுதிகளையும் கடப்பாடுகளையும் முன்னெடுக்க எங்களின் ஆதரவு உண்டு. புதிய பிரேரணை எங்களின் ஆதரவையே பிரதிபலிக்கிறது. இந்த ஆதரவு நீடிக்கும். இந்த முக்கிய விவகாரங்களுக்கு இலங்கை மக்கள் தொடர்ந்தும் முகம்கொடுத்தே வருகிறார்கள்.

இவ்வாறு ஊடகவியலாளர் சந்திப்பின் அமெரிக்க வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஜேம்ஸ் மூர் அமெரிக்காவின் நிலைப்பாட்டை விவரித்தார் - என்று 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது. (த-சி)

## வவுனியாவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

மணியளவில் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சாஸ்திரிகூழாங்குளத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் ரமேஸ் (வயது-32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மரக்காரம்பளைப் பிரதேசத்தில் ஓட்டோ சாரதி ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் வவுனியா பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரு ஓட்டோ சாரதிகளை கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

## நட்டாற்றில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

நம்பிக்கை நிதியத்தைத் திறந்து வைத்தார்.

அதன் பின்னர் வவுனியா மனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு கேப்பாபிலவு சூரியபுரம் காட்டுப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் நிலைமைகளைப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் நேரில் பார்வையிட்டார்.

அங்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளை அவர் நேரில் கேட்டறிந்தார்.

அதன்போது தமது மனக்குமுறல்களை மக்கள் அமைச்சரிடம் வெளிட்டனர்.

எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படாமல் நாங்கள் இங்கு கொண்டு வரப்பட்டுத் தவிர்க்க விடப்பட்டுள்ளோம். அன்றாட வாழ்க்கையை நகர்த்துவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. போக்குவரத்து, கல்வி, சுகாதார வசதிகள் இல்லாமல் பெண்களும், சிறுவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எமது நிலையை எவரும் கவனிப்பதில்லை என அந்த மக்கள் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சரிடம் தமது மனக்குறைகளை எடுத்துக் கூறினார்கள்.

மக்களின் கருத்துக்களைக் கவனமாகச் செவிமடுத்த அமைச்சர் அங்குள்ள நிலைமைகளையும் உன்னிப்பாக அவதானித்தார்.

அமைச்சர் கேப்பாபிலவுக்குப் பயணம் செய்த வேளை அந்தப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான படைப்புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## நாம் கெஞ்சிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

யைக் காரணம் காட்டி அந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை.

ஆனால் படையினர் வசமுள்ள மக்கள் காணிகளில் விவசாய நடவடிக்கை, 'யோக்கட்' உற்பத்தி தொழிற்சாலை எனப் பலவற்றைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லையில் தொண்டமானாறு தொடங்கி கட்டுவன், ஒட்டகப்புலம், காங்கேசன்துறை வரையில் படையினர் நிரந்தரப் பாதுகாப்பு வேலியை அமைத்துள்ளனர்.

இந்த நிரந்தர பாதுகாப்பு வேலியின் உள்ளே மண் அணை காணப்பட்டது. இந்த மண் அணையை 'புல்டோசர்' மூலம் இடித்து தரைமட்டமாக்கி வருகின்றனர். இதன்போது இதனுள் அகப்படும் வீடுகளும் இடித்தழிக்கப்படுகின்றன.

கட்டுவன் பகுதியில் நேற்றுப் படையினர் வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் அதன் போது இரண்டு வீட்டு உரிமையாளர்கள் அந்த இடத்துக்குச் சென்று தமது வீடுகளை இடிக்க வேண்டாம் என்று படையினரிடம் கெஞ்சிய போதும் மேலிடத்து உத்தரவு எனத் தெரிவித்து வீட்டு உரிமையாளர்கள் முன்பாகவே அவர்களின் வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன.

சம்பவ இடத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோர் நேரடியாகச் சென்றனர். இதன் போது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் படையினரின் அடாவடித் தனமான செயற்பாடுகள் குறித்து அழுது அழுது முறைப்பாடு செய்தனர்.

மக்களின் முறைப்பாடு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் படை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தினார். அத்துடன் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குச் சென்று பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனனுடனும் கலந்துரையாடினார். இது தொடர்பாக அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்தார். (த-5)

## சிங்கள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில், தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்கள மீனவர்கள்அத்துமீறிச் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கொக்கிளாய், நாயாற்றுப் பகுதிகளில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த சிங்கள மீனவர்களுக்கு மேலதிகமாகச் சட்டவிரோதமாக மேலும் பல சிங்கள மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களின் குடும்பங்கள் அந்தப் பகுதியிலேயே நிரந்தர வீடுகளை அமைத்து தங்குகின்றனர்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாத்தளன் பகுதிக்கு திடீரென 3 லொறிகளில் 5 மீன் பிடிப் படகுகளுடன் சிங்களக் குடும்பங்கள் வந்திறங்கின.

தாம் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் அந்தப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து அவர்கள் அங்கு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சித்தனர்.

இதற்கு அந்தப் பகுதி மக்களுடன் மீனவர் சமாசங்களின் பிரதிநிதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். சிங்கள மீனவர்களை கடலில் இறங்குவதற்கும் அந்தப் பகுதி மக்கள் அனுமதிக்கவில்லை.

எதிர்வரும் 8 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் முல்லைத்தீவுக்கு வரும் போது இந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடி தீர்வை எட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய சிங்களக் குடும்பங்கள் கொண்டு வந்த படகுகள் பாதுகாப்பாக இரணைப்பாலை என்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் சிங்கள மக்கள் படையினரின் பாதுகாப்புடன் தமக்கு முன்னர் காணிகள் இருந்ததாகச் சொல்லப்படும் இடத்தில் வாடிகளை அமைத்துள்ளனர். ஆயினும் அவர்கள் கடலில் தொழிலுக்கு இறங்குவதற்கு அந்தப் பகுதி மீனவர்கள் அனுமதிக்கவில்லை. (த-5)

## இந்தியாவின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

நாட்டின் ஆதரவை இந்த விடயம் தொடர்பில் பெறுவதற்காக இராஜதந்திர மட்டத்தில் காய் நகர்த்தப்படும் என்று இலங்கை அரசு நேற்று அறிவித்தது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் முடிவடைந்ததிலிருந்து போரால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்காக - சேதங்களை சரி செய்வதற்காக இலங்கை நேர்மையாக மனச்சாட்சியுடன் செயற்படுகின்றது.

அந்த நல்ல நோக்கத்தில்தான் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது. எந்தவொரு நாட்டினதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து நாம் இதை அமைக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூன்று கட்டங்களாக நடை முறைப்படுத்தப்படுகின்றன. தற்போது நடை முறையில் இருப்பது இடைக்கால பரிந்துரைகள் அடுத்த நீண்டகாலத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**பிரபாகரனின் ஆதரவுக் குழுக்கள்**

நாம் எதைச் செய்தாலும் குறை கூறுவதற்கென்று சர்வதேசத்தில் பிரபாகரனின் ஆதரவுக் குழுக்கள் செயற்படுகின்றன. பிரபாகரன் உயிரிழந்தமையைத் தாங்கிக்கொள்ள முடியாத இந்தக் குழுக்கள் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றன. நாம் எல்லா வகையான சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிகண்டு வருகிறோம்.

இலங்கை மீது குற்றஞ்சாட்டி ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதையும் நாம் எதிர்கொள்வோம்.

இந்தப் பிரேரணை தொடர்பில் இந்தியா எமக்கு ஆதரவாகச் செயற்படும் என்று நாம் நம்புகிறோம். அந்நாடு பல சந்தர்ப்பங்களில் எமக்கு உதவியிருக்கின்றது.

ஜெனிவா பிரேரணை விடயத்திலும் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக நாம் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்களை நடத்துவோம்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் எழும் எந்தவொரு சவாலையும் நாம் முறியடிப்போம். நாம் மனச்சாட்சியுடன் செயற்படுகிறோம். மறைவான நிகழ்ச்சித் திட்டங்கள் எவையும் எம்மிடம் இல்லை. - என்றார். (த-சி)

## இலவச ஆன்மிக வகுப்புக்கள்

ஆன்மிகம், மதம் என்பன பொதுவாக புரிவதற்கு கடினமானவை. இக்காலத்தில் இவை மிகவும் குழப்பமான நிலையை அடைந்துள்ளன. வாழ்வியல், வெற்றி எனக் கருதப்படும் கல்விகளில் திறமைச்சித்தி, மதிப்பிற்குரிய தொழில் வாய்ப்பு, பொருள்வளமுள்ள அமைதியான குடும்ப வாழ்க்கை போன்றவற்றை அடைவது ஒரு சவாலாகவே சமுதாயத்தில் இருக்கின்றது. ஆன்மிக அறிவைப் பெறுவதன் மூலம் உலகியல் வெற்றிகள் மாத்திரமல்ல மனஅமைதி, மனமகிழ்ச்சி போன்றவற்றுடன் இறை அருளையும் பெறமுடியும்.

இன்று உலகில் மன அமைதியை எங்குமே கானமுடியவில்லை. மிகச் சரியான இந்த ஆன்மிக அறிவானது பொன்னாலை வரதராஜப் பெருமாள் வீதிக்கு அருகில் புதிதாக அமைந்துள்ள தியான மண்டபத்தில் முற்றிலும் இலவசமான மூன்று, நான்கு வகுப்புக்களில் கற்பிக்கப்படவுள்ளது. ஆர்வமுள்ளோர் இவ் வகுப்பில் கலந்து ஆன்மிக அறிவைப் பெற்று பேரமைதி பெறுவீர்களாக!

இடம்- வரதராஜப் பெருமாள் ஆலய வீதிக்கு அருகில், உள்ள தியான மண்டபம், பொன்னாலை.

காலை- 3.2.2013 ஞாயிற்றுக்கிழமை

நேரம்- 10.00 (1.15 மணி நேர வகுப்புக்கள்)

Dr. கண்ணா
சித்தன்கேணி,
0776028734

# பட்டதாரிகளுக்கு நியமனம்

## டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் வேண்டுகோள்

அம்பாறை,பெப்.1

நாடு முழுவதும் பயிலுநர் பட்டதாரிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அனைவருக்கும் காலம் கடத்தாது நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

சங்கத்தின் சார்பில் செயலர் எம்.ஹுசைன் முபாறக் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதா வது:-

பட்டம் பெற்று பல வரு டங்கள் காத்திருந்த பட்ட தாரிகள் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட் டுள்ளனர். அது ஓரளவு நிம்மதியைப் பட்டதாரி களுக்கு அளித்துள்ளது.

எனினும் பட்டதாரிகள் அனுபவித்துக் கொண்டிருக் கும் துன்ப, துயரங்களைக் கவனத்தில்கொண்டு நிரந் தர நியமன விடயத்தில் அரசு நட வடிக்கை எடுக்க வேண் டும்.

குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, அம் பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இலங்கை உயர் தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவகங்களில் 4 வருடங்களுக்குக் குறையாத கல்வி யைப் பூர்த்தி செய்த பட்ட தாரிகளின் நிரந்தர நியமனங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

அவர்களது விடயத்தில் அக்கறை எடுத்து நியமனம் வழங்க வேண்டும்.

எனவே உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும்.-என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-30)

## SPOKEN ENGLISH

### யாருக்காக ?

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

**3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-02.02.2013**

1) காலை 8.00 10.00 2) மு.ப 10.00 12.00
3) பி.ப 1.00 3.00 4) மாலை 3.00 5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாதமுடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்

SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL.0776214567

## மரண அறிவித்தல்கள்

### துரைசிங்கம் இராசம்மா

மடத்தடி கிழக்கு ஒழுங்கை, சாவச்சேரியை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் இராசம்மா நேற்று (31/01/2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், கலாநிதி, தாயாநிதி(சுவிஸ்), கோகுலநிதி ஆகியோரின் பாசமிகு தாயும், பராசசிங்கம் (கணேசா காட்வெயர்), சிறிதரன்(சுவிஸ்) இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் யோகலிங்கம், கனகலிங்கம், இரத்தினம், திலகவதி ஆகியோரின் சகோதரியும், மனோன்மணி, சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், சங்கீர்த்தனா, சங்கவி, ஸ்ரீகீதன்(சுவிஸ்) நிலக்சி (சுவிஸ்), கஜனி,சுயானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01/02/2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி கிழக்கு ஒழுங்கை,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்

### இராசதுரை யோர்ஜ் எட்மன்(எட்மன்)



சரவணையை பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை யோர்ஜ் எட்மன் நேற்று (31.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ராகினியின் அன்புக் கணவரும், இராசதுரை காலஞ்சென்ற லூர்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிலேந்திரன் மற்றும் திரேசா தம்பதியரின் அன்பு மருமகனும் ரஜனி(இத்தாலி), டயானா, பிரபா (இத்தாலி), பிரசாத் (பிரான்ஸ்), குயினா ஆகியோரின் அன்புத் தந்தையும், றூபினா (இத்தாலி), றொபேட்(ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியம் (இத்தாலி), வனஜா(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், அனிஸ்ரன (இத்தாலி), கண்ணன் ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜடா, யூடா, வண்ணக்கிளி, காலஞ் சென்றவர்களான பாபு, தனநாயகம் மற்றும் சோக்கன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வு நாளை (02.02.2013) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நாரந்தனை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
0773606213,
0774179389

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை. (29016)(3)

# காலநிலை சீரானதையடுத்து அம்பாறையில் நெல் அறுவடை

அம்பாறை,பெப்.1

அம்பாறை மாவட்டத் தில் நெல் அறுவடை ஆரம்ப மாகியுள்ளது. இந்த மாவட்டத்திலுள்ள சுமார் 164,500 ஏக்கர் காணிகளில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

சீரற்ற கால நிலையில் நெற்பயிர்கள் சேதத்துக்குள்ளான போதும், சீரான கால நிலை தற்போது காணப்படுவதால் அறுவடை வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள கொச்சிக்காய்ச் சேனை வயல் கண்டத்தில் நெல் அறுவடை இயந்திரத்தின் மூலம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### சின்னட்டி தர்மகுலசிங்கம் (செல்வராசா)

நாவற்காடு வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி தர்மகுலசிங்கம் நேற்று முன்தினம் (30.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், தர்மசீலன், சுசிதா, ரசிதா, நியூசீலன், யசீலன் ஆகியோரின் தந்தையும், யாழினி, ரகுரஞ்சன், மோகனராஜ் ஆகியோரின் மாமனும், சயந்தன், மேந்துலா, அஞ்சனன், ஜான்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிள்ளையார் கோவில் வீதி, அம்பன் குடத்தனை எனும் முகவரியிலுள்ள அவரது சகோதரர் சி.சுந்தரலிங்கத்தின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவில் வீதி,
அம்பன் குடத்தனை.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1949.12.05
மறைவு 2013.01.03

அமரர்
**சிவஞானம் மகேந்திரநாத்**

கடந்த 03.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சிவஞானம் மகேந்திரநாத் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (01.02.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 8 மணிக்கு கீரிமலைத் தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை 02.02.2013 சனிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பூரணவாசா
அராலி வடக்கு
வட்டுக்கோட்டை

தகவல்
குடும்பத்தினர்
021 4921820



I, Priyengah Sivarajah followed lectures at MCS leading to successful completion of Bachelor of Information Technology (BIT) conducted by University of Colombo School of Computing. It is the guidance of the panel of Lecturers that enabled me to obtain this prestigious Degree of BIT. I take this opportunity to thank the Director and Lecturers for their unstinted help and guidance that led to my success.

# After A/L??

**BIT-Degree**
University of Colombo
தகைமை~ A/L மூன்று பாட சித்தி அல்லது கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் FIT

**CIMA-UK**
successful pass history!
Approved Training centre
Qualified Lecture Panel




Our Lecturers are really excellent to deal with the subjects in clear & simple. We really enjoyed during my class time because of our lecturers they were very keen with us. They have focused on every individual students. We thank MCS & Lecturers to covered full syllabus on time. CIMA OPERATIONAL LEVEL STUDENTS

324, Palay Road, Jaffna. For details 772 395 895 **MCS IT CAMPUS** SMS <name>_<course> to 772 395 895

## முதலாம் ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுதின அழைப்பும்

### அமரர் ஐயாக்குட்டி கனகரத்தினம்



கடந்த 13/02/2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் ஐயாக்குட்டி கனகரத்தினம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின சாந்திப்பிரார்த்தனை இன்று (01/02/2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

காந்திஜீ வீதி,
கொக்குவில்மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(29017)(11.6)


## பொலிஸ் பரிசோதனை

காத்தான்குடி பொலிஸாரின் பரிசோதனை மஞ்சந்தொடுவாய் மைதானத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் அஜந்த சமரகோன் பொலிஸ் பரிசோதனையை மேற்கொண்டார்.

பொலிஸாரின் அணி வகுப்பு மற்றும் பொலிஸ் சீருடை, உட்பட பல விடயங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. பரிசோதனையில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச)


## உடனடி வேலைவாய்ப்பு



* ஓப்செற் (Off Set)
* வெப் ஓப்செற்
(web offset Printing Machine)

அச்சியந்திரங்களில் பணியாற்றுவதற்கு இளமையும், சுறுசுறுப்பும் உள்ள இளைஞர்கள் தேவை.

* இரவு, பகல் கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
* தகுதியுடையவர்கள் இன்று (01.02.2013) வெள்ளிக்கிழமை நேரில் சமுகம் தரவும்.
* பயிற்சிக் காலத்தில் 12000/=
* தங்குமிட வசதி செய்து தரப்படும்.



இல.12, சிவகுருநாதர் லேன்,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### நல்லையா சீவரத்தினம்



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சீவரத்தினம் நேற்று (31.01.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான நல்லையா -இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர் களான ஐயாத்துரை- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், ஜீவராஜ் (லண்டன்), ஜீவரேகா (லண்டன்), சசிகரன் (கனடா), சசிரேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரசேகர் (லண்டன்), சுமணா (லண் டன்), கீதா (கனடா), குமரேந்திரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி சரஸ்வதி குமாரசாமி, காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம், இராசரட்ணம் மற்றும் திருமதி கனகமணி நடராசன், திரு கனகரத்தினம், திருமதி செல்வமணி இராசரட்ணம், காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பவளரட்ணம் வேலுப்பிள்ளை, திருநாவுக்கரசு மற்றும் சண்முகநாதன், ஆனந்தசுந்தரம், திருமதி நாகபூரணி இரத்தினம், திருமதி நகுலேஸ்வரி சின்னத்துரை, நடேசமூர்த்தி, திருமதி சிவகாமசுந்தரி மனோகரன், திருமதி கெங்காதேவி வேதநாயகம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷன், இந்துஷன், விதுஷன், ஹருஷன், சஞ்சேய், தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2013) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பி.ப 3.00 மணிக்கு அவரது பூதவுடல் சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0771051072, 077174931

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆருயிர் நண்பர்களான ஜீவன் (லண்டன்), சசி (கனடா)
ஆகியோரின் ஆருயிர்த் தந்தை



## நல்லையா சீவரத்தினம்
### (கட்டைக்கனகு)
### அவர்கள்

உதயத்தின் அஸ்தமனம்
உண்மைதானென்று
ஊமையாய் சொல்கின்றன
விழியெனும் விருட்சங்கள் சொரியும்
கண்ணீர் புஸ்பங்கள்
கண்ணீரில் கரைந்தாலும்
கலையாத நினைவுகளுடன்
ஆறாத்துயர்கொண்டு அழுது
புலம்புகின்றோம்
ஆனாலும் உம் ஆன்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டிநிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணேசலிங்கம் (London)

(29021)(14.6)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## விடாப்பிடியாக நிற்கும் நிலைப்பாடு எதிர்பார்க்கும் பெறுபேற்றைத் தருமா?

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிராக மேலுமொரு தீர்மானம் கொண்டுவரப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ள சூழமைவில், இலங்கை அரசு அதனை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே தொக்கி நிற்கிறது.

கடந்த ஆண்டு ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை போதுமான அக்கறை செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே பல தடவைகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றின் விளைவுதான் தற்பொழுது இலங்கை எதிர்நோக்க நேர்ந்துள்ள அமெரிக்காவின் இரண்டாவது தீர்மானம்.

கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தின் பரிந்துரைகளை உடனடியாகச் செயற்படுத்துவது சாத்தியமற்றது என்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ். அதேவேளை ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானத்துக்கு மேல் தீர்மானம் கொண்டுவந்து பிரச்சினையைக் கையாள்வது சரியான அணுகுமுறை அல்ல என்றும் பீரிஸ் விசனம் தெரிவித்துள்ளார்; விமர்சனம் செய்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள இரண்டாவது தீர்மானம் குறித்து இலங்கை வந்த அமெரிக்க உயர்மட்டக் குழுவினர் வெளிப்படையாக அறிவிக்க முன்னரே அதுகுறித்து இலங்கையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதாக அமெரிக்கத் தரப்பு சுட்டிக்காட்டுகிறது. ஆனால், அமெரிக்காவின் முன்னைய தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் தன்னால் இயன்றதைத்தான் செய்யமுடியும் என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசு விடாப்பிடியாகப் பற்றிப்பிடித்துக்கொண்டிருப்பதாகக் கருத முடிகிறது.

அமெரிக்காவும், ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த அதன் நட்பு நாடுகளும் தீர்மானத்தின் பரிந்துரைகளில் எவற்றை முக்கியமானவைகளெனக் கருதுகின்றனவோ, அவற்றை இலங்கை அரசு முற்று முழுதாகப் புறந்தள்ளி விட்டுள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தி குறித்தோ, கட்டுமானப் பணிகள் குறித்தோ, மீள்குடியேற்றம் குறித்தோ அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் அத்தீர்மானத்தில் முக்கியத்துவம் வழங்கியிருக்கவில்லை. 30 ஆண்டுகால போருக்குக் காரணமான இனப்பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான தீர்வு மற்றும் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறுதல் ஆகியவையே இந்த நாடுகளால் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

இவற்றுள் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி, ஓர் அங்குலம் தானும் முன்னகர்ந்ததாக கூற இயலாது. கடந்த டிசெம்பர் 4 ஆம் திகதி சந்திப்பொன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியதுடன் அவ்விடயம் அடங்கிப்போய்விட்டது. அதன் பின்னர் எதுவும் உருப்படியாக நடந்ததாய் இல்லை.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பான சர்ச்சை உட்பட, ஏனைய சகல பிரச்சினைகளுக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே தீர்வு என்கிறது இலங்கை அரசு. இது விடயத்தில் தனது பிடிவாதத்தைத் தளர்த்த அரசு தயாராக இல்லை. அதுபோன்றதே பொறுப்புக்கூறும் விடயமும். அரசபடையினர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசின் படைத்தரப்பினரை உள்ளடக்கி ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் குழு, தனது அறிக்கையை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளது.

இறுதிப் போர்வேளையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு இலங்கை பொறுப்புக் கூறவேண்டும் என்ற கோரிக்கையை முறையற்ற இந்த விசாரணைக் குழு நியமனம் பூர்த்தி செய்யப்போவதில்லை. சர்வதேசமும் கூட இக்குழு நியமனத்தில் திருப்தி காட்டியதில்லை. அமெரிக்க செனட்டர்கள் இருவர், அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனுக்கு எழுதிய கடிதம் இதனை உறுதிசெய்கிறது. போர்க்குற்றம் குறித்து காத்திரமான சர்வதேச விசாரணை மேற்கொள்ள ஆவனசெய்யவேண்டும் என்று அந்த அமெரிக்க செனட்டர்கள் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ.நா.சபை பொதுச்செயலாளர் பான் கீ-மூன் நியமித்த ஐ.நா. நிபுணர் குழு, போரின் இறுதி நாள்களில் நாற்பதாயிரம் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர் என்று தெரிவித்திருந்தது. அதன் பின்னர் பான் கீ-மூனால் நியமிக்கப்பட்ட உள்ளக விசாரணைக் குழுவும் கூட தனது அறிக்கையில், இறுதிப் போர் வேளையில் வன்னியில் கடமையாற்றிய ஐ.நா. குழுவினர் வெளியேறி இருக்காவிட்டால், பொதுமக்கள் இந்த அளவு பெருந்தொகையாகக் கொல்லப்பட்டதைத் தவிர்த்திருக்கலாம் என்று தெரிவித்திருந்தது.

இந்த இரண்டு அறிக்கைகளுமே இறுதிப் போர் வேளையில் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டதை உறுதி செய்கின்றன. இதன் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுவருகிறது.

தான் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு, ஐ.நா. உறுப்புநாடுகளின் ஆதரவைத் திரட்டி அமெரிக்கா முன்வைக்கவுள்ள புதிய தீர்மானத்தைத் தோற்கடிப்பதே என்று இலங்கை நம்புகிறது. கடந்த மார்ச் மாதம் தன்னால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு தனக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகளின் ஆதரவை மீண்டும் திரட்ட அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேசமயம் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு எதிராக, தனக்கு ஆதரவாக வாக்களித்த சில நாடுகளின் பதவிக்காலம் தற்போது முடிவடைந்துள்ள போதிலும் புதிதாக உறுப்புரிமை பெற்ற நாடுகளின் ஆதரவைத் தன்பக்கம் திரட்டுவதில் இலங்கை கூடுதல் கவனம் செலுத்திவருகிறது.

அதுமட்டுமன்றி, பிரபல்யம் வாய்ந்த சர்வதேச பொதுஜன தொடர்பு முகவர் தரப்புக்களை கோடிக்கணக்கான ரூபா செலவில் அமர்த்தி இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் புதிய தீர்மானத்தைத் தோற்கடிக்க இலங்கை அரசு திட்டமிட்டுச் செயற்படுவதாகவும் செய்திகள் வெளியாகி வருகின்றன. எனவேஎதிர்வரும், 22 ஆவது ஜெனிவாக் கூட்டத்தொடரும் அமெரிக்காவின் புதிய தீர்மானத்தால் இம்முறை களைகட்டப் போகிறது.

கடந்த தடவை போன்றே இம்முறையும் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தான் தயார் என்று இலங்கை அரசு கூறிவருகிறது. பலம் பொருந்திய நாடான அமெரிக்கா,

இலங்கை மீதான தனது புதிய தீர்மானத்தை நிறைவேற்றுவதில் மீண்டும் வெற்றிபெறுமானால், பொருளாதாரத் தடை உட்பட சில கடுமையான கட்டுப்பாடுகளை இலங்கை மீது விதிக்க அது வழி ஏற்படுத்திவிடும் அபாயம் உண்டு. இலங்கை அரசு இன்றைய நிலையிலும் அதனை உணர்ந்து கொள்ளத் தயாராக இல்லை.

மொத்தத்தில், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் தான் என்று செயற்பட முனைவது தனக்குப் பாதகமாகலாம் என்ற நிலையை இப்போதைய கட்டத்திலாவது அரசு உணர்ந்துகொள்ளக்கூடாதா?

# 40 வீத தனியார் நிறுவனங்களில் மொழி உரிமை பேணப்படவில்லை

### அண்மைய ஆய்வில் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.1

40 வீதமான தனியார் நிறுவனங்களில் மொழி உரிமைகள் பேணப்படுவதில்லை என குழுக்கள் ரீதியாக பெறப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளின் போது கண்டறியப்பட்டுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

மக்களின் மொழி உரிமைகள் மீறப்படுபவை தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட குழுக்கள் ரீதியான ஆய்வு நடவடிக்கைகளின் போது 60 வீதமாக தனியார் நிறுவனங்களிலேயே மொழி உரிமைகள் பேணப்பட்டு வருகின்றன எனவும் ஏனைய 40 வீதமான தனியார் நிறுவனங்களில் மொழி உரிமைகள் பேணப்படுவதில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அரச கரும மொழிகளாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் பயன்படுத்த வேண்டியுள்ளதுடன் இது மக்களின் மொழி உரிமையாகவும் கொள்ளப்படுகிறது.

அடிப்படை உரிமைகளாக மொழியை மக்கள் கொண்டுள்ளதால் தனியார் நிறுவனங்களிலும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் மொழிச் சங்க உறுப்பினர் குழுக்கள் ரீதியாக பெறப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் தனியார் நிறுவனங்களில் மொழி உரிமை மீறப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் வாழும் பிரதேசங்களில் தமிழ் தெரியாத உத்தியோகத்தர்கள் தலைமைப் பதவிகளில் இருப்பதுடன் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமிழர்களாக இருப்பதால் சிங்கள மொழியைப் புரிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது.

இதனால் தொழில் ரீதியாக முன்னேற்றம் காணமுடியாமல் ஆளுமைகள் மழுங்கடிக்கப்படுவதாகவும் தமிழர்கள் உயர்ந்த பதவிகளை வகிக்க முடியாதவர்களாகவும், தாழ்ந்த மனப்பான்மையுடன் தொழில் புரிய வேண்டிய நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

மொழிச் சங்க உறுப்பினர்களால் பெறப்பட்ட இந்தத் தகவல்களுக்கு அமைவாக மொழி உரிமை மீறப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களுக்கு எதிராக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகச் சொல்லப்பட்டது. (த-17)

# அளவுக்கதிகமான பணியாளர்; அரச நிறுவனங்கள் சிக்கலில்

கொழும்பு,பெப்.1

தேவையைக் கவனத்தில் கொள்ளாமல் அனுமதிக்கப்பட்ட அலுவலக ஊழியர்களுக்கு மேலதிகமாக ஆள்களைச் சேர்த்துக் கொள்வதன் காரணமாக அரச நிறுவனங்களில் மிகப் பெரிய நிர்வாகச் செலவினங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றச் செயற்குழு (''கோப்'') அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை, தோட்ட அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்கள் தமது வருமானத்தில் 60 வீதத்துக்கும் மேற்பட்ட தொகையை பணியாளர்களின் சம்பளங்களாக வழங்குவதற்குப் பயன்படுத்துவதாக 'கோப்' குழு சுட்டிக்காட்டியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவிக்கிறது.

இதனிடையே, அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தில் குறைவான நிபுணத்துவம், நீண்டகாலம் பணியாற்றியிருத்தல் அல்லது ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுதல் போன்ற காரணங்களால் பயன்பெறும் மட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளதாக நிதி அமைச்சு அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

சில நிறுவனங்களில் நீண்ட காலமாகவே சிரேஷ்ட மட்டத்திலான பதவி வெற்றிடங்கள் நிலவினாலும் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பதும் 'கோப்' குழுவின் கவனத்துக்கு வந்துள்ளதாகக் கூறப்பட்டது.

(த-22)

## மானிய மண்ணெண்ணெய் இதுவரை கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.1

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சமுர்த்தி பயனாளிகளுக்கான மானிய மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் இதுவரை முத்திரைக்குரிய மானிய மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாமையால் சமுர்த்திப் பயனாளிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முத்திரைக்குரிய மண்ணெண்ணெயைப் பெறுவதற்குத் தினமும் பயனாளிகள் கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

ஆயினும் மண்ணெண்ணெய் விநியோகத்துக்கான அனுமதி சங்கங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## கடல் ஆழமாக்கலில் அகழப்படும் மண் தாழ்ந்த பகுதிக்கு

பாஷையூர் கடற்பகுதியில் இருந்து அகற்றப்படும் சேற்று மண் அந்தப் பிரதேசத்தின் தாழ்ந்த இடங்களில் கொட்டப்பட்டு வருகின்றது.

பாஷையூர் இறங்குதுறையை ஆழப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது அகற்றப்படும் சேற்று மண் கடற்கரைப் பகுதியில் தாழ்ந்த இடங்களில் கொட்டப்படுகின்றன.கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இந்த கடல் ஆழப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (த-17)

# பன்றித்தலைச்சி அம்மன் உற்சவம்; விழாக்கால ஏற்பாடுகள் ஆராய்வு

தென்மராட்சி,பெப்.1

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் கு.தர்சினி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், தென்மராட்சி கல்வி வலயத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர், இலங்கை முதலுதவிச் சங்கத்தினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், கிராம அலுவலர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர், ஆலயத்துக்கு அருகில் உள்ள அம்பாள் மற்றும் கண்ணகை ஆகிய சனசமூக நிலையப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய தர்மகர்த்தா, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மார்ச் 18, 25, ஏப்ரல் 1, 8 ஆகிய திகதிகளில் நடைபெறும் உற்சவ தினங்களில் சுத்திகரிப்பு, குடிதண்ணீர் வசதிகளை பிரதேச சபையும், சுகாதாரம் மற்றும் உணவு கையாளும் நிலைய பரிசோதனைகள் போன்றவற்றை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் கையாள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்படும் தற்காலிக கடைகள் அனைத்துக்கும் பிரதேச சபையின் தற்காலிக வியாபார உரிமம் பெறப்படல் வேண்டும். ஏனைய பிரதேசங்களிலிருந்து உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் நடமாடும் வாகனங்கள் தமது உற்பத்திகளுக்கு பிரதேச உள்ளூராட்சி சபையில் பெறப்பட்ட வியாபார உரிமச் சான்றிதழின் புகைப்படப் பிரதி வாகனத்தில் பொருத்தி வைத்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் அடியார்களின் நலன் கருதி குன்றும் குழியுமாகக் காணப்படும் கைதடி-நுணாவில் வைரவர் ஆலயத்திலிருந்து மட்டுவில் தெற்கு சந்திரபுரம் முசுறி ஊடாக ஆலய மேற்கு வீதிக்கு வரும் வீதியை உற்சவம் ஆரம்பிக்க முன்னர் திருத்தம் செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் ஆலய மேற்கு வீதியில் உற்சவ தினங்களில் வாகனங்கள் நிறுத்துவது தடைசெய்யப்படுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

(த-9)

# குளத்தில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை மீன்பிடிச் சங்கங்களிடம் வழங்க வேண்டும்

## துணுக்காய் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர் கோரிக்கை

**குளங்களில் மீன்கள் பிடிக்கும் அனுமதியை உள்ளூர் மீன்பிடிச் சங்கங்களுக்கு வழங்காமல் பகிரங்க ஏலத்தின் வாயிலாக வழங்கப்படுமாயின் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பயனடையும் வாய்ப்புக்களே ஏற்படும்.**

அக்கயராயன், பெப்.1

குளங்களில் மீன்களைப் பிடிக்கும் அனுமதியை நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை துணுக்காயில் விடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுடனான கூட்டத்தின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமை வகித்தார்.

குளங்களில் மீன்களைப் பிடிக்கும் அனுமதியை உள்ளூர் மீன்பிடிச் சங்கங்களுக்கு வழங்காமல் பகிரங்க ஏலத்தின் வாயிலாக வழங்கப்படுமாயின் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பயனடையும் வாய்ப்புக்களே ஏற்படும். இதனால் உள்ளூரில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுவரும் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவர்.

மேலும் குளங்களில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதன் காரணமாக உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் எனவும் அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது.

நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு வலைகள், வள்ளங்கள் என்பனவற்றை வழங்குவது தொடர்பாக ஆராயும் பொருட்டே இந்தக் கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-18)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு

# இடமாற்றம் கிடைக்காததால் ஆசிரியர்கள் சிலர் விசனம்

வவுனியா, பெப்.1

வவுனியாவில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிலர் தமக்கு வருடாந்த இடமாற்றம் வழங்கப்படாமை குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

ஐந்து ஆண்டுகள் வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றிய யாழ்.மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் சிலர் இடமாற்றம் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு இதுவரை இடமாற்றக் கடிதங்கள் வந்து சேரவில்லை.

மேலும் வவுனியா மாவட்டத்தில் வலய மட்டத்திலான இடமாற்றங்கள் பலருக்கு வழங்கப்பட்ட போதிலும் மாவட்ட மட்ட இடமாற்றங்கள் வழங்கப்படாத ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தி விரைவில் தமக்குரிய இடமாற்றக் கடிதங்கான வழங்குமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

# கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம் முதியோர் அபிவிருத்திப் பேரவை

## செயலகத்தில் 7 ஆம் திகதி கூட்டம்

கிளிநொச்சி,பெப்.1

கிளிநொச்சி மாவட்டத்தில் முதியோர் நலன்களை மேம்படுத்தும் பொருட்டு 'முதியோர் அபிவிருத்திப் பேரவை' என்னும் அமைப்பு உருவாக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த கிராமங்களில் இயங்கி வரும் முதியோர் சங்கங்களின் தலைவர் மற்றும் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கும் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நலன்புரி சங்கங்களின் தலைவர் , செயலாளர் உட்பட ஐந்து பேரை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர், முதியோர் உரிமை மேம்பாட்டு அலுவலர் ஆகியோரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (க-9)

# முருகானந்தாவில் மெய்வன்மைப் போட்டிகள்

கிளிநொச்சி, பெப்.1

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் தி.வரதன் தலைமையில் ஆரம்பமாகும்.

முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் பொறியியலாளருமாகிய சுந்தரேஸ்வரன் அசோக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.விஷ்ணு கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசகுலசிங்கம், ஊரியான் கிராம அலுவலர் எஸ்.பரமதாஸ், கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஐ.தபேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (க-405)

தென்கொரிய நிதியுதவியுடன் நடைபெறும்

# கிளிநொச்சி பாடசாலைகளின் கட்டுமானங்களை நேரில் பார்வையிட்டனர் யுனிசெப் பிரதிநிதிகள்

**வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு இந்தக் குழுவினர் சென்று அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.**

அக்கராயன்,பெப்.1

கிளிநொச்சி கல்வி வலயத்தில் தென்கொரிய அரசின் உதவியுடன் இடம்பெறும் கட்டுமானங்களை 'யுனிசெப்'பின் பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் கொழும்பு பிரதிநிதியான கதரினா மற்றும் வடமாகாண பிரதிநிதியான செல்வி கார்த்திகாயினி, கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நேயப்பாடசாலைகளின் இணைப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கடந்த 24 ஆம் திகதி அவற்றைப் பார்வையிட்டனர்.

வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு இந்தக் குழுவினர் சென்று அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேலும் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவிலும் இவர்கள் கலந்து கொண்டனர். கட்டுமான வேலைகளையும் இந்தக் குழுவினர் பார்வையிட்டனர்.

பின்னர் முல்லைத்தீவுக்குச் சென்ற இந்தக்குழுவினர் உடையார்கட்டு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் கள்ளப் பாடு அ.த.க. பாடசாலை ஆகிய வற்றுக்குச் சென்று கட்டுமானங் களைப் பார்வையிட்டதுடன் அதிபர்கள், ஆசிரியர்கள் மற் றும் மாணவர்களுடன் கலந் துரையாடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-18)

# உயிலங்குளம்– முறிகண்டி வீதியை புனரமைக்குமாறு வேண்டுகோள்

துணுக்காய், பெப்.1

உயிலங்குளத்திலிருந்து முறிகண்டி செல்லும் வீதியை உடனடியாகப் புனரமைத்து வழங்குமாறு உயிலங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துணுக்காய் உயிலங்குளத்திலிருந்து மணற்குளம் ஊடாக பழைய முறிகண்டி செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதனை உடனடியாகப் புனரமைத்து வழங்குமாறு உயிலங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவர்கள் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

உயிலங்குளம் கிராமத்தில் முன்பள்ளி அமைக்கவேண்டும், உயிலங்குளம் இந்தியன் மாதிரிக் கிராம வீதி புனரமைக்கப்படல் வேண்டும், வீடுகளுக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும், போர்ச் சூழலில் சேதமடைந்த பிள்ளையார் ஆலயம், சனசமூக நிலையம் என்பன புனரமைக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளே பிரதேச செயலரிடம் விடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை உயிலங்குளம் அணைக்கட்டு வழியாக போக்குவரத்து நடைபெறுவதன் காரணமாக அணைக்கட்டு சேதமடைந்து வருவதாக உயிலங்குளம் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் அக்கராயன் ஆரம்ப வித்தி.

அக்கராயன், பெப்.1

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதாகப் பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, இடநெருக்கடி, குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பன முக்கிய குறைபாடுகளாகக் காணப்படுகின்றன. தற்போது இந்தப் பாடசாலை 171 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

தற்போது அக்கராயன் மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் இயங்கி வருகின்றது.

இங்கு பெரும் இட நெருக்கடி நிலவுவதால் மாணவர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாடசாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில் சேவாலங்கா நிறுவனம் கட்டடம் ஒன்றை அமைத்து வருகின்றது. யுனிசெப் நிறுவனத்தால் தற்காலிகக் கொட்டகை ஒன்றும் மலசல கூடமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை யாவும் பூர்த்தியடைந்ததன் பின்னரே பாடசாலை தனது சொந்தக் காணியில் ஓரளவு நெருக்கடியின்றி இயங்க முடியும் எனப் பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இங்கு நிலவும் ஆங்கிலம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாணவர்கள் தற்போது குழாய்க் கிணறு ஒன்றிலிருந்து குடிதண்ணீரைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# முல்லைத்தீவு- துணுக்காய் பஸ்சேவையை ஆரம்பிப்பதில் இன்னும் இழுபறி நிலை

## விசனம் தெரிவிக்கின்றனர் பிரதேச கிராம மக்கள்

துணுக்காய், பெப்.1

முல்லைத்தீவுக்கும் துணுக்காய்க்கும் இடையில் இடம்பெறுவதாக இருந்த அரச பஸ் சேவை ஆரம்பிக்கப்படாது தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து துணுக்காய்க்கு கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த பஸ்சேவை இடம்பெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் அரச பஸ் சேவைகள் இடம்பெறாத நிலையில் முல்லைத்தீவு அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் துணுக்காய்க்கு கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அரச பஸ் சேவை இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் முல்லைத்தீவு- துணுக்காய் பஸ் சேவை இன்று வரை ஆரம்பிக்கப்படாது இழுபறியான நிலையிலேயே உள்ளது.

துணுக்காய்ப் பிரசேதத்தின் கிராமங்களுக்குஇடையிலான போக்குவரத்துக்கள் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. (க-18)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் தரம்-5 இல் கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுடனான சந்திப்பின்போது பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் வருகை தந்த பெற்றோர்களையும் காணலாம். (க-18)

குடும்ப வன்முறைகள், பாலியல் ரீதியாக

# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட ரீதியான ஆலோசனை

## விசேட செயற்றிட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்கும் செயற்றிட்டத்தை மகளிர் அபிவிருத்தி நிலையம் முன்னெடுத்துள்ளது.

குடும்ப வன்முறை மற்றும் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான சட்டரீதியான ஆலோசனைகளை வழங்கி நீதிமன்றில் வழக்குகளை தாக்கல் செய்து வருகிறது.

கடந்த வருடம் இவ்வாறு பாதிக்கப்பட்ட 20 பேருக்கு சட்டரீதியான ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன் வழக்குத் தாக்கல்களையும் செய்துள்ளது.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகமாகக் குடும்பக் கௌரவம் மற்றும் உறவினர்களுக்கிடையிலான பாசப் பிணைப்புக்களால் தமது பிரச்சினைகளை வெளிக் கொணரமுடியாமல் உள ரீதியான பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர். இதனால் குடும்பப் பெண்கள் நோயாளிகளாக மாறுவதுடன் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் வீணாக்கிக் கொள்கிறார்கள்.

இந்த நிலையில் 'பாதிக்கப்பட்ட பெண்களை பிரதேச ரீதியாக இனங்கண்டு அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கும் செயற்றிட்டத்தை மகளிர் அபிவிருத்தி நிலையம் முன்னெடுத்து வருகிறது.

யாழ். மாவட்டத்தில் போர்ச் சூழல் மற்றும் வறுமை, உறவினர்களிடையான கருத்து வேறுபாடு போன்ற காரணங்களால் பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கணவனை இழந்தும், பிரிந்தும் குடும்பத்தை தலைமைத்துவம் தாங்கக் கூடிய பொறுப்புடையவர்களாக இருப்பதால் உளரீதியாகப் பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

இதனை விட பாலியல் ரீதியான வன்முறைச் சம்பவங்கள் தெரிந்தும் தெரியாமலும் உறவினர்களாலும் அறிமுகம் இல்லாதவர்களாலும் நிகழ்த்தப்படுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளாகக் கொள்ளப்படுவதால் இதற்கு உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக தீவகப் பகுதிகளில் விவரங்களை சேகரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாகப் போர்க்காலச் சூழலில் கணவனை இழந்தவர்கள் மற்றும் விபத்து, நோய் போன்ற காரணங்களால் கணவனை இழந்தவர்களின் விவரம் உட்பட காணாமற்போன கணவனை பிரிந்து வாழும் பெண்களின் விவரங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பெண்கள் குழுக்களாக இணைந்து பிரதேச ரீதியாக இத்தகைய செயற்றிட்டங்களை முன் னெடுத்து வருகின்றனர். (வ-14)

## வீடமைப்புக் கடனை செலுத்தாதோர் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

### சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

நவாலி,பெப்.01

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் கடந்த வருடம் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் அதனை இது வரைக்கும் மீளச் செலுத்தவில்லை. இதனால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மேற்படி பிரதேச அதிகார சபை தொழில் நுட்ப உத்தியோகத்தர் க.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் அதனைத் திருப்பிச் செலுத்ததால் 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிலுவையாக உள்ளது. எனவே அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரைக்கும் எவருமே கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. எனவே குறித்த கடனைச் செலுத்தாதோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் அரச ஊழியர்கள் புதிய வீடுகட்டவும் திருத்த வேலைகளை மேற்கொள்ளவும் கடன் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-100)

## வலி. மேற்கில் டெங்கு ஒழிப்புக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

### பிரதேசசபைத் தலைவர் வலியுறுத்து

வலிதென்மேற்கு,பெப்.01

வலிதென்மேற்கு பிரதேசத்தில் நுளம்புகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு பொது அமைப்புகளும் பொது மக்களும் ஒத்துழைப்பு வேண்டும் என்று பிரதேச சபை தலைவர் திருமதி என்.ஐங்கரன் தெரிவித்தார்.

மேலும் உதவின் தேவைப்படும் பட்சத்தில் தம்மாலான உதவிகளை வழங்க தாம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடத்துக்கான முதலாவது தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாக எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் வலிகாமம் மேற்கு பகுதி மக்கள் இதற்கு தங்களாலான பரிபூரண ஒத்துழைப்பை நல்கி உதவு மாறு கேட்டுக்கொள்கின் றேன்.

**ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் டெங்கு நோய் பரவலாக அதிகரித்து வருகின்றது.**

மழையுடன் கூடிய கால நிலை காரணமாக டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதே வேளை ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் டெங்கு நோய் பரவலாக அதிகரித்து வருகின்றமை ஆய்வின் மூலமாக தெரிய வந்துள்ளது.

இதனால் எமது பிரதேச மக்கள் பொது அமைப்புக்கள், பாடசாலைகள், தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் பரிபூரண ஒத்துழைப்பை வழங்கி டெங்கு பெருகும் என எதிர்பார்க்கப்படும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின் றேன்- என்றார். (வ-115)

## பல தடவைகள் தண்டிக்கப்பட்டவர் மீண்டும் கைது

பலதடவை நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் மீண்டும் சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டார்.

நீதிமன்றில் தான் குற்றவாளி என்று தெரிவித்தமையால் சந்தேக நபரை பிணையில் விடுவித்து வழக்கை விளக்கத்துக்கு எடுத்துக் கொண்டது நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் அந்தச் சந்தேக நபர் முன்னிலைப் படுத்தப்பட்டார். காரைநகர், ஊரி, களபூமியைச் சேர்ந்த நபர் ஒருவரே இந்தக் குற்றச் சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டார். இவர் ஏற்கனவே பல குற்றம் புரிந்தமையால் நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் ஆவார்.

அவரை 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (த-4)



கச்சதீவு ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலை கடற்படையினர் துப்புரவு செய்தனர். (வ-7)

## யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் பதிவுச் சான்றிதழ் பெற முடியாதநிலை

### மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களில் உள்ள மேலதிக பதிவாளர் அலுவலகங்களில் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் பெறமுடியாத நிலை உள்ளதாகப் பொது மக்கள் முறைப்பாடுகின்றனர்.

ஏழு பிரதேச செயலக மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் அனைத்துப் பிரதேசங்களின் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கணினியின் மூலம் பெறலாம் என்று யாழ். செயலக பதிவாளர் அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஏழு பிரதேச செயலகத்தில் மற்றொரு பிரதேசத்தின் சான்றிதழின் பிரதிக்கு விண்ணப்பித்தால் அந்தப் பிரதேசத்தின் பதிவுகள் இன்னமும் இணைக்கப் படவில்லை என கூறப்படுகின்றது.

சில பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் தெளிவற்ற முறையில் வழங்கப்படுகின்றன எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இதனால் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதற்கு அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது எனவும் மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச செயலகங்களில் காணப்படும் பட்டயக் கூறில் சான்றிதழ் குறிப்பிட்ட நேரத்தில் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் மூன்று தினங்களின் பின்னர் வீட்டு முகவரிக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலதிக பதிவாளர் நாயகம் நா.சதா சிவஐயருடன் தொடர்பு கொண்டபோது-

மருதங்கேணி, காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் பதிவுகளை கணினி மயப்படுத்தப்படுவது பூரணப்படுத்தப்படவில்லை.

அதனால் ஏனைய பிரதேச பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மேற்குறித்த நான்கு பிரதேச பகுதிகளிலும் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை பெறமுடியாது.

குறித்த நான்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களோ ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களோ நாட்டின் எந்தப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தமது பிறப்பு, இறப்பு உள்ளிட்ட ஆவணங்களைப் பெறமுடியும். உரிய அதிகாரிகள் அதனை வழங்க வேண்டும்- என்று தெரிவித்தார். (வ-4-9)

## ஆதனவரி செலுத்துவதற்கான கால எல்லை நீடிப்பு

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இந்த வருடத்துக்குரிய ஆதனவரி செலுத்துவதற்கான கால எல்லை பெப்ரவரி 28 ஆம் திகதிவரை நீடித்திருப்பதாக நகரசபைத் தலைவர் கி.தேவச காயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

10 வீதக் கழிவுடன் ஆதனவரி செலுத்துவதற்கான இறுதி நாள் நேற்று என்பதால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆதனவரி செலுத்துவதற்கு சென்றிருந்தனர் .

வழமையாக மக்களுக்கு ஏற்படும் இடர்களைத் தவிர்க்க ஆதனவரி செலுத்த வரும் வரியிறுப்பாளர்களின் நலன் கருதி நீடிப்பு வழங்கியிருப்பது குறித்து வரியிறுப்பாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (வ-9)

## மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு 165 மில்.

### இவ்வருட ஆரம்பப்பணிகளுக்காக

யாழ்ப்பாணம், பெப்.1

மீளெழுச்சித் (புறநெகும) திட்டத்தில் இந்த வருட ஆரம்ப வேலைத்திட்டங்களுக்காக யாழ். மாவட்டத்துக்கு 165 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக புறநெகும திட்டத்தின் யாழ். மாவட்ட எந்திரி எஸ்.றெஜிலதரன் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகளுக்கு ஆரம்ப வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச சபைக்கு கலாசார மண்டபமும், சிறுவர் உள்ளக விளையாட்டு அரங்கமும் 25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப் படவுள்ளன. இது மூன்று மாடிக் கட்டடமாக அமைக்கப்படும்.

பருத்தித்துறை பெருவெட்டியில் உள்ள மழைநீர் வாய்க்கால் 40 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இந்த வாய்க்கால் 1.5 கிலோ மீற்றர் தூரம் கொண்டது. பல வருடங்களாகப் புனரமைப்புக்கு உட்படுத்தாது இருந்தது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட மந்திகை மற்றும் மாகாண்டில் பிரதேசத்தில் 50 மில்லியன் ரூபா செலவில் புதிய சந்தை அமைக்கப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை பிரதேச சபையில் 50 மில்லியன் ரூபா செலவில் கடைத் தொகுதியும், சந்தையும் அமைக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் யாவும் நிறைவடைந்துவிட்ட நிலையில் பிரதேச சபைகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (வ-13)

## பஸ் - வான் விபத்து


**23 பேர் சாவு**

டில்லி, பெப்.1

குஜராத்தின் பட்டன் பகுதியில் நேற்று முன் தினம் இரவு பக்தர்களை ஏற்றி வந்த வான், அரசு பஸ்ஸுடன் மோதி விபத்துக் குள்ளானதில் 23 பேர் உயிரிழந்தனர்.

மேற்படி விபத்தில் காயமடைந்த 18 பேர் மருத்துவமனையில் அனு மதிக்கப் பட்டுள்ளனர்.

வானில் வந்த அனைவரும் அருகில் இருந்த தர்ஹாவுக்குச் சென்று வழிபாடு செய்து விட்டு வீடு திரும்பிய போது குறித்த விபத்து ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (வ)



தேச பிதா மகாத்மா காந்தியின் நினைவு தினம் தியாகிகள் தினமாக நேற்று முன்தினம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. டில்லி ராஜ்காட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்துகிறார் பிரதமர் மன்மோகன் சிங்.

## ஆப்கன் எம்.பிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

### ஜனநாயகம், தேர்தல் குறித்து

டில்லி, பெப்.1

ஜனநாயக நடைமுறை, தேர்தல் தொடர்பாக, ஆப்கானிஸ்தான் நாட்டின், 102 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டுள்ள ஆப்கன் நாட்டில், ஜனநாயகம் மலர்ந்து வருகிறது. அங்கே முகாமிட்டுள்ள, அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளின் படைகள் விரைவில் வெளியேற உள்ளன.

நாடாளுமன்ற நெறி முறைகள், நடைமுறைகள், ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்துவது போன்றவை குறித்து, அந்த நாட்டின் 102 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த மாதத்தில், இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டுள்ள ஆப்கன் நாட்டில், ஜனநாயகம் மலர்ந்து வருகிறது.**

ஆப்கானில், நாடாளுமன்றக் கட்டடம் கட்டும் பணிக்கு இந்தியா உதவி வருகிறது. அந்தப்பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையவுள்ளன. (வ)

## வன்புணர்வுச் சட்டத் திருத்தம் பரிந்துரையை ஏற்றார் பிரதமர்



டில்லி, பெப்.1

பாலியல் வன்புணர்வு சட்டத் திருத்தம் தொடர்பான நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையிலான குழுவின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படும் என்ற பிரதமர் மன் மோகன் சிங் தெரிவித்தார்.

இதுதொடர்பாக குழுவின் தலைவர் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி வர்மா மற்றும் உறுப்பி னர்களான ஓய்வுபெற்ற நீதிபதி லீலா சேத் மற்றும் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியம் ஆகியோருக்கு மன் மோகன் சிங் கடிதம் எழுதி உள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

டில்லி மாணவி கடந்த டிசம்பர் 16 ஆம் திகதி ஓடும் பஸ்ஸில் 6 பேர் கொண்ட கும்பலால் கொடூரமாக பலாத்காரம் செய்யப்பட்டு உயிரிழந்தார். அந்தச் சம்பவம் நாட்டையே உலுக்கியது. இந்நிலையில், இது தொடர்பான சட்டத்தைத் திருத்துவது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க நீதிபதி வர்மா தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

அந்தக்குழு பொதுமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் தனது அறிக்கையை விரைவாகச் சமர்ப்பித்துள்ளது பாராட்டுக்குரியது. அந்தக் குழுவினரின் பரிந்துரைகள் உடனடியாக ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும்-என்றுள்ளது.

மொத்தம் 630 பக்கங்களைக் கொண்ட அந்தப் பரிந்துரை கடந்த 23ஆம் திகதி மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (வ)

# மஹிந்தவின் இந்திய வருகைக்கு தி.மு.க. எதிர்ப்புத் தெரிவிக்குமா?

## 'டெசோ' கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்கிறார் தலைவர் கருணாநிதி



சென்னை, பெப்.1

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தொடர்பாக டெசோ கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமையில் டெசோ குழுவினர் டில்லிக்குச் சென்று அமெரிக்கா, ரஷ்யா, மலே சியா உட்பட 6 நாடுகளின் தூதர்களைச் சந்தித்து டெசோ மாநாட்டின் தீர்மா னங்களைக் கொடுத்தனர்.

அதனையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை சென்னை திரும்பிய இந்தக் குழுவினர், அண்ணா அறிவாலயத்தில் அன்றிரவு டெசோ குழுவினரின் டில்லி பயணம் தொடர்பாக கருணாநிதியைச் சந்தித்து விளக்கினர்.

அதன் பின்னர் கருணாநிதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழ் மொழி, பண்பாடு இவற்றையெல்லாம் ஒழிப்பதற்கான முயற்சியில் இலங்கை அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. இலங்கையில் 90 தமிழ் கிராமங்களின் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றியுள்ளனர். ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்ததற்கு ஈடான செயலாகவே இதனைக் கருதுகிறோம்.

எனவே எங்கள் எதிர்ப்புக் குரலைக் காட்ட ராஜபக்ஷ வரும்போது எங்கள் அணுகுமுறை எப்படி அமைய வேண்டும் என்பதை எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் டெசோ கூட்டத்தில் முடிவு செய்வோம்.

**ஐ.நா.சபையில் இலங்கைக்கு எதிராக வர விருக்கும் தீர்மானத்தின் போது அமெரிக்கா முக்கிய பங்காற்றும் என்று நம்புகிறோம் என்றார்.**

ஐ.நா.சபையில் இலங்கைக்கு எதிராக வரவிருக்கும் தீர்மானத்தின் போது அமெரிக்கா முக்கிய பங்காற்றும் என்று நம்புகி றோம். அதற்கு அழுத்தம் தரவே இப்போது டெசோ குழுவினர் அமெரிக்கத் தூதரைச் சந்தித்துள்ளனர்- என்றார். (வ)

## புதிய தலைமைச் செயலகத்தில் மருத்துவ சிகிச்சைகள் ஆரம்பம்




சென்னை,பெப்.1

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தில் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொடக்கம் செயற்படத் தொடங்கியது.

தி.மு.கவின் கடந்த ஆட்சிக் காலத்தில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகக் கட்டடம் அரசு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கில் மருத்துவமனையாக மாற்ற தடை இல்லை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு வெளியான அன்றே மருத்துவமனை செயற்படுவதற்குரிய பணிகள் உடனடியாக ஆரம்பிக் கப்பட்டன.

இந்தநிலையில், புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தில் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை புதன் கிழமை செயற்படத் தொடங்கியது.

இதில், முதல் கட்டமாக நரம்பியல் மற்றும் இதயவியல் துறையின் புற நோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப் பட்டது. திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை முற்பகல் 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை இந்தப் பிரிவுகள் செயற்படும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.இரண்டு பிரிவுகள் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. பொதுப் பணித்துறையின் பணிகள் முடிந்தபின் அனைத்து பிரிவுகளும் தொடங்கப் படும்.- என்றார். (வ)

## 'விஸ்வரூபம்' படத்துக்கு மீண்டும் வந்தது தடை



விஸ்வரூபம் திரைப்படத்துக்கு எதிர்வரும் 6ஆம் திகதி வரை மீண்டும் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு காரணங்களை சுட்டிக் காட்டி தமிழக அரசு குறித்த திரைப்படம் திரையிடப்படுவதற்கு விதித்த தடையை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வெங்கட்ராமன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நீக்கினார். ஆனால் அந்தத் தீர்ப்பை எதிர்த்த தமிழக அரசு, தலைமை நீதிபதி எலிப்பி தர்மாராவிடம் தீர்ப்புக்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டும் எனக் கோரியது.

அதற்கு மறுப்புத் தெரிவித்த அவர், உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யுமாறு கூறினார்.

அந்த மனு நீதிபதிகள் எலிப்பி தர்மாராவ் மற்றும் அருணா ஜெகதீசன் முன் பாக விசாரணைக்கு வந்த போது, தனி நீதிபதி விதித்த தீர்ப்பை நிறுத்தி வைத்து அவர்கள் தீர்ப்பளித்தனர். இதன்மூலம் விஸ்வரூபம் படம் திரையிடப்படுவதற்கு தமிழக அரசு விதித்திருந்த தடை உத்தரவு மீண்டும் நடை முறைக்கு வந்துள்ளது. (வ)

## திரைப்பட தணிக்கை சட்டங்களை மாற்ற அரசு நடவடிக்கை

டில்லி, பெப்.1

திரைப்பட தணிக்கை சான்றிதழ் சட்டங்களை மாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டதாக மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் மணீஷ் திவாரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

'விஸ்வரூபம்' திரைப் படம் தொடர்பாக- தமிழகத்தில் எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் தடை பற்றி தனது டுவிட்டரில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். மத்திய தணிக்கைக் குழு அளிக்கும் சான்றிதழ் மதிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் வகையில் சட்டங்களை திருத்த வேண்டும் என்று அவர் எழுதியுள்ளார்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் மாநில அரசுகளே தணிக்கை அதிகாரங்களை மேற்கொள்ளும் நிலை வந்து விடும் என்று அவர் கவலை தெரிவித்துள்ளார். (வ)

# தீவிரவாதிகளின் இறுதித் தளத்துக்குள் எதிர்ப்பின்றி நுழைந்தது பிரான்ஸ் படை

பாமகா, பெப்.1
மாலியில் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வந்த பிரான்ஸ் படைகள், தற்போது இஸ்லாமியத் தீவிர வாதிகளின் முக்கியமான இறுதித் தளமான கிடால் என்ற மாலியின் வடக்கு நகருக்குள் தாம் நுழைந்துவிட்டதாக அறிவித்துள்ளன.

விமான நிலையத்தைக் கைப்பற்றிய பிரான்ஸ் படைகள் எந்தவித எதிர்ப்புமின்றி நகருக்குள் நுழைந்ததாகவும், அங்கு வீதிகளில் ரோந்துப் பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் மாலியின் பிராந்திய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அல் குவைதாவுடன் தொடர்புடைய இஸ்லாமிய ஆயுததாரிகள் அங்கிருந்து ஏற்கனவே வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் வடக்கு மாலியில் இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் முக்கியமான இரண்டு நகரங்களை பிரான்ஸ் தலைமையிலான படைகள் சிறிதளவு எதிர்ப்புடன் கைப்பற்றியிருந்தன.

பிரான்ஸ் படைகள் விரைவில் மாலியில் இருந்து வெளியேறிவிடும் என்றும் இனி ஆபிரிக்க நாடுகள் மாலியின் பாதுகாப்புப் பொறுப்பைக் கையேற்கும் என்றும் பிரான்ஸின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். (ற)



## ஆஸி.யின் பொதுத் தேர்தல் செப்ரெம்பரில்

மெல்போர்ன், பெப்.1
ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட் குறிப்பிடுகையில், செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். அதற்கு முன்னேற்பாடாக ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று தெரிவித்தார்.

தற்போது ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் பெரும்பான்மை இல்லாத நிலையில் செயற்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ற)

## ஆஸி. தேர்தலில் அசாஞ்சே

லண்டன், பெப்.1
விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே எதிர்வரும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜூலியன் அசாஞ்சே விக்கிலீக்ஸ் இணையதளம் மூலமாக அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான இரகசிய ஆவணங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர்.

இவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குக் காரணமாக இவர் லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)




ஹிட்லர் பதவிக்கு வந்து 80 ஆண்டுகள் முடிவடைந்ததை நினைவு கூரும் நிகழ்வுகள் ஜேர்மனியில் இடம்பெற்றன. கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு மூலமாக ஹிட்லர் பதவிக்கு வந்த விடயம் நினைவுகூரப்பட்டது. 1933 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி முதன்முதலாக ஹிட்லர் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட மாட்டேன்

## ஹிலாரி கிளின்டன் தெரிவிப்பு

வோஷிங்டன், பெப்.1
அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடும் எண்ணம் இல்லை. எதிர்காலத் திட்டங்கள் குறித்து எந்த முடிவுமில்லை என்று அமெரிக்க வெளியுறவு துறை செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.



2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா? என்ற கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே ஹிலாரி இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கூறியிருப்பதாவது:

அமெரிக்க அதிபர் பதவிக்கு போட்டியிடும் எண்ணம் ஏதும் தற்போது எனக்கு இல்லை. எனது தற்போதைய பதவிக்குரிய பணிகளை நிறைவான முறையில் முடிக்க வேண்டும் என்பதில் மட்டுமே நான் கவனம் செலுத்தி வருகிறேன். எதிர்காலத்தில் என்னென்ன செய்யப் போகிறேன் என்பது பற்றிய திட்டங்கள் ஏதும் நான் வகுக்கவில்லை.

சிறுமிகள் மற்றும் பெண்களில் முன்னேற்றத்துக்காக உழைக்கவும் இது தொடர்பாக பேசவும், எழுதவும் விரும்புகிறேன். 13 வயதில் இருந்தே பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனவே தற்போதைய பதவியில் இருந்து ஓய்வு பெற்றப் பின்னர், யாரை சந்திப்பது? எங்கே போவது? என்ற சிந்தனைகள் எனக்கு இருக்காது.

அந்த நாட்டில் இந்தப் பிரச்சினை இந்த நாட்டில் அந்தப் பிரச்சினை என்ற அவசர அழைப்புகள் எதுவும் எனக்கு வராது. எந்த நாட்டின் தலைவரையும் அவசரமாக தொடர்பு கொண்டு பேச வேண்டிய அவசியமும் ஏற்படாது. ஓய்வுக்கு பின்னர் எனது அன்றாட வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை அனுபவித்துப் பார்த்த பிறகு தான் என்னால் கூற முடியும்.- என்று தெரிவித்தார். (ற)

# தீவிர மதவாதிகள் வெளியேற்றப்படுவர்

## விரைவில் நடவடிக்கை என்கிறார் பிரான்ஸ் உள்துறை அமைச்சர்

பரிஸ், பெப்.1
இன்னும் சில நாள்களுக்குள் வெளிநாடுகளைச் சேர்ந்த தீவிர இஸ்லாமிய மதகுருக்களையும், போதகர்களையும் பிரான்ஸ் நாடு கடத்த உள்ளது என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சர் மனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார்.

வன்முறைத் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கான சர்வதேசக் கருத்தரங்கில் பங்கு கொண்டு உரையாற்றுகையில் மனுவல் வால்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நான் இந்தத் தீவிர இஸ்லாமிய வன்முறையாளர்களையும் பிரான்ஸில் வாழும் இஸ்லாமிய மக்களையும் பிரித்தே பார்க்கின்றேன். இங்கு இஸ்லாமிய மக்கள் மத நல்லிணக்கச் சூழ்நிலையில் அமைதியாக வாழ்கின்றார்கள். ஆனால் இந்தத் தீவிர மதவாதிகளும் அவர்கள் குழுக்களும் மதங்களுக்கு இடையே வெறுப்பையும் விரோதக் கருத்துக்களையும் விதைக்கின்றனர்.

இவர்கள் மதத்தின் மூலம் சர்வதேச அரசியலில் இடையூறுகளை விளைவிப்பவர்கள். பெண்களைத் தம் பிடிக்குள் வைத்துப் பிரான்ஸின் பெண்ணிய விழுமியங்களுக்குப் பங்கம் விளைவித்து அவர்களை அடிமைகளாக்கும் இமாம்களையும் போதகர்களையுமே நாம் நாடு கடத்துகின்றோம்.

இவர்கள் பிரான்ஸின் மீதான தாக்குதலுக்கும் எதிர்ப்புக்கும் ஆதரவு தெரிவிப்பவர்கள். இவர்கள் மீது நான் மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். இவர்கள் போன்றோருக்கு பிரான்ஸில் இடம் இல்லை- என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# முதலாவது ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது தென்கொரியா



கோகேயுங், பெப்.1
தென் கொரியா தனது முதலாவது ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

கே.எஸ்.எல்.வி-1 என பெயரிடப்பட்டுள்ள இந்த ரொக்கெட், கோகேயுங் என்ற இடத்தில் உள்ள நாரோ விண்வெளி மையத்திலிருந்து செலுத்தப்பட்டது.

இந்த ரொக்கெட்டில் அறிவியல் ஆராய்ச்சிகான செய்மதி கோள் அனுப்பப்பட்டு உள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 2009ஆம் ஆண்டும், 2010 ஆம் ஆண்டும் ரொக்கெட் செலுத்தும் தென்கொரியாவின் முயற்சி தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சிலியில் கடுமையான நிலநடுக்கம்

சான்டியாகோ, பெப்.1
சிலி நாட்டின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கோபியாபோ மாகாணத்தில் நேற்றுமுன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்க மையம் கோபியாபோ நகரின் தென் மேற்கே 56 மைல் தூரத்தில் இருந்ததாக அமெரிக்க புவியியல் மையம் கூறியுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. உலகில் அதிக தாமிரம் உற்பத்தி செய்யும் இந்தப் பகுதியில் சுரங்கத் தொழில் அதிகமாகக் காணப்படுகிறது. நிலநடுக்கத்தால் சுரங்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ற)

# வெளியுறவு அமைச்சர் கெர்ரி

## அமெ. செனட் சபை அங்கீகாரம்



நியூயோர்க், பெப்.1
அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக ஜோன் கெர்ரியை நியமிப்பதற்கு அந்நாட்டு நாடாளுமன்ற செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக செனட்டில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஜோன் கெர்ரிக்கு ஆதரவாக 94 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் பதிவாகியுள்ளன.

இப்போது வெளியுறவுத் துறை அமைச்சராக உள்ள ஹிலாரி கிளின்டனின் பதவிக்காலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைய உள்ளது. அதைத் தொடர்ந்து ஜோன் கெர்ரி வெளியுறவு அமைச்சராகப் பொறுப்பேற்க உள்ளார்.

வியட்நாம் போரில் பணியாற்றிய ஜான் கெர்ரி, தற்போது அமெரிக்க செனட்டில் வெளியுறவுச் செயலகத் தலைவராகப் பணியாற்றுகிறார். (ற)

## மொசாம்பிக்கில் வெள்ளம்; 80 பேர் சாவு



லிம்பொபோ, பெப்.1

மொசாம்பிக்கில் தொடரும் மழையால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது.

ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் கடந்த ஒரு வார காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள தாழ்வான பகுதியான லிம்பொபோ ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

அதனால் பெரும்பாலான கிராமங்கள் நீரில் மூழ்கின. வெள்ளப்பெருக்குக் காரமாக இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழு வீச்சில் நடைபெறவில்லை என்று குற்றம்சாட்டப்படுகிறது. அத்தியாவசிய தேவைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே உலக நாடுகள் உதவமுன் வரவேண்டும் என்று ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது. (ற)

# மும்பைத் தாக்குதல் சாட்சிகளை விசாரிக்க பாக்.குழுவுக்கு அனுமதி

**பாகிஸ்தான் குழுவினரின் இந்தியப் பயணத்துக்கான திகதி குறிப்பிடப்படவில்லை. எனினும் பெப்ரவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் பயணம் மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.**

இஸ்லாமாபாத், பெப்.1

மும்பைத் தாக்குதல் வழக்கு தொடர்பாக, நான்கு முக்கிய சாட்சிகளிடம் விசாரிக்க இந்தியா வருவதற்கு பாகிஸ்தான் நீதிக் குழுவுக்கு இந்தியா அனுமதி அளித்துள்ளது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பாகிஸ்தான் நீதிக்குழு இந்தியா செல்வதற்கு அந்த நாடு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் இந்தியா சென்ற குழுவில் இடம் பெற்றவர்களே தற்போதும் இந்தியா செல்வர்.

மும்பை தாக்குதலுக்கு சர்வதேச அளவிலான சதியே காரணம். இந்தியாவால் குறிப்பிடப்படாத நபர்களையும் பாகிஸ்தான் கைது செய்து விசாரித்து வருகிறது.

பாகிஸ்தான் குழுவுக்கு அனுமதி அளித்ததற்காக இந்தியாவுக்கு குறிப்பாக உள்துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டேவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இரு நாடுகளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் இணைந்து ஈடுபடுவதற்கு இது நல்ல நடவடிக்கை ஆகும்.- என்றார்.

பாகிஸ்தான் குழுவினரின் இந்தியப் பயணத்துக்கான திகதி குறிப்பிடப்படவில்லை. எனினும் பெப்ரவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் பயணம் மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

# பிரிட்டன் பிரதமர் கமரூன் அல்ஜீரியா பயணமானார்

லண்டன், பெப்.1

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அல்ஜீரியா பயணமானார். அங்கு அவர் அல்ஜீரியாவின் ஜனாதிபதி அப்துல் அஜீத் போட்டேபிளிக்கா, பிரதமர் அப்துல் மாலேக் செலால் மற்றும் தேசியப் பாதுகாப்பு நெறியாளர் சர் கிம் டாரோக் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.

அண்மையில் அல்ஜீரியாவில் உள்ள இன் அமெனாஸ் எரிவாயு உற்பத்தி நிலையத்தில் அல் குவைதா இயக்கத்தினர் 37 வெளிநாட்டவரைப் பணயக் கைதிகளைப் பிடித்திருந்தனர்.

அவர்களில் ஆறு பேர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள். இவர்களை மீட்கும் போது பல தீவிரவாதிகளும், அல்ஜீரியர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் தீவிரவாத ஒழிப்பு குறித்த பேச்சுகளே இந்தச் சந்திப்பின் போது முக்கியத்துவப்படுத்தப்படும் என்று கருதப்படுகிறது.

அத்துடன் வணிகம், கல்வி, உடல்நலம், பண்பாடு, எரிசக்தி போன்றவை குறித்தும் இருநாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடவுள்ளனர்.

அல்ஜீரியா, பிரான்ஸிடம் இருந்து விடுதலை பெற்று ஐம்பத்தொரு ஆண்டுகளாகின்றன. அதன் பின் அங்கு பயணம் மேற்கொள்ளும் முதலாவது பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஆவார். (ற)

## பாகிஸ்தானின் முக்கிய துறைமுகம் சீனாவின் கைக்குக் கிட்டியது

இஸ்லாமாபாத், பெப்.1

இதுவரை சிங்கப்பூரின் பராமரிப்பில் இருந்த பாகிஸ்தானின் குவாதர் துறைமுகம் தற்போது சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் காலங்களில் துறைமுகப் பராமரிப்பை சீனாவே மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தின் அரேபியக்கடல் பகுதியில் முக்கிய துறைமுகமாக விளங்குகிறது குவாதர் துறைமுகம். மிக ஆழமான பகுதியில் அமைந்துள்ள இந்த துறைமுகம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

தற்போது அதை சீனா வசம் ஒப்படைக்க பாகிஸ்தான் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. அதையடுத்து சீனக் கம்பெனிகள் குவாதர் துறைமுகக் கட்டுமானங்களை மேம்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. அதற்காக சீனா 250 மில்லியன் அமெரிக்க டொலரை முதற்கட்டமாக வழங்கியும் உள்ளது.

அரேபிக் கடலில் சீனாவின் ஆதிக்கம், இந்தியாவுக்கு நிச்சயம் கவலை அளிக்கும் செயற்பாடாவே அமையும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். (ற)

## ‘எனது சொத்துகளில் பாதி ஏழைகளின் மேம்பாட்டுக்கு’

### தென்னாபிரிக்க கோடீஸ்வரர் அறிவிப்பு

ஜொஹனஸ்பேர்க், பெப்.1

தென்னாபிரிக்காவின் பெரும் கோடீஸ்வரரான பேட்ரைஸ் மோட்செப், தனது சொத்துக்களின் பாதியை ஏழைகளின் மேம்பாட்டுக்கு வழங்க முன்வந்துள்ளார்.

உலகின் பெரும் பணக்காரர்களான பில் கேட்ஸ், வாரன் பப்பெட் ஆகியோர் ஏழைகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு பணிகளை செய்து வருவது தன்னுள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனால் ஏழை மக்களின் கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்கு இந்தப் பணம் செலவிடப்படும் என்று கூறினார்.

மோட் செப்பின் சொத்துகளின் மதிப்பு ஏறத்தாழ 35 ஆயிரம் கோடி டொலர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)


**வீடு விற்பனைக்கு**

வேலணை றோட்டில் 20 பரப்பு காணியில் அமைந்துள்ள கோற்றான் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 1943 054

(28882) (45.6.7)

**வீடு வாடகைக்கு**

யாழ்.நாவலர் வீதியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு அல்லது பெண் பிள்ளைகள் பாது காப்பாக தங்குவதற்கு உகந்தது. நான்கு வாகனங்களுக்கு மேல் தரிப்பிட வசதியுண்டு.

தொடர்புகளுக்கு:0713899476

(29008)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com

0215671111

**வான் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள 62-XXXX தொடரிலக்கமுடைய டொல்பின் கைறூவ் வான் (சகல வசதிகளும் உண்டு) விற்பனைக்குண்டு.

M.M.டெரன்ஸ்.

பூங்குன்றம்,68, ஞானப்பிரகாசர் வீதி, மல்லாகம்,உடுவில்.

(29002)

சிவசக்திமயம்

**விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு**

ஸ்வஸ்த்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் தை மாதம் 19ஆம்நாள் (01.02.2013) வெள்ளிக்கிழமையும் ஷஷ்டி திதியும் ஹஸ்த நக்ஷத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 09.09 மணி முதல் 10.20 மணி வரையிலுமுள்ள மீன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

கோண்டாவில் மஹா கணபதிப் பிள்ளையார் காளிகோயில் அருள் மிகு சந்திர சேகரப்பிள்ளையார் கோயில் பாரத்வாஜ கோத்ரம் சிவஸ்ரீ சண்முகசுந்தரக் குருக்கள் பிரசாதம்பாளின் பௌத்திரனும், புத்தளம் பிரம்மஸ்ரீ சுவாமிநாத ஐயர் சரஸ்வதி அம்பாளின் தௌஹித்திரனும் எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி சசிகாந்த சர்மாவிற்கு



ஹற்றன் ஸ்ரீ அருள் மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஸ்ரீமர்ஷண கோத்ரம் பிரம்மஸ்ரீ நா.நாராயண சர்மா அமிர்தாம்பாளின் பௌத்திரியும் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி பிரம்மஸ்ரீ கு.பரமசாமி ஐயர் சீதாலக்ஷ்மியின் தௌஹித்திரியும் எமது புத்திரியுமாகிய சௌபாக்கியவதி சிந்துஜாவை

கன்னிகாதான, மாங்கல்யதாரண, பாணிக்கிரஹணம் செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் காளி அம்மாள், ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார், ஹற்றன் ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமியின் திரு அருளுடனும்பெரியோர்களின் நல்லாசிகளுடனும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு

மயூராபதி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய திருமண மண்டபத்தில் (கொழும்பு-06) நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் அஷ்டமித்ர பந்துக்கள் சகிதம் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து விவாஹ சோபனத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்– 01.02.2013 காலை 5 மணி

வதுவரகிரஹப் பிரவேசம்– 04.02.2013 மாலை நடைபெறும்

வரவேற்பு உபசாரம்– 05.02.2013 செவ்வாய்க்கிழமை மாலை 04.00 [மணமகன் இல்லத்தில்]

சுபம்

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

ஸ்ரீ.ஸ்ரீமதி ஸ்ரீராஜ ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் (சிறீ ஐயா) நாகேஸ்வரி தம்பதிகள்
காளி கோயிலடி, கோண்டாவில் மேற்கு.
T.P: 021-2225647

ஸ்ரீ.ஸ்ரீமதி பாலசுப்பிரமணிய சர்மா வசந்தா தம்பதிகள்
அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோயில். ஹற்றன். T.P: 051-2222645

இரு வீட்டார் அழைப்பு

(தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(28987)(6.11)

**முதலாவது பிறந்த நாள் வாழ்த்து**





சுசிகரன்- வாசுகி தம்பதியரின்

செல்வப் புதல்வி

**தமிழ்வாணி**

தனதுமுதலாவது பிறந்தநாளை இன்று (01.02.2013)வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்

இவரை அன்பு அம்மா,அப்பா, அண்ணன் தமிழ்மாறன்,அக்கா தமிழினி,தாத்தா, அப்பப்பா,அப்பம்மா,மாமாமார்,அத்தைமார், சித்தப்பாமார்,சித்திமார், அண்ணன்மார், மச்சான்,மச்சாள் மற்றும் பூட்டன் ஆகியோர்முடிப்பிள்ளையார்,சந்நிதி முருகன் அருள் ஆசியுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

சுசிகரன்.

உஷா ரேடர்ஸ், பாடசாலை வீதி,கெருடாவில், தொண்டைமானாறு.

**COMPUTER EXPRESS**

**Institute of Information Technology**

*No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd), Jaffna*

Phone - 0212228250

வர்த்தகத்துறை மாணவர்களே!

கணக்கியல் ஆர்வலர்களே!

நிறுவனங்கள் தமது கணக்குகளை கணனிக்கணக்கியலுக்கு மாற்றி வருகின்றன. எனவே கணக்கியல் வேலைவாய்ப்பின்போது கணனிக்கணக்கியல் மிகவும் அவசியம்.

நீங்கள் Accounting Package கற்றுவிட்டீர்களா??

உங்களுக்காக உலகின் முன்னணி கணக்கியல் மென்பொருட்களான ACCPAC + Quick Book +MYOB ஊடாக

**Diploma in Computerized Accounting**

கம்பனி கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி அதிக செய்முறை பயிற்சியுடன் நீண்ட அனுபவம்வாய்ந்த விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படும்.

Course Fee : 3000/= Duration : 3months

**Advance Courses**

Diploma in Computer Science

Diploma in Video Editing

Diploma in Multimedia

Feb 10ம் திகதிக்கு முன் பதிவுசெய்யவும்

80% கட்டண கழிவுடன்

Diploma in Microsoft Office

Diploma in Desktop Publishing

Diploma in Graphic Designing

Diploma in Hardware

Diploma in Web pagedesigning

Auto CAD

Tally

CourseFee:1000/= Duration:3months

வகுப்புக்கள் ஆரம்பம்

Batch I : 02/02/2013

Batch II : 03/02/2013

Batch III : 06/02/2013

Batch IV : 08/02/2013

11AM / 03PM

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(10)

நாங்களும் மாறத் தயாராவோம். இன்று எம்மிடமுள்ள மேலான இயல்புகளை உதிர்த்து, இன்றுள்ளதை விட ஒரு படி மேலான நிலைக்கு உயரும் வகையில் மாறுவோம். அந்த மாற்றம் பொருளாதார ரீதியில் தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. மனதளவில் எம்மை உயர்த்தினாலும் வரவேற்க வேண்டியதே. மனம் உயர்ந்தால் தன்னால் வாழ்க்கையும் வளமுறும்.

**7. வாழ்வு ஓர் இயக்கம்; மாற்றம் ஒரு தூண்டுகோல்!**

மாறுதல்களைக் கண்டு மனிதன் ஏன் பயப்படுகிறான்? மாற்றங்கள் எமது வாழ்வில் என்ன கொண்டு வருமோ என்ற பயம். இந்தப் பயம் எம்மை முடக்கிவிடுகிறது. பயத்தில் இயல்பான பயம். இயல்பில்லாத பயம் என்று இரண்டு வகை உண்டு. அதைத்தான் 'அஞ்சுவதஞ்சாமை பேதைமை. அஞ்சுவது அஞ்சலறிவார் தொழில்' என்றார் வள்ளுவர். புயல் வரப்போகிறது என்று வானொலி அறிவிக்கும்போது நாம் பயணத்தை மேற்கொள்வது பற்றி அஞ்சத்தான் வேண்டும். இது நியாயமான பயம். மாறாக தினந்தோறும் பஸ்ஸில் அலுவலகத்துக்குப் போகிறோமே பஸ்ஸுக்கு விபத்துநேர்ந்தால், என்ன செய்வது என்றெண்ணிப் பயப்படுவது அர்த்தமில்லாத பயம்!

'எனக்கு அதைப் பற்றிய பயம்' என்று வெளியே சொன்னால், எங்கே எம்மைப் பிறர் 'பயந்தாங்கொள்ளி' என்று எண்ணி விடுவார்களோ என்று நினைத்து எமது பயத்தை மறைத்து நாம் பேசுகிறோம்; நடந்துகொள்கிறோம். இப்படி மறைத்துப் பேசுவதே தொழிலானால் 'எதைப் பற்றிப் பயந்தோம்? எது எம்மை உண்மையில் ஆட்டிப் படைக்கிறது?' என்ற அடிப்படையே எமக்குப் புரியாமல் போய்விடுகின்றது. எப்போது பயத்தின் அடிப்படை எமக்குப் புரியவில்லையோ அப்போது அதைக் கட்டுப்படுத்தும் வழிகளும் எமக்குப் புலப்படுவதில்லை.

மரணத்தைப் பற்றிச் சற்று நேரம் எண்ணிப்பாருங்கள். அடிமனதில் இலேசான பயம் எட்டிப் பாராமல் இருக்காது. கவலைகள் ஆட்கொள்ளாது போகாது. ஆயினும் அன்றாடம் நாம் மரண பயத்தை எப்படிச் சமாளிக்கிறோம்? அதை மறப்பதன் மூலம்; அதைப்பற்றி அதிகம் சிந்திக்காததன் மூலம்; அதை ஏற்றுக்கொள்வதன் மூலம்; அதை கண்டுகொள்ளாமல் இருப்பதன் மூலம்; அதேபோல் மாற்றங்களைப் பற்றியும் பயப்படாதிருக்கப் பழகுங்கள். மாற்றங்கள் வளர்ச்சியின் தேவைகள் என்பதை உணர்ந்து அவசியமான மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நாம் மாற விரும்பாததற்கு மற்றொரு காரணம் விரக்தி மனோநிலை. வாழ்வில் எதும் அர்த்தமில்லை என்ற உணர்வு. "எது செய்து என்ன பயன் கண்டோம்?" "என்ன எழுதி என்ன சாதித்தேன்?" "ஏன் வாழ்கிறேன்? இதில் அர்த்தம் இல்லை" என்பது போன்ற எண்ணங்கள் பலரிடம் மேவி நிற்கிறது. "சீ, எறும்பு, புழு போன்றது மனித வாழ்க்கை. இதிலே ஆசைகள் என்ன? சாதனைகள் என்ன? இலட்சியங்கள் என்ன?" என்று இவர்கள் அலுத்துக் கொள்கிறார்கள்.

'நாம் இருப்பது இவ்வுலகம். இதில் மனிதத் தொடர்பு கொண்டு குடும்பமாக, சமுதாயமாக வாழ்கிறோம். எமக்குக் கடமை இருக்கிறது. ஆத்மாவுக்குத் தாகம் இருக்கிறது' என்று சிந்தித்துப் பார்க்கும் போது விரக்தி மனோநிலை அகலும்.

வாழ்வு எமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் போது எமக்கு 'ராஜா' போன்ற நினைவும் நிறைவும் ஏற்படுகிறது. வாழ்க்கையைத் தமது விருப்பத்துக்கு ஏற்ப நிர்வகித்து வெற்றி கண்டவர்கள் 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்று தத்துவம் பேசமாட்டார்கள். ஆனால் 'விடயங்கள் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை' என்ற நிலை ஏற்படுமானால், "போனால் போகட்டும் போடா! வந்தது தெரியும் போவது எங்கே? வாழ்க்கை எமக்கே தெரியாது!" என்று தத்துவம் பேசுவார்கள். இப்படி தத்துவம் பேசுபவர்களிடம் தன்னம்பிக்கை இருப்பதில்லை. சுயகௌரவம் போய்விட்ட உணர்வால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சுய பச்சாத்தாபம் இவர்களை ஆட்கொள்கிறது. வாழ்வில் பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஒன்றுபோனால் இன்னொன்று என்ற சிந்தனைக்கே இவர்கள் போவதில்லை. இதனால் வாய்ப்புக்கள் இருந்தும் இவர்களுக்குத் தெரிவதில்லை. அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதில்லை.

எமது லட்சியத்தில் எமக்கு ஆர்வம் இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் அதற்காக உழைக்கவும் மாற்றங்களையும் தியாகங்களையும் ஏற்கவும் முன் வருவதில்லை. எனவே லட்சியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு, கடமை உணர்வு, பொறுப்புணர்வு தேவை. வாழ்வில் வாய்ப்புக்கள் இருக்கலாம். வாய்ப்புக்களை உபயோகித்தால் ஒழிய பலன் எதும் கிடைக்காது. வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று பேசிக்கொண்டிருந்தால் வாய்ப்பு மட்டும் தான் தங்கும்! பலன் விளையாது.!

மாறினால் வேறு விதமாக நடந்து கொண்டால் பிறர் என்ன சொல்வார்கள். ஊர் உலகம் என்ன எண்ணும் என்ற நினைப்புத்தான் பலரையும் புதிய காரியங்கள் செய்யமுடியாமல் தடுத்து முடக்கி விடுகிறது. இதனால் தன்னைப் பற்றிய மதிப்பு குறைந்து தாழ்வு மனப்பான்மையில் இவர்கள் மூழ்கி விடுகிறார்கள்.

மாற்றங்கள் வரும்போது புதிய நிலைகள் உருவாகின்றன. புதிய பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. பொறுப்பேற்கப் பலருக்குப் பயம் ஏற்படுகிறது. இதனாலேயே பல இளைஞர்கள் 'கல்யாணம் வேண்டாம்' என்றுகூறி விடுகின்றார்கள்! உத்தியோக உயர்வில் பலருக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது. சுதந்திரம் என்றுமே பொறுப்புடன் சேர்ந்துதான் வருகிறது. மாற்றங்களைச் சமாளிக்க முடியாதவர்கள், குற்ற உணர்வால் சங்கடப்படுவதோடு பிறரைக் குற்றம் சொல்லவும் பிறர் மீது பழி சுமத்தவும் முற்படுகிறார்கள். அல்லது பிறரைச் சார்ந்து அவர்கள் பலத்தில் நிற்க முயல்கிறார்கள்.

*என்.எஸ்.உதயமூர்த்தி* (தொடரும்)

# தமிழரின் பாரம்பரிய கலாசார நிகழ்வுகள் இன்று மறைந்து வரும் நிலையில் உள்ளது

## உழவர் தின நிகழ்வில் உரை

தென்மராட்சி,பெப்.1

வெளிநாடுகளில் வதியும் எமது மக்கள் எமது பாரம்பரிய கலாசார விழுமியங்களை தாம் வாழும் பிரதேசத்தில் அந்த நாட்டு மக்களுடன் கொண்டாடி வருகின்றனர்.

ஆனால் எமது நாட்டில் காலம் கால மாகப் பேணப்பட்டு வந்த தமிழர் பாரம்பரிய கலாசார நிகழ்வுகள் மறைந்து வரும் நிலையில் உள்ளன.

தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளை இளவயதினர் மூலம் செய்ய மேற்கொள்ளும் முயற்சி பாராட்டத் தக்கது என்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தெரிவித்தார்.

சாவகச்சேரி கண்டுவில்ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் உழவர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அருந்தவபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உழவர் உலகுக்கு அச்சாணி என வள்ளுவப் பெருந்தகையும், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என மகாகவி பாரதியாரும் தமது படைப்புகளில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். அன்றைய காலத்திலே உழவுத் தொழிலை தெய்வமாக கருதி வாழ்ந்தனர். உழவுத் தொழிலை மதித்து தை மாதத்தை தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகளைக் குறிக்கும் நாள்களாக பொங்கல் , தைப்பூசம் ஆகிய நிகழ்வுகளை விழாக்களாக நடத்தினர்.

அவ்வாறான நிகழ்வுகள் எம் மத்தியில் வெகுவாக குறைந்து ஒரு சில இடங்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. தைப்பூச தினத்தன்று பல்வேறு வகையான நிகழ்வுகளை தமிழ்மக்கள் முதல் நாள் வேலையாக ஆரம்பித்தனர்.

மக்களது பசி போக்கி உணவு அளிக்கும் உழவுத் தொழில் செய்வோர் தமது உழைப்பினால் விளைந்த நெற் பயிர்களில் ஒரு பிடி கதிர்களை அறுத்து வந்து கடவுளுக்கு படைத்துத் தொழுவது, புதிர் எடுத்தல், புதிர் உண்ணல் என்பவை இந்துக்களால் பாரம்பரியமாக கடைப்பிடித்து வரும் நிகழ்வாகும்.

அத்துடன் இந்த தினத்தில் குழந்தைகளுக்கு முடி இறக்குதல், காது குத்துதல், பால் சோறு தீத்துதல், ஏடு தொடக்குதல் போன்ற சுபகாரியங்களை செயற்படுத்தி வந்தனர். இவை இன்றும் எமது மண்ணில் சில பிரதேசங்களில் பாரம்பரிய நிகழ்வாக கடைப்பிடித்து வருகின்றனர்.

மக்களால் மறந்து போயுள்ள தமிழர்களின் பாரம்பரிய தைப்பூச நிகழ்வுகளை சிறார்களின் மனதில் பதியக்கூடிய வகையில் ஆடைகளை அணிவித்து அவர்கள் மூலமாகவே கலாசார விழுமியங்களை சிறார்களுக்கு மட்டுமல்ல எமக்கும் புரியக் கூடிய வகையில் இந்த பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடத்தப்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது என்றார். (எ-9)



ஜோன்.பொஸ்கோ வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற முதலாம்தர மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழாவில், பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனத்தை காணலாம். (எ-17)

# விளையாட்டுப் போட்டியில் தென்மராட்சி வலயம் மாகாண மட்டத்தில் திறமையை வெளிப்படுத்த வேண்டும்

## கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் தெரிவிப்பு

வரணி,பெப்.1

தென்மராட்சி வலயத்தைப் பொறுத்தவரையில் முதலாவது தவணைக்குள் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை மாகாண மட்டத்துக்கு கொண்டு சென்று திறமையை வெளிப்படுத்தல் சாத்தியமாகும்-என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

வரணி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கிருஷ்ணகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்வின் இடைவேளை நிகழ்வாக இடம்பெற்ற அணிநடை மிகச்சிறந்ததொன்றாக இருந்தது. நன்கு பயிற்றுவிக்கப்பட்டு, திறம்பட செயல்பட வைத்தவர்களை பாராட்ட வேண்டும். எதிர்காலத்தில் இவை பிரதேச பண்பாடுகளை, கலாசார ரீதியாக பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டும்.

எமது வலயத்தில் பல விடயங்களை செயற்படுத்த எண்ணியுள்ளேன். உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆலோசகர்கள் ஆகியோரின் ஆலோசனையுடன் உடற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடசாலை மட்டத்தில் கூடிய எண்ணிக்கையான மாணவர்களை உள்வாங்கவுள்ளேன். சிறந்து செயற்படும் பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்தப் பாடசாலை 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது. கிராமிய மட்டத்தில் 7 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இசுறு பாடசாலை திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இங்குள்ள மைதானம் தென்மராட்சிப் பிரதேசத்திலேயே அதிவிஸ்தீரணம் கொண்டு அமைந்துள்ளது. மைதானத்தை அபிவிருத்தி செய்யும் ஆரம்பக்கட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. எமது பிரதேசத்தில் 50 க்கும் மேற்பட்ட பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய உறுதிபூண்டுள்ளேன்- என்றார். (எ-122)


# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



யாழ். வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ ஏ.ஜி. சுவாமிநாதன் சர்மா அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் எ.நிஷாந்த பீரிஸ் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஏ.ஜி. சர்மா பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உரிமையாளர். அத்துடன் லயஞான பூபதி, மிருதங்க கலாகீர்த்தி எனும் பட்டங்களைப் பெற்ற சிறந்த மிருதங்க வித்துவானும் ஆவார். இசை அர்ச்சனை எனும் இசை நிறுவனம் மூலம் இவர் இசை அரங்குகள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இரண்டாம் இடம்



அகில இலங்கை ஆங்கில தினப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் உதயகுமாரன் விதுஷன் மனப்பாடப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021 5677111
விநியோகம்: 021 5677222
தொலைநகல்
செய்தி: 021 5678844,
விளம்பரம்: 021 2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ 9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (பஸ்நிலைய சந்தை முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா லொபன்ஸ்' மாவை சந்தி, அல்வாய் : 021 226 3206. 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519. 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399. 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478. 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585. 'மல்லாவி பவனேஸ்வரி புத்தகசாலை' மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116. 'கோபி எலெக்ரிக்கல்' முள்ளைத்தீவு நகர் : 0779598917. 'அன்புசன் சிவன் கோவிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571. 'சுஜா ஸ்டோர்ஸ்' 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# விஸ்வரூபமும் வீடமைப்பும்

சாதாரண ஒரு திரைப்படப் பிரச்சினையால் பற்றி எரியத் தொடங்கியுள்ளது தமிழகம். நடிகர் கமலஹாசனின் நடிப்பு, இயக்கம், தயாரிப்பு என்பவற்றால் உருப்பெற்ற "விஸ்வரூபம்" என்ற திரைப்படம் முஸ்லிம் மக்களை கொச்சைப்படுத்துவதாக எடுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்தப் படத்தைத் திரையிடக் கூடாது என்றும் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் போர்க் கொடி தூக்கின. இதற்காகவே இத்தனை நாளும் காத்திருந்தது போல உடனடியாகவே அந்தத் திரைப்படத்துக்கு தடை போட்டது தமிழக அரசு.

இதற்கு முன்னரும் ஏராளமான திரைப்படங்களில் இஸ்லாமியர்களைப் புண்படுத்தும் காட்சிகள் இருப்பதாக இதே முஸ்லிம் அமைப்புகள் போராட முற்பட்ட போது, சர்ச்சைக்குரிய குறித்த காட்சிகளை நீக்கி விட்டு, ஒரு மாதிரி படத்தைத் திரையிட்டால் போதும் என்ற நடவடிக்கைகளே நிகழ்ந்தன. ஆனால் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தணிக்கைக் குழு திரையிடுவதற்கான அனுமதியை வழங்கிய பின்னர் ஒரு மாநில அரசு திரைப்படம் ஒன்றைத் தடை செய்த வரலாற்றின் தொடக்கப் புள்ளியை தமிழக அரசு பதிவு செய்துள்ளது. இப்போது நீதிமன்றம் தடையை நீக்கிய பின்னரும் கூட தமிழக அரசு அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளதால் விஸ்வரூபம் தமிழில் வெளியாவது தள்ளிக்கொண்டே போகிறது.

விரைவில் நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளை இழந்து விடக்கூடாது என்பதற்காகவே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இந்தத் தடையை விஸ்வரூபத்துக்கு விதித்தார் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

முஸ்லிம் மக்களும் "நாங்கள் சிறுபான்மை என்பதால் எல்லோரும் எங்களை தீவிரவாதிகளாகச் சித்திரித்து இஸ்லாத்தையும் எங்களையும் கொச்சைப் படுத்துகிறார்கள்" என்று ஆட்சேபம் தெரிவிக்கிறார்கள். தமிழக முஸ்லிம் அமைப்புகள் சிலவும் அரசியல் ஆதாயத்துக்காகவும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றன. முட்டையில் மயிர் பிடுங்குவது போல கலையை கலையாக நோக்காது அதை பிரச்சினைக்குரிய விடயமாக ஊதிப் பெருப்பித்து அந்த சூட்டில் குளிர் காய்கின்றன. தங்களது வாக்குப் பலத்தையும், சிறுபான்மை என்ற அனுதாபத்தையும் வைத்தே பல காரியங்களை அவர்கள் சாதித்து விடுகிறார்கள். உண்மையிலேயே ஓர் இன மக்களின் மனதை புண்படுத்தி, அவர்களை இழிவுபடுத்தும் விடயங்கள் திட்டமிட்டே நிகழ்ந்திருந்தால், அதற்கெதிராக குரல் எழுப்புவதில் தவறில்லை. அது மிகவும் அவசியமானது. ஆனால் வெறுமனே அரசியல் ஆதாயத்துக்காக வேண்டுமென்றே பிழை பிடிக்கும் காமாலைக் கண்ணோடு பார்ப்பது தான் தவறானது. இத்தனைக்கும் விஸ்வரூபம் திரைப்படம் தலிபான்களின் கொடுமைகள் குறித்தே பேசுகிறது. ஆகவே விஸ்வரூபத்தை எதிர்ப்பவர்கள் தலிபான்களை ஆதரிக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது.

இலங்கையிலும் "சிறுபான்மையில் சிறுபான்மை" என்ற அனுதாபத் திரையைப் போர்த்திக்கொண்டு சில முஸ்லிம் அமைச்சர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்கள் மீதான காழ்ப்புணர்வையே ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. மீள்குடியமர்ந்த மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் சிலரின் செல்வாக்கின் தலையீட்டினால், தமிழ் மக்களைவிடவும் முஸ்லிம் மக்களுக்கு அதிகளவு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதை எதிர்த்து பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர். இந்தியாவைப் போலவே இங்கும் வாக்குப் பலம், சிறுபான்மை அனுதாபம் என்பவற்றை தமது சுயநலத்துக்காக பயன்படுத்தும் போக்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் தொடங்கியுள்ளார்கள். மெல்ல மெல்லச் சீரடைந்துவரும் தமிழ் முஸ்லிம் உறவுநிலையை மோசமான தன்மைக்கு இட்டுச் செல்லும் பேரினவாதத்தின் கனவுக்கு இந்த முஸ்லிம் அமைச்சர்கள் நனவுருவம் கொடுத்துவிடுவார்களோ? என்ற அச்சமே சாதாரண தமிழ்,முஸ்லிம் மக்களிடையே எழத்தொடங்கியுள்ளது.

# குற்றச்சாட்டுக்கள் குறித்த அரசின் கண்டுபிடிப்பு!

ராவய-சுனந்ததேசப்பிரிய
தமிழில் வி.எஸ்.ரீ

அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சிங்கள நாளேடான தினமின, ஜனவரி 23 ஆம் திகதிய தனது பதிப்பில் கீழ்க்காணும் விதத்தில் ஆசிரிய தலையங்கம் தீட்டியிருந்தது. பிரசுரத்துக்கு முன்னர், அதற்கான அனுமதி அலரி மாளிகையினால் வழங்கப்படுவது வழக்கமானதொன்று.

"சவூதி அரேபியாவில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண் ரிசானாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுவது குறித்து பல உலகநாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இலங்கை அரசு கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. கனடாவும் கூட அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டது. அது மட்டுமன்றி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கூட சவூதி அரேபிய அரசின் அந்த முடிவுக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

ஆனால் சவூதி அரேபிய அரசோ, அத்தகைய எதிர்ப்புக்கள் எவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் நாட்டின் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர். ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் அதிகாரத் தரப்புக்களது எதிர்ப்புகளுக்கு சவூதி அரேபிய அரசு மசிந்து கொடுப்பதில்லை. நாட்டில் நடைமுறையிலுள்ள அரசமைப்பு விதிகளுக்கு அமையச் செயற்படுவதே நியாயமானது என்பது சவூதி அரேபிய அரசின் நிலைப்பாடு.

சவூதி அரேபியாவின் அரசமைப்புக் குறித்து பல தரப்பட்ட கருத்துக்கள் நிலவக்கூடும். ஆனால் அவர்கள் முக்கியமாக தமது அரசமைப்பையும், சட்டத்தையும் பாதுகாப்பதற்குக் கடமைப்பட்டுள்ளனர். அந்த வகையில் ரிசானாவின் மரண தண்டனை தொடர்பாக அரசியல் ரீதியில் எம்மால் எதிர்ப்புக் காட்ட இயலாது."

## ரிசானாவின் மரணதண்டனை குறித்த கருத்து வெளிப்பாடு

மேற்குறித்த கருத்து நிலைப்பாட்டின்படி, ரிசானாவுக்குக்கான மரணதண்டனை தொடர்பாக சவூதி அரேபிய அரசுக்கு எதிராக உள்நாட்டு ரீதியிலோ, சர்வதேச ரீதியிலோ வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்புக்கள் தவறானவை என்றாகிறது. அத்தகைய விமர்சனங்களை சவூதி அரேபிய அரசு கணக்கில் எடுக்காது புறந்தள்ளுவது நியாயமானதே என்றாகிறது. ஏனெனில் எந்தவொரு நாட்டுக்கும், அந்த நாட்டின் அரசமைப்பு, ஏகாதிபத்திய ரீதியிலான தாயினும்சரி,மனித உரிமைகளுக்கு மாறுபாடானதாயினும் சரி, தமது அரசமைப்புக்கு அமையச் செயற்படும் உரிமை உண்டு. அதனை விமர்சிக்கும் உரிமை மற்றெவருக்கும் கிடையாது என்றாகிறது.

ஒரு நாட்டின் இறைமை மற்றும் சர்வதேசத்துடனான அதன் தொடர்புகள் சம்பந்தமாக இலங்கை அரசியலில் காணப்படும் தவறான கருத்து நிலைப்பாடு, மேற்குறிப்பிட்ட ஆசிரிய தலையங்கத்தின் மூலமாக வெளிப்படுகிறது. உலகில் முன்னேற்றமடைந்த சகல நாடுகளும் மனித உரிமைகள் தொடர்பான பொது சட்டதிட்டங்களை ஏற்றுச் செயற்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் உலக முழுமைக்கும் பொதுவான விதத்தில் பரந்துபட்டவை எனக் கொள்ளப்படுவது, அவை குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு மட்டுமே உரியவை என மட்டுப்படுத்தப்பட இயலாதுள்ளமையினாலேயே ஆகும். எந்தவொரு நாடும், தனது நாட்டின் சட்டங்களுக்கு அமைவானதெனக் கூறி, நியாயமான வழக்கு விசாரணை பெறுவதின்றி எவருக்கும் மரண தண்டனை விதிக்கும் உரிமையைக் கொண்டிருக்கவில்லை. அதே போன்று குறிப்பிட்ட வயதெல்லையைப் பூர்த்தி செய்யாத வயதில் குறைந்தோராகக் கருதப்பட வேண்டிய எவருக்கும் மரணதண்டனை வழங்குவதும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானவையே. ரிசானா விடயத்தில் அவர் மீதான குற்றத்துக்கான நியாயமான விசாரணை மேற்கொள்ளப்படாதது மட்டுமன்றி, குறிப்பிட்ட வயதெல்லையைப் பூர்த்தி செய்யாத வயதில் குறைந்தவர் என்ற பிரிவுக்குள் இருந்த சமயத்தில் அவர் மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றத்துக்கான தண்டனையாக மரணதண்டனை விதிக்கப்பட்டது. இந்த இரு காரணங்களின் அடிப்படையில் ரிசானாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக சவூதி அரேபிய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை உலகில் சகலருக்குமே உள்ளது.

தம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கு நியாயமான விசாரணை நடைமுறை கடைக்கொள்ளுமாறு கோருவதற்கான உரிமை உலகில் சகலருக்கும் உள்ளதொன்று. ஆனால் அத்தகைய உரிமைக்கான சரத்துக்கள் சவூதி அரேபியாவின் அரசமைப்பில் குறித்தொதுக்கப்படவில்லை என்பதால், குற்றத்துக்கான முறைப்படியான விசாரணைக்குக் கோரிக்கை விடுக்கும் உரிமை, குற்றம் சாட்டப்பட்ட ரிசானாவுக்கு கிட்டவில்லை என்பது அரச ஊடகமான 'தினமின' வின் வாதம். ஆனாலும் ரிசானாவின் கழுத்தைத் துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றப்படுவது தொடர்பாக சவூதி அரேபிய அரசுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தக்கூடாது என்ற கருத்து நிலைப்பாட்டை இந்த நாட்டின் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

## குற்றவியல் பிரேரணை குறித்த கோணப்பார்வை

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணை விவகாரத்தின் போதும் அரசின் அணுகுமுறை இதே விதத்திலேயே அமைந்தது. அரசமைப்பு விதிகளுக்கமையவே பிரேரணை முன்வைக்கப்பட்டதாகவும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது வெளிநாடுகளின் சதியின் ஒரு பகுதியே என்பதும், வெளிநாடுகளுக்கு இவ்விடயத்தில் தலையிடும் உரிமையெதுவும் கிடையாது என்பதும் அரசின் நிலைப்பாடாக அமைந்திருந்தது.

அலரி மாளிகையினால் நிர்வகிக்கப்படும் அந்தப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மைக்கு மீறி இலங்கை அரசின் செயற்பாடுகளை விமர்சிப்பதாகவும், அவருக்குப் பாடமொன்று கற்பிக்கப்பட வேண்டுமெனவும், அவரைப் போன்றோருக்கு சமூகத்தில் சுதந்திரம் வழங்கப்படக்கூடாதெனவும் கருத்து வெளியிடப்பட்டிருந்தது. இதிலிருந்து அரசின் நிலைப்பாடு சரியோ பிழையோ, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல என அந்த ஆசிரிய தலையங்கம் வலியுறுத்த முயன்றுள்ளது. சர்வதேச பிரகடனங்களுக்கு மதிப்பளிக்காது முறையற்ற விதத்தில் தாம் பதவிவிலக்கப்பட்டுள்ளதாக ஷிராணி பண்டாரநாயக வெளியிட்ட கண்டனத்தை விமர்சிக்கும் நோக்கிலேயே அந்த ஆசிரிய தலையங்கம் வரையப்பட்டுள்ளதாகக் கருத முடிகிறது.

அந்த வகையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பாக அரசின் ஆதரவுத் தரப்புக்களது கருத்துப்படி, இலங்கை மீண்டும் ஒரு தடவை சர்வதேசச் சதியில் சிக்கிக்கொள்ள நேர்ந்துள்ளது. அத்துடன் இலங்கையின் பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தப்படும் விமர்சனங்கள் மற்றும் தலையீடுகள் துரோகத் தனமானவை எனச் சொல்லாமல் சொல்ல விளைகின்றது அந்த ஆசிரிய தலையங்கம்.

உண்மையில் போர் இடம்பெற்ற வேளையில், போரை முன்னெடுத்துச் செல்வதற்காக ராஜபக்ஷ நிர்வாகத்தால் இத்தகைய செயல் முறையே கடைக்கொள்ளப்பட்டது. ஆயினும் தற்போது போர் முடிவுக்கு வந்தபின்னரும்கூட அதுவே இலங்கை அரசின் அரசியல் செயற்பாட்டு நடைமுறையாக ஆகி விட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும், இன்று நீதிபதிகளது அதிகாரத்தை மட்டம் தட்ட முயலும் வாசுதேவ நாணயக்காரவும் முன்பொரு சந்தர்ப்பத்தில் அவ்வேளைய ஐ.தே.கட்சி அரசின் மனித உரிமைகளை மீறும் விதத்திலான செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபையிடம் நேரில் சென்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்த பிரமுகர்களாவர். தாம் பிசாசுடன் இணைந்தாவது, உலகின் எந்த மூலைக்குச் செல்ல நேர்ந்தாலும் சரி, இலங்கை அரசின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படவுள்ளதாக அவ்வேளையில், 1990 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

அதே போன்று இன்றைய அரசில் பிரபலமிக்க அரசியல் வாதியான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட, ஐ.தே.கட்சியிலிருந்து அரச தரப்புக்குத் தாவிய பல அரசியல் தலைவர்களும் கூட, முன்னைய அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகத்தின் தலையீட்டைக் கோரியவர்களே. இவர்களில் இலேசில் மறந்து விட இயலாத ஒருவர் இன்றைய அரசில் அமைச்சரொருவராகச் செயற்படும் எஸ்.பி.திஸநாயகா ஆவார்.

ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்த வேளையில் நீதிமன்றத்தை அவமதித்ததான குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் 2005 ஆம் ஆண்டில் எஸ்.பி.திஸநாயகாவுக்கு இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கப்பட்டது. தமது தண்டனைக்கு எதிராக அவர் சர்வதேசிவில் மற்றும் அரசியல் பிரகடனங்களின் கீழ் ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் முறைப்பாடு மேற்கொண்டார். தமது மனுவில்,

(21 ஆம் பக்கம் பார்க்க)

கந்தவனம்
கோணேஸ்வரன்

# அரசுக்கு இப்போதும் காலம் கடந்து விடவில்லை



சுதந்திர இலங்கை சோல்பரி அரசியல் யாப்பு, முதலாவது குடியரசு யாப்பு, இரண்டாவது குடியரசு யாப்பு என மூன்று அரசமைப்புக்களைக் கண்டிருக்கின்ற போதிலும் இன்றுவரை அவற்றால் மக்களுக்கு அமைதியான வாழ்வை ஏற்படுத்த முடியாமல் திண்டாடுகிறது.

அரசியல் யாப்புக்களின் குறைகள் ஒருபுறம், அரசியல் யாப்பை எழுதியவர்களின் மனநிலை மறுபுறம், இலங்கையை ஆண்டு வந்த அரசுகளின் செயற்பாடுகள் இன்னொருபுறம் என அமைந்து போனதால் 65ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்யப்படுகின்ற இவ்வேளையிற்கூட தமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்துடன்தான் தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள்.

1978இல் நடைமுறைக்கு வந்த இரண்டாவது குடியரசு அரசியல் யாப்புக்கூட 18முறை திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் அதனைக்கூட ஆரோக்கியமான ஒரு யாப்பாக இலங்கை ஆட்சியாளர்களினால் கட்டியெழுப்ப முடியவில்லை.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளும் தமது வாழ்நாளை அவசரகால விதிகளிடம் ஒப்படைத்தே காலந்தள்ளி இருக்கின்றன. சாதாரண சட்டங்களால் மக்கள் ஆளப்பட்ட காலங்களைவிட அவசரகாலச் சட்டங்களால் அவர்கள் ஆளப்பட்ட காலந்தான் அதிகமானது என்ற நிலை நிலவுகிறது.

தமிழர்களின் குறைகளைத் தீர்க்கவென்று பதின்மூன்றாவது அரசியல் திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது. இத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அண்டை நாடான இந்தியாவும் இலங்கைக்கு துணை நின்றது. ஆனால் அச்சட்டத்தின் பல விதிகள் இன்றுவரை ஏட்டளவில் மட்டுந்தான் காணப்படுகின்றன. சட்டம் இருந்தும் அதனை நடைமுறைப்படுத்தாமல் கால்நூற்றாண்டு காலம் வீணடிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் மூலம் பயன்பெறக்கூடிய ஒரு தலைமுறையினரின் வாழ்நாள்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

சட்டப்படியேதான் தாம் கருமங்களை ஆற்றுவதாகப் பீற்றிக் கொள்ளும் இலங்கை ஆட்சியாளர்கள், பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாகவே நடைமுறைப்படுத்தியிருந்தால் ஓரளவிலாவது நாட்டில் அமைதியைக் கொண்டு வந்திருக்க முடியும். தமிழர்களின் மனக் குமுறல்கள் சற்று அடங்கிக்கூடப் போயிருக்கும்.

ஆனால், பேரவலமான விளைவுகளை எதிர்கொண்டாலும் பரவாயில்லை பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் சொல்லப்பட்ட வகையில் மாகாண சபைகளை இயங்கவிடமாட்டோம் என்ற சபதத்துடன் மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகிறார்கள். இலங்கை ஒரு சுதந்திர நாடு, அதில் வாழும் நாங்களும் சுதந்திர மக்களே என்று தமிழர்கள் மனந்திறந்து கூறுமளவுக்கு இலங்கையில் இன்றுவரை எந்த மாற்றமும் இடம்பெறவில்லை.

தமிழ்ப் போராளிகள்தான் எமது செயற்பாட்டுக்கு இடையூறாக இருக்கிறார்கள், அவர்களை அழிப்பதற்கு உதவுங்கள், அதன்பின்னர் தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டிய நலன்களை நாம் வழங்குவோமென்று உலக நாடுகளிடம் இரந்து பெற்ற உதவிகளெல்லாம் இலங்கை அரசால் சுயநலப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதவிகள் வழங்கிய நாடுகளே கவலைப்படுமளவுக்கு காரியங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இதனால் இன்று இலங்கை உலக அரங்கில் தனிமைப்பட்டுப் போகத் தொடங்கியுள்ளது. மனித உரிமை மீறல்களில் முன்னணி வகிக்கும் நாடுகளுள் ஒன்றாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. உலக நாடுகளின் கண்டனங்களுக்கும் கேலிப் பேச்சுகளுக்கும் இலக்காகி வருகின்றது. இவ்வருட இறுதியில் இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாடு இங்கு நடக்குமா? நடக்காதா? என்ற ஐயம் இலங்கை அரசுக்கே ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை பொதுநலவாய உறுப்பு நாடுகள் ஏன் புறந்தள்ள முயல்கின்றன என்ற காரணங்களை ஆராய்ந்து அவற்றைச் சரிசெய்யும் நோக்கம் இலங்கைக்கு இப்போதுகூட ஏற்படவில்லை. மாறாக, இலங்கையில் பொதுநலவாய மாநாடு ஏற்கனவே திட்டமிட்டபடி இவ்வாண்டு நடைபெறாமல் போகுமானால் பொதுநலவாய அமைப்பிலிருந்தே வெளியேறிவிடப் போவதாகப் பொதுநலவாயத்தைப் பயமுறுத்தத் தொடங்கியுள்ளது.

அமெரிக்கா முடிந்ததைச் செய்யட்டும், சீனாவுடன் சேர்ந்து அமெரிக்காவுக்குப் பாடம் கற்பிக்கிறோமா இல்லையா பார் என்று மோசமாக இலங்கை சவால்விடவும் தொடங்கியிருக்கிறது. இந்தியா முரண்பட்டால் சீனாவிடம் ஓடுவேன் என்கிறது. பாகிஸ்தானை அணைத்துக் கொண்டால் இந்தியாவைப் பயப்படவைத்துவிடலாம் எனவும் கனவு காண்கிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம்பெறவிருக்கும் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை சிக்கித் திணறப் போவது உறுதி என்ற கருத்து பலமாக மேலோங்கி வருகிறது. ஆனால், இலங்கையோ எதையும் சந்திக்கத் தயார் என்று சண்டித்தனம் பேசுகிறது. உலகில் பலம் பொருந்திய பல நாடுகள் இலங்கையில் இடம்பெறும் அநியாயங்கள் பற்றியும் தமிழர் வதைப்புப் பற்றியும் வெளியிடும் கண்டனங்களை இலங்கை வேடிக்கையாக எடுத்துக்கொள்கிறதோ என்று தோன்றுகிறது.

இப்போதுகூடக் காலம் கடந்து போய்விடவில்லை. ஆட்சியாளர்கள் உண்மையில் மனந்திருந்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசித் தமிழர்களுக்கு ஓர் நீதியான தீர்வை வழங்கி உலக அரங்கில் தன்னை மீளவும் உயர்த்திக்கொள்ள முடியும். உலக அரங்கில் தனக்கு ஏற்பட்ட அவப்பெயரை நீக்குவதோடு இலங்கையின் அனைத்து மக்களுடைய நல்வாழ்வையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினாலும் தமிழர்கள் இனிமேல் அதனால் திருப்திகொள்ளப் போவதில்லை. ஏனெனில், கடா அரசு நாளை அதன் பலாபலன்களைப் பறித்து விடவும் கூடும். தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் உண்மையான நம்பிக்கையைப் பெற அரசு, அரசியல் யாப்பில் பல திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் அல்லது முற்று முழுதாக மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு நிகழும்பட்சத்தில் மிக விரைவிலேயே எல்லா மக்களும் மகிழ்ச்சி அடையக்கூடிய நிம்மதியான இலங்கைத் திருநாட்டை உருவாக்க முடியும்.

இப்போது இலங்கை இருக்கும் நிலையில் உலக நாடுகளின் முன் பகிரங்கமான ஒரு காலக்கெடுவை அறிவித்து அதற்குள் பொருத்தமான மாற்றங்களைச் செய்ய முயல வேண்டும். மாற்றங்களைச் செய்ய முயலும்போது பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்வது நலன் பயக்கலாம்.

இலங்கை அரசானது கூட்டாட்சிக் குடியரசாக இருக்கவேண்டும். கூட்டாட்சி என்ற பதம், இலங்கைத் தீவில் அமைந்துள்ள அரசுகளின் இணைப்பு என பொருள்படுதல் வேண்டும்.

இலங்கைக் கூட்டாட்சிக் குடியரசானது ஆகக் குறைந்தது நான்கு அரசுகளின் இணைப்பாகவோ அல்லது அதற்கு மேலாக ஒன்றிரண்டு கூடுதலான அரசுகளைக்கொண்ட இணைப்பாகவோ அமையலாம்.

அம்பாறை மாவட்டம் தவிர்ந்த வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட தாயகப் பகுதியாகவும், அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தாயகப் பகுதியாகவும், மலையகத்தில் நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர்ச்சியான நிலப்பகுதி மலையக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தாயகப் பகுதியாகவும் எஞ்சிய இலங்கைத் தீவின் எல்லா இடங்களும் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தாயகப் பகுதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசுகள் அமைக்கப்படல் வேண்டும்.

## பிராந்திய அரசு

சுதந்திரமான தேர்தல்மூலம் தெரிவு செய்யப்படும் சட்டவாக்கப் பிரதிநிதிகளைக் கொண்டதாகவும் இலங்கைக் கூட்டாட்சி அரசால் வழங்கப்படும் அதிகாரங்களைக் கொண்டு தம்மைத்தாமே நிர்வகிப்பதில் பூரண சுதந்திரத்தை உடையனவாகவும் பிராந்திய அரசுகள் அமைதல் வேண்டும்.

## மத்தியக் கூட்டாட்சி அரசு

சுதந்திரமான தீவு முழுவதையும் தழுவிய தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதான மத்தியக் கூட்டாட்சி அரசு இலங்கைத் தீவின் அதியுயர் பீடமாக அமைதல் வேண்டும். பிராந்திய அரசுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா அதிகாரங்களையும் தீவு முழுவதும் செயற்படுத்தும் உரிமை உள்ளதாக அது அமைதல் வேண்டும்.

## ஆட்சி முறைமை

கூட்டாட்சியின் தலைவராக ஜனாதிபதி விளங்குதல் வேண்டும். இவர் மக்களின் நேரடி வாக்குகளின் மூலம் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

பிராந்திய அரசுகளின் சட்டவாக்கப் பிரதிநிதிகளால் வாக்களிக்கப்பட்டு துணை ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்படல் வேண்டும். இவர் ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதியின் இனத்துவம் சாராத ஒருவராக இருப்பதுடன் ஜனாதிபதியின் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவராகவும், ஜனாதிபதி நாட்டில் இல்லாத அல்லது பணிபுரிய இயலாத காலத்தில் அவரின் பொறுப்புகளை ஆற்றவல்லவராகவும் இருத்தல் வேண்டும்.

## பிரதமர் அமைச்சரவை

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற ஒருவர் பிரதமராக தெரிவு செய்யப்பட வேண்டும். பிரதமர் ஜனாதிபதியின் ஒப்புதலோடு தன்னால் பெயர்குறித்து நியமிக்கப்படும் நபர்களைக்கொண்ட அமைச்சரவைக்கு தலைவராக இருப்பார்.

அமைச்சரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஜனாதிபதியின் ஒப்புதலோடு பிரதமர் தீர்மானித்த எண்ணிக்கையாக அமைதல் வேண்டும்.

## மத்திய அரசின் அதிகாரங்கள்

நிதி, நீதி, வெளியுறவு, பாதுகாப்பு என்பவை முற்று முழுதாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கல் வேண்டும். எவ்வாறெனினும் பிராந்திய அரசுகளின் உள்ளகச் சட்ட ஒழுங்குகளைக் கருத்திற்கொண்டு பிராந்திய காவல்துறை அமைக்க அவ்வரசுகளுக்கு உரிமை தரப்படல் வேண்டும்.

## காவல்துறை

நாடு முழுவதற்குமாக மத்திய அரசின் காவல்துறை இயங்குதல் வேண்டும். தேசிய பிரச்சினைகள், பிராந்திய எல்லைகள் தாண்டிய பிரச்சினைகள் என்பவற்றில் கவனம் செலுத்துவதோடு பிராந்திய காவல்துறையின் வேண்டுகோளில் மட்டும் பிராந்திய காவல்துறைக்கு உதவலாம்.

## ஆயுதப்படை

ஆயுதப்படையின் தலைவராக ஜனாதிபதியே இருப்பார். ஆயுதப்படைகளின் ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதவியுயர்வு, பணியாற்றல், பதவிநீக்கம் என்பவற்றுக்கு அவரே பொறுப்பாக இருப்பார்.

ஆட்சேர்ப்பின்போது இன வீதாசாரம் பேணப்படுவதுடன் இனத்துவ ரீதியான படைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டு சாதாரண காலங்களில் அவற்றை உறங்கு நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

உட்பூசல் காரணமாக பிராந்திய அரசு தலைவர்களுக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பத்திலோ அல்லது அத்தகைய உதவி செய்யப்படல் வேண்டும் என்று ஜனாதிபதி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்திலோ அவ்வப் பிராந்திய இனத்துவத்துக்குரிய படைப்பிரிவின் மூலம் அப்பூசல்கள் ஒடுக்கப்படல் வேண்டும். அவ்வாறு முடியாத சந்தர்ப்பத்தில் மட்டுமே ஏனைய இனத்துவப் படைப் பிரிவுகள் ஈடுபடுத்த வேண்டும்.

## பிராந்திய அரசு அதிகாரங்கள்

மத்திய அரசின் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாவித அதிகாரங்களை தனது ஆட்சி எல்லைக்குள் நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை பிராந்திய அரசு கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறெனினும் தேசிய இணக்கப்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் இடையூறாக அமையும் அதிகாரப் பிரயோகத்தை பிராந்திய அரசு செய்தல் ஆகாது.

## மதம்

தீவின் எல்லைக்குள் உட்படுத்தப்பட்ட எந்த அரசும் மதச் சார்புடையதாக அமையக்கூடாது. அதேவேளை இலங்கையர் எவரும் தான் ஏற்கும் மத நம்பிக்கை அனுட்டானங்கள் என்பவற்றைக் கைக் கொள்வதற்கும் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அரசு உத்தரவாதம் தருவதாக அமைதல் வேண்டும். மதப்பூசல்கள், மத மாற்றப் பிரச்சினைகள் என்பவை தோன்ற இடமளிக்காத வகையில் அரசு சகல மதங்களையும் சமமாக நடத்துதல் வேண்டும்.

## மொழி

சிங்களமும், தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் அமைதல் வேண்டும்.

அரசப் பதிவேடுகளைப் பொறுத்த வரையில் மத்திய அரசோ, பிராந்திய அரசுகளோ தாம் தீர்மானிக்கும் மொழியில் அவற்றைப் பேணலாம்.

## போதனாமொழி

பாடசாலை பிள்ளைகளுக்கான போதனாமொழி தாய்மொழியாகவே அமைதல் வேண்டும். தாய்மொழிக் கல்வியுடன் சிங்களமொழிமூல மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாக தமிழும், தமிழ்மொழிமூல மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாகச் சிங்களமும் இருசாராருக்கும் சர்வதேச மொழியாக ஆங்கிலமும் கட்டாயமாகப் போதிக்கப்படல் வேண்டும். பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர் தனது தாய்மொழியுடன் ஏனைய இரண்டு மொழிகளையும் பயன்படுத்தக் கூடியதாகக் கல்வி அமைதல் வேண்டும்.

## அரசியல் அமைப்புத் திருத்தங்கள்

எந்தவொரு மொழிக்கோ, இனத்துக்கோ, மத நம்பிக்கைக்கோ, பண்பாட்டுக்கோ ஊறு விளைவிக்கக்கூடிய எச்சட்டமும் எக்காரணங்கொண்டும் ஆக்கப்படலாகாது. அதிகாரப் பகிர்வு சம்பந்தமான சட்ட மாற்றங்கள் கொண்டுவர நேருமிடத்து பின்வரும் நெறிமுறைகளுக்கமைவாகவே இடம்பெறல் வேண்டும்.

அதிகாரப்பகிர்வு போதாமை அல்லது அதிகரிப்புத் தேவை எனக் கருதும் சட்டங்கள் பிராந்திய அரசுகளால் ஆக்கப்பட்டு மதித்து எப்பிராந்திய அரசு இச்

(21 ஆம் பக்கம் பார்க்க)

# நிம்மதி எமக்குள்ளே

கஸ்தூரி மான் என்ற ஒருவகை மான் உண்டு. அதன் கொம்புகளிலிருந்து நறுமணம் வீசும். அந்த நறுமணத்தை அந்த மான் உடனே அறிவதில்லை.

அந்த நறுமணம் வேறு எங்கிருந்தோ வருகிறது என்று அது ஆரம்ப கட்டத்தில் நினைக்கிறது. நாளடைவில் அந்தக் கஸ்தூரி மானுக்குத் தெளிவு வருகிறது.

அந்த நறுமணம் என்பது வெளியிலிருந்து வரவில்லை. தனது கொம்புகளில் இருக்கும் நறுமணம் தான் அது என்று புரிந்து கொள்கிறது.

அதே போல் மனிதர்கள் நிம்மதியை வெளியே தேடுகிறார்கள்.

வெளியே என்று சொல்வது வெளியிலிருக்கும் லௌகீகப் பொருள்களால் நிம்மதி வரும் என்று கருதுவது. பணத்தை மனிதன் தான் உண்டு பண்ணுகிறான்.

பணம் மனிதனை உண்டு பண்ணவில்லை. அப்படியிருக்கப் பணத்தால் தனக்கு நிம்மதி கிடைக்கும் என்பது வேதனையல்லவா? நிம்மதி என்ற நறுமணம் வெளியிலுள்ள பணத்தாலே பட்டம், பதவியாலே வருவதில்லை.

அந்த நறுமணம் எமக்குள்ளேயே இருக்கிறது. கஸ்தூரி மான் முதலில் தன்னிடமுள்ள நறுமணத்தை அறியாதது போல் மனிதர்களும் இதனை அறியாமல் இருக்கிறார்கள். அதனால் தான் எந்த வகையிலாவது பணத்தைக் குவித்து விட வேண்டும் என்று துடிக்கிறார்கள்.

போகக் கூடாத பாதைகளில் போகிறார்கள். செய்யக்கூடாத காரியங்களைச் செய்கிறார்கள். தன் மானத்தை விற்கிறார்கள். தாம் தரம் கெட்டுப் பொருளைப் பெறவும் தயாராகிறார்கள்.

இப்படியெல்லாம் பணத்தைக் குவிப்பவர்கள் நிம்மதியைப் பெறுகிறார்களா என்றால் ஒருக்காலும் பெறுவதில்லை. இருக்கும் இடத்தை விட்டுவிட்டு இல்லாத இடத்தில் தேடினால் எப்படி நிம்மதி கிடைக்கும்? உண்மையான நிம்மதி என்பது எமக்குள்ளேயே இருக்கிறது.

நாம் என்று இங்கு குறிப்பிடுவது அழியக்கூடிய இந்த உடலைக் குறிப்பதல்ல.

இந்த உடல் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது. எதனால் ஆக்கப்பட்டதோ அதனிடமே இந்த உடல் ஐக்கியமாகிறது.

அதாவது மண்ணிலே தோன்றிய இந்த உடல் மண்ணுக்கே சொந்தமாகிறது.

இந்த அழியும் உடல் கூட்டுக்குள்ளேயே அழியாத ஆத்மா பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

சான்றோர்களிலிருந்து சண்டாளர் வரை பேதமின்றி இந்த ஆத்மா பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த அடிப்படைப் பாடத்தை இன்னும் நாம் படிக்கவில்லை. இதை நினைக்கும் போது வியப்பாகவே இருக்கிறது. பள்ளிகளில் ஆரம்பப் பாடமாகிய உயிரெழுத்துக்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைப் பார்க்கிறோம்.

அ, ஆ, இ, ஈ என்று தொடங்கி குழந்தைகள் முதலில் வாசிப்பது இந்த உயிரெழுத்துக்களைத்தான். அதே போல் வாழ்க்கை என்னும் ஆரம்பப் பாடத்தில் மனிதர்கள் முதலில் படிக்க வேண்டிய பாடம் நம் உடல் அல்ல. ஆத்மா என்பதைத்தான். துரதிர்ஷ்டவசமாக இந்த ஆரம்பப் பாடத்தை இன்னும் சரியாக ஆரம்பிக்கவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. 'வந்த வேலையை விட்டுவிட்டுப் பந்தல் காலைப் பிடிக்கிறான்' என்ற பழமொழி ஒன்று உண்டு. அதே போல் தற்காலத்தில் மக்களுக்குப் போதனை செய்யும் போது எல்லா விளக்கங்களும் தரப்படுகிறது.


ஆனால் ஆத்மா தான் உன்னுடைய உண்மையான வடிவம் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல மறந்து விடுகிறார்கள்.

மகாபாரதக் காவியத்தில் பகவத் கீதை தான் கருப்பொருளாக இருப்பது. மற்ற சம்பவங்களெல்லாம் அந்தக் கருப்பொருளை விளக்குவதற்காக அமைக்கப்பட்ட சாதனங்கள். சாதனங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நாம் அந்தக் கருப்பொருளைக் கறிவேப்பிலை போல் பயன்படுத்துகிறோம்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# கிராமப்புறக் கல்வி வளர்ச்சியில் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை




**ஞானி**

யாழ். மாவட்டத்தில் கல்விப் பாரம்பரியத்தில் புத்தூருக்கு தனித்துவமான இடம் உண்டு. பெரும் தனவந்தரும் நிலச் சுவாந்தருமான புத்தூர் மழவராயர் கந்தையா கல்வி, ஆன்மிகம், அறம் ஆகிய மூன்றையும் மேம்படுத்துவதற்கு தன்னால் இயன்ற மட்டும் தொண்டாற்றியவர்.

தனது சொத்துக்களை புத்தூரை மத்தியாக வைத்து கல்விக்காக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, ஆன்மிக மேம்பாட்டை கருத்தில் கொண்டு புத்தூர் சிவன் கோயில், அறப்பணியாக புத்தூர் அன்னசத்திரம் மூன்றையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட நிலையில் ஒரே சூழலில் ஸ்தாபிதம் செய்து வளர்த்தவர். அத்துடன் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கியதோடு கல்லூரி வளவில் சோமஸ்கந்தர் ஆலயத்தையும் நிறுவி மாணவர் ஆத்மிக வளர்ச்சியை வழிப்படுத்தியவர்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் தரம் 1 முதல் தரம் 13 வரையான வகுப்புக்களில் மாணவர் கல்வி பயில்வதற்கு வசதி இருந்தது. உயர்தரப் பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பிரிவுகளிலும் செயற்பட்டதோடு தரம் 1 முதல் 13 வரையான வகுப்புக்களில் இரண்டாயிரம் மாணவர்கள் வரையில் கல்வி கற்றனர்.

ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இசுறு பாடசாலை கட்டமைப்பில் உள்ளீர்க்கப்பட்டதை அடுத்து இசுறு பாடசாலை நிபந்தனைக்கு அமைய கல்லூரியின் ஆரம்பபிரிவு வேறாக்கப்பட்டு தனிப்பாடசாலையாக செயற்படுவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியது. அந்த வகையில் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி முதல் ''புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை'' என்ற பெயரோடு தனிப் பாடசாலையாக செயற்படத் தொடங்கியது. புதிய பாடசாலையின் அதிபராக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த இ.கோகுலராகவன் நியமிக்கப்பட்டார்.

கல்லூரியின் ஆரம்பப் பிரிவு வழமையாகச் செயற்பட்ட பகுதியை உள்ளடக்கி 13 வகுப்பறைகளோடு உள்ளடக்கிய 8 பரப்பு கல்லூரி நிர்வாகத்தால் புதிய ஆரம்பப் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. சோமஸ் கந்தக் கல்லூரியின் அதிபர் எஸ். இராஜமனோகரனும் கல்லூரிச் சமூகமும் தாராள சிந்தனையோடும் மனிதாபிமானத்தோடும் புதிய ஆரம்பப் பாடசாலை செயற்படுவதற்கான சகல வள வசதிகளையும் வழங்கி உதவினர்.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை சோமஸ் கந்தக் கல்லூரிக்கு மேற்குப் புறத்தில் சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் மூன்று மூன்று வகுப்புக்களாக தரம் -1 முதல் தரம் 5 வரையான ஐந்து வகுப்புக்களிலும் 15 வகுப்புக்கள் செயற்படுகின்றன. அதிபரோடு சேர்த்து மொத்தம் 17 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 486 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

சோமஸ்கந்தக் கல்லூரியுடன் இணைந்த நிலையில் ஆரம்பப்பிரிவு செயற்பட்ட காலப் பகுதியில் ஆரம்பப் பிரிவு பெரியளவில் துலங்கவில்லை என்றும் ஆரம்பப் பிரிவை தனிப்பாடசாலையாக வேறுபடுத்தி செயற்படவைப்பது ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்து குறித்த காலப்பகுதியில் நிலவிய போதிலும் அதனை செயன்முறைப்படுத்துவதற்கு ஏற்புடையதாக காலம் கனியவில்லை. ஆனால் 2010 ஆம் ஆண்டு அதற்கு ஏற்புடைய காலமாக இருந்தது. இசுறுப் பாடசாலை கட்டமைப்பு உருவாகிய சூழ்நிலை.

> புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் மத்தியில் சோமஸ் கந்தர் ஆலயம் அமைந்துள்ளது. அதனைச் சூழ மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கான வகுப்பறைகள் அமைந்துள்ளன. இந்த களநிலைக் கட்டமைப்பு பெயருக்கு ஏற்புடையதாகவும் மாணவர்களின் சமய சிந்தனைக்கு வளம் சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலையின் மத்தியில் சோமஸ்கந்தர் ஆலயம் அமைந்துள்ளது. அதனைச் சூழ மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கான வகுப்பறைகள் அமைந்துள்ளன. இந்த களநிலைக் கட்டமைப்பு பெயருக்கு ஏற்புடையதாகவும் மாணவர்களின் சமய சிந்தனைக்கு வளம் சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

புதிய பாடசாலையாக இந்து ஆரம்பப் பாடசாலை செயற்படுவதற்கு முந்திய காலச்சூழலில் நிலவிய கருத்து நிலை முற்றாக மறைந்து பெற்றோரும் பாடசாலைச் சமூகமும் புதிய உத்வேகத்துடன் ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையோடு ஈடுபாடு கொண்டு ஒத்துழைத்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் அதிபரும் பெற்றோருடன் மிக நெருக்கமான முறையில் தொடர்புகளைப் பேணிவருவது பாடசாலை சமூகத்தை நம்பிக்கை கொள்ளச் செய்துள்ளது.

(வளரும்)



பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். அருகில் பிரதி அமைச்சர் சரண குணவர்தன, அமைச்சின் பணியாளர் பலர் காணப்படுகின்றனர்.

# இந்தோனேஷிய படகு விபத்து குறித்து விசாரணை ஆரம்பம்

**படகில் இருந்து 22 இலங்கையர்கள் காப்பாற்றப் பட்டுள்ளனர்.**

கொழும்ப,பெப்.1

இந்தோனேஷியக் கடற்பரப்பில் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலருடன் பயணித்த படகொன்று விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் அந்தநாட்டு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

25 புகலிடக் கோரிக்கையாளர்களுடன் பயணித்த படகு, இந்தோனேஷியாவின் அதியுயர் பாதுகாப்புடனான சிறைச்சாலை அமைந்துள்ள தீவை அண்மித்த பகுதியில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின் போது இரண்டு பேர் கடலில் மூழ்கி உயிரிழந்திருந்தனர். அத்துடன், மேலும் ஒருவர் காணாமற் போயிருந்தார்.

இவர்கள் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே படகு விபத்துக்குள்ளானது என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. படகில் பயணித்த 22 இலங்கையர்கள் காப்பாற்றப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச காணிகளை விற்பதை உடன் நிறுத்தவேண்டும்

**அரச அதிகாரிகளுக்கு பிரதமர் உத்தரவு**



கொழும்பு,பெப்.1

அரசுக்குச் சொந்தமான காணிகளைத் தனியார் துறையினருக்கு முறைகேடான முறையில் விற்பனை செய்வதை உடன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரத்ன அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தொலுவ பிரதேச செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பிரதேச இணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டி, ஹல்ஓய கிராமத்தில் 10 ஏக்கர் அரச காணியை தனியார்துறையினருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது.

அரச காணி விற்பனையில் சில அரச நிறுவனங்கள் முன்னின்று செயற்படுகின்றன. இந்தக் காணி மோசடி விற்பனை தொடர்பாக ஜனாதிபதிக்கும் அறிவிக்கப் படும்.

வர்த்தகர்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக் கொடுப்பது அநீதியாகும். இது தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும். அது தொடர்பாக காணிச் சீர்திருத்த ஆணைக் குழு அதிகாரிகளுக்கு பல முறை அறிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (ச)

# உண்டியலில் காசு போட்டாலும் கைது செய்யும் நிலை வரலாம்

**சிறிதுங்க ஜயசூரிய தெரிவிப்பு**

கொழும்பு,பெப்.1

கோயில்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களில் உள்ள உண்டியல்களில் காசு போட்டாலும் கைது செய்ய வேண்டிய நிலைமை வரலாம்.

இவ்வாறு ஐக்கிய சோசலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய சந்தேகம் தெரிவித்துள்ளார்.

'அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்னும் தொனிப் பொருளில் கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருந்த காலத்தில் செய்யமுடியாததை சாதாரண சட்டம் நடைமுறையில் இருக்கின்ற காலத்தில் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

48 மணிநேரம் தடுத்து வைக்கலாம் என்பது போர்க் காலத்தை விடவும் அபாயகரமானது.

அரசமைப்பின் மீது எமக்கு நம்பிக்கையில்லை. அதைக் கிழித்து வீசிவிட்டு புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும்.

ஏனெனில் கோயில்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்களில் வைக்கப்பட்டுள்ள உண்டியல்களில் காசு போடுகின்றவர்களையும் இனிமேல் கைது செய்யும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

அமெரிக்கப் பிரதிநிதிகளை எதிர்க்கட்சிகள் அழைக்கவில்லை. அரசே அவர்களுக்கு விசாவுக்கான அனுமதியைக் கொடுத்தது.

இவ்வாறான நிலையில் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பாடம் நடத்தவேண்டும்.



அரசு இன்னும் ஐந்து வாரங்களுக்குள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். - என்றார். (ச)

## கற்பிட்டி கடற்பரப்பில்

# இறந்து ஒதுங்கிய 42 டொல்பின்கள்



புத்தளம், கற்பிட்டி கடற்பரப்பில் பெரும் எண்ணிக்கையான டொல்பின்கள் உயிரிழந்து வருகின்றன என்று அந்தப் பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர். இந்தக் கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் 42 டொல்பின்கள் உயிரிழந்துள்ளன என்று அவர்கள் கூறினர்.

தடைசெய்யப் பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி சிலரால் மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் நடவடிக்கைகளினாலேயே டொல்பின்கள் உயிரிழக்கின்றன என்று மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச)

# ஹங்கேரியகுழு இலங்கை வருகை

கொழும்பு,பெப்.1

ஹங்கேரிய சபாநாயகர் லெஸ்லோ கோவர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கை வந்தடைந்தனர்.

அவர்களை விமான நிலையத்தில் வைத்து பிரதி சபா நாயகர் சந்திம வீரக்கொடி வரவேற்றார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் குறித்த பிரதிநிதிகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். (ச)

# பொலிஸார் மீது கொள்ளையர்கள் சூடு பதில் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் சாவு

**ஏனையோர் தப்பியோட்டம்**

கொழும்பு,பெப்.1

வழிப்பறி கொள்ளையர்களை பிடிக்கச் சென்ற பொலிஸார் மீது கொள்ளையர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டை அடுத்து, பொலிஸார் மேற்கொண்ட பதில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மினுவாங்கொட- குருநாகல் வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதங்களுடன் கும்பல் ஒன்று வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக மினுவாங்கொட பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தொலைபேசி அழைப்பையடுத்து விசேட பொலிஸ் குழு சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்து சென்றது.

குறித்த இடத்துக்கு பொலிஸார் சென்றபோது அங்கிருந்து கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் மயானம் ஒன்றுக்குள் நுழைந்து அங்கு பதுங்கியிருந்தவாறு பொலிஸாரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் மினுவாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜூட் கிஷாந்த பெர்னாண்டோ (வயது-33) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து ரி-56 ரக துப்பாக்கி, ரவைகள்- 10, வெற்றுத் தோட்டாக்கள்-4, கொள்ளையடிக்கப்பட்ட தங்க வளையல்களையும் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் பல்வேறு கொள்ளைகளுடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்ற ஏனைய கொள்ளையர்களைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.-என்றார். (ச)

# விடைத்தாள் மீள்பரிசீலனைக்கு 22 வரை விண்ணப்பிக்க முடியும்

**பரீட்சைகள் ஆணையாளர் சொல்கிறார்**

கொழும்பு,பெப்.1

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள்பரிசீலனைக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

பாடசாலை விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை தத்தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

பெறுபேறுகளுடன், விடைத்தாள் மீள் பரிசீலனைக்கான விண்ணப்பப்படிவங்களும் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பரீட்சைக்கு தோற்றிய தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேசிய செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் அறிவித்தலுக்கு அமைய மீள் பரிசீலனைக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான தகவல்களை 011 2 78 42 08, 011 2 78 45 37, 0113 18 83 50, 011 3 14 03 14 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அறியமுடியும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரசு காரியங்களில் அனுகூலம் உண்டு. வீடு, வாகனச் செலவுகள் குறைவடையும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**இடபம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மிதுனம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பெண்களுக்கு பெற்றோரின் ஆதரவு கிட்டும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்திலே திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**சிங்கம்:** திறம்பட செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**கன்னி:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியமாக இருக்க வேண்டாம்.

## நாளை

*தை -20 சனிக்கிழமை 02.02.2013*
*திதி: ஷஷ்டி காலை 08.24 வரை*
*நட்சத்திரம்: சித்திரை பி.ப. 05.31 வரை*
*சுபநேரம்: 03.35- 05-05 வரை*
*ராகுகாலம்: 09.35- 11.05 வரை*

**துலாம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களிடம் உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடி வந்து நீங்கும்.

**விருச்சிகம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள். பணவரவு உண்டு.

**மகரம்:** யதார்த்தமாகப்பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். விருந்தினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**கும்பம்:** எதையும் திட்டமிட்டு செயற்படுங்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மீனம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பெற்றோரின் உடல் நிலை சீராக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | 6 | 4 | 2 | | | |
| | | 4 | | 5 | 8 | | 7 | |
| | | 9 | 7 | | | 4 | 6 | |
| | | 2 | | 7 | | | 5 | |
| 9 | 5 | | | | | | 2 | 3 |
| | 4 | | | 2 | | 8 | | |
| | 9 | 1 | | | 6 | 2 | | |
| | 3 | | 1 | 8 | | 5 | | |
| | | | 2 | 9 | 4 | | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 3 | 5 | 2 | 4 | 8 | 7 | 9 |
| 5 | 8 | 7 | 6 | 3 | 9 | 2 | 4 | 1 |
| 2 | 9 | 4 | 8 | 7 | 1 | 5 | 6 | 3 |
| 8 | 7 | 9 | 1 | 4 | 3 | 6 | 5 | 2 |
| 6 | 3 | 1 | 2 | 5 | 7 | 4 | 9 | 8 |
| 4 | 5 | 2 | 9 | 8 | 6 | 1 | 3 | 7 |
| 9 | 1 | 8 | 3 | 6 | 5 | 7 | 2 | 4 |
| 7 | 2 | 6 | 4 | 9 | 8 | 3 | 1 | 5 |
| 3 | 4 | 5 | 7 | 1 | 2 | 9 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை உருவாக்க வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டுள்ளது. (உள்ளே இருக்கும் சிறு பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படும்போது கட்டங்களிலும் 1-9 இலக்கங்கள் இடம்பெறுமாறு வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் எண்களை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## திருமதி மயில்வாகனம் பாக்கியம்

யாழ்ப்பாணம் - காரைநகர் பண்டித்தாழ்வைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் பாக்கியம் நேற்று முன்தினம் (30.01.2013) புதன்கிழமை நள்ளிரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரசாமி (முன்னாள் அதிபர், மட்/ அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயம்) மற்றும் ஆனந்தரெட்ணசாமி (எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு), ஜெயானந்தசாமி (கிழக்கிலங்கை பிரபல பௌதீகவியல் - ஆசிரியர்), நித்தியானந்தசாமி (சுரேனா ரவல்ஸ்- மட்டக்களப்பு), குணரெட்ணசாமி (நியூகீன் அச்சகம், மட்டக்களப்பு), சற்குணராஜா (கீன் கல்லூரி, சி.எம். பப்ளிகேஷன்) ஆகியோரின் பாசமிகு தாயும், வசந்தகுமாரி (ஆசிரியை, மட்/ விவேகானந்தா மகாவித்தியாலயம்), சித்தியாம்பாள், மியுரியல், கல்யாணி, ஜெனட் ஜெய சாந்தினி (மட்/ புனிதமிக்கேல் கல்லூரி), கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காயத்திரி (யாழ். மருத்துவபீடம்), காண்டீபன் (பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரசாத், பிரதாப்- மலர்மகள்,பிரதீப் (பொறியியலாளர்), ஜீட்மிதுன், புவிராஜ், தக்ஷியா, லக்ஷியா, சுரேந்ரா, சுஜித்ரா, சுபேந்திரா, அனோஜன், தசலக்ஷன், அம்சவன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சுந்தரலிங்கம், செல்லம்மா, பரமேஸ்வரி மற்றும் பூமணி ஆகியோரின் அன்புமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, பாலரட்ணம், சோமசுந்தரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மங்களராஜேஸ்வரி (லண்டன்), புவனேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் புனிதமலர் (தேவி), யோகநாதன் (யோகா ரான்ஸ்போட்), புஸ்பவதி (புஷ்பம்), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் பேபி சாந்தினி (அரசினர் போதனா வைத்தியசாலை, வவுனியா), நளினி, காலஞ்சென்ற அற்புதமலர் மற்றும் சரோசாதேவி, இராசேந்திரன் (லண்டன்), சாவித்திரிதேவி (லண்டன்), இராஜசுந்தரம் (லண்டன்), சாரதாதேவி ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டித்தாழ்வு,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 077 8418 172

(28849) (45.6)

# எல்லை நிர்ணயம் முடிந்த பின்பே கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்

## தேர்தல்கள் ஆணையாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு,பெப்.1

மட்டக்களப்பில் எல்லை நிர்ணய செயற்பாடுகள் நிறைவுற்ற பின்பே தேர்தல்களை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய உள்ளூராட்சிச் சபை தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு இணங்க உள்ளூர் அதிகார சபைகளின் எல்லைகள் நிர்ணயம் செய்யும் பணிகள் நிறைவு பெறும்வரை தேர்தல்களை நடத்த முடியாது.

மட்டக்களப்பு மாநகர சபைக்கான தேர்தல் மற்றும் எட்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல்கள் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி நடத்தப்பட்டன.

இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான பதவிக் காலம் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதியு டன் நிறைவடைந்ததை அடுத்து, அவற்றின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரை உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சரினால் நீடிக்கப்பட்டது.

அதற்கிணங்க தேர்தல்களை நடத்துவதற்கான பெயர் குறித்த நியமனங்களைக் கோரும் அறிவித்தல் கடந்த ஜனவரி மாதம் வெளியிட உத்தேசிக்கப்பட்டது. எனினும் தேர்தல்களை நடத்துதல் தொடர்பான உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதற்கிணங்க கடந்த முதலாம் திகதி முதல் அந்தத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு வர்த்தமானி அறிவித்தலினூடாக பிரகடனம் செய்தது.



அதற்கமைய உள்ளூராட்சி சபைகளின் வட்டார எல்லைகள் நிர்ணயம் செய்யும் பணிகள் நிறைவுறும் வரை மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் 8 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை நடத்தமுடியாதுள்ளது.-என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 நெற் களஞ்சியசாலைகள்

## அமைக்கப்படும் என்கிறார் கருணா

மட்டக்களப்பு,பெப்.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளின் நன்மை கருதி ஐந்து நெற் களஞ்சியசாலைகள் அமைக்கப்படவுள்ளன என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெற் களஞ்சியசாலைகள் தேசத்துக்கு மகுடம் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 200 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன .

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் தொடர்பில் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் பயன் கிடைக்கவுள்ளது. களஞ்சியசாலைகள் அமைக்கப்படுவதன் மூலம் நெல் கொள்வனவுப் பணிகள் செய்வதற்கு இலகுவாக அமையும்.-என்றார். (ச)

# மட்டு. எல்லை நிர்ணய பிரச்சினை; ஹிஸ்புல்லா - பிள்ளையான் பேச்சு



மட்டக்களப்பு,பெப்.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் எல்லை நிர்ணயப் பிரச்சினை தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான எம். எல். ஏ.எம்.ஹிஸ் புல்லாஹ், கிழக்கு மாகாணமுன்னாள்முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கு இடையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் எல்லை நிர்ணயப் பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

எல்லை நிர்ணயப் பிரச்சினை குறித்து பிரதேச செயலகங்களுடன் பேசி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சரின் ஊடக இணைப்பாளர் எம்.எஸ். எம்.சஜி தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்ஷிப்லி பாறூக், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் கீழ் பிரதேச எல்லை நிர்ணயம் செய்து முடிக்கப்படும் வரை மட்டக்களப்பில் தேர்தல் நடத்தப்படமாட்டாது என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# பாதிக்கப்பட்டோருக்கு சுகாதாரப் பொதிகள்

காத்தான்குடி,பெப்.1

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக சுகாதாரப் பொதிகள் நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த சுகாதார பொதிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை உப தலைவர்எம்.எஸ். எம்.அப்துல்லா காத்தான்குடி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தரிடம் கையளித்தார். இந்த சுகாதாரப் பொதிகள் காத்தான் குடி பிரதேச செயலகப்பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (ச)

# விவசாய அமைச்சரின் சம்பளம் பள்ளிவாசல்களுக்கு பகிர்ந்தளிப்பு



ஏறாவூர்,பெப்.1

கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தனது மாதாந்த சம்பளப் பணத்தை ஏறாவூர் பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களுக்கு பகிர்ந்தளித்தார்.

ஏறாவூர் பிரதேசத்திலுள்ள 8 பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினரை அண்மையில் சந்தித்த மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் பணத்தை அவர்களிடம் கையளித்தார்.

கிழக்கு மாகாண சபை அமைச்சர் என்றவகையில் தான் பெற்றுக்கொள்ளும் சம்பளப் பணத்தைப் பள்ளிவாசல்களுக்கு வழங்குவது என்னும் தீர்மானத்துக்கு அமைவாகவே குறித்த பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்தப் பணம் வருமானம் குறைந்த பள்ளிவாசல்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. (ச)

# குளவி கொட்டிய 2பேர் வைத்தியசாலையில் அனுமதி

நோர்வூட்,பெப்.1

நோர்வூட் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் குளவிகளின் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நோர்வூட் பகுதி தேயிலை தோட்டமொன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்தப் பெண்கள் குளவிகளின் கொட்டுக்கு இலக்கானதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குளவி கொட்டுக்கு இலக்கான இரண்டு பெண்களும் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

# நுவரெலியாவில் பனிப்பொழிவு

நுவரெலியா,பெப்.1

மேலைத்தேய நாடுகளைப் போன்று நுவரெலியா மாவட்டத்தின் சில பிரதேசங்களில் அடுத்துவரும் சில தினங்களில் கடுமையான பனிப்பொழிவு ஏற்படும்.

இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி பபோதினி கருணாபால தெரிவித்தார்.

தற்போதைய வறட்சிக் காலநிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

# வீதியிலுள்ள மண்திட்டை அகற்றுமாறு கோரிக்கை

நுவரெலியா,பெப்.1

நாவலப்பிட்டி நகரசபைக்கு உட்பட்ட சொய்சாகல சுற்றுப் பாதையில் நகரசுத்தித் தொழிலாளர்களின் குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள மண்சரிவை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட மண்சரிவைத் தொடர்ந்து சொய்சாகல பாதையில் உள்ள மண் திட்டை அகற்ற நாவலப்பிட்டி நகரசபை இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனால் இந்த வீதியில் சிறிய வாகனங்கள் மாத்திரம் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

எனவே இந்த விடயம் குறித்து நாவலப்பிட்டி நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# இஸ்லாமிய கலாசார கண்காட்சி காத்தான்குடியில் இன்று ஆரம்பம்

காத்தான்குடி,பெப்.1

இஸ்லாமிய கலாசார கண்காட்சி காத்தான்குடியில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கண்காட்சிக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று காத்தான்குடி பிரதேச செயலர் எஸ். எச்.முஸம்மில் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை முஸ்லிம்களின் பண்டைய வரலாற்றைப் பாதுகாத்துப் பேணும் நோக்கில், காத்தான்குடியில் அரும்காட்சியகம் ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகள் பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதில் ஓர் அங்கமாகவே இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு காத்தான்குடியில் தேசிய இஸ்லாமிய கலாசார கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

கண்காட்சியில் முஸ்லிம்களின் தொன்மை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கண்காட்சியை பார்ப்பதற்கு வருபவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அழகிய புராதன இடங்களையும் பார்வையிட முடியும்.

கிழக்காசியாவிலேயே முஸ்லிம்கள் செறிந்து வாழுகின்ற காத்தான்குடியின் பல சிறப்பம்சங்களை அறிந்து கொள்ளமுடியும்.

இந்தக் கண்காட்சி ஏற்பாட்டில் ஒன்பது குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. -என்றார்.

இந்தக் கண்காட்சியில் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜெகத்பாலசூரிய, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், பிரதி அமைச்சர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட செயலர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர்கலந்து கொள்வர். (ச)



இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலியா எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் ஜூலி பிஷப் தலைமையிலான நாடாளுமன்ற குழுவினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திருகோணமலைக்குச் சென்றிருந்தனர். இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்கிரமவைச் சந்தித்து கிழக்கு நிலவரம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/= ,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள் ,DVD என்பன

தொடர்பு:0770440570 (அப்பளம்)

சோனி ரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)

56, K.K.S வீதி, சுன்னாகம். (28388) (2.6.7)



## மகத்தான சாதனைகளுக்கு வாழ்த்துக்கள்

வவுனியா மாவட்டத்தில் 2012 இல் வர்த்தகப் பிரிவில் ஆங்கில மொழி மூலம் தோற்றி அதி விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்கள் 3A ஆங்கில மொழிமூலம் வர்த்தகப் பிரிவு

**பத்மநாதன் மிதுலாஜினி**
3A மாவட்ட மட்டம் 5

**விவேகானந்தராஜா கிரிஷாந்தன்**
3A மாவட்ட மட்டம் 7

**ஜெகஜோதிநாதன் அபித்திரா**
3A மாவட்ட மட்டம் 15

அனைவரையும் வாழ்த்துவதுடன் அதற்கு உறுதுணை புரிந்த ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

திரு.B.கஜன், திரு.V.சசிகாந், திரு.தாருகாஷின்

**Sun British College,**
**No.26, Station Road, Vavuniya.**
**024 222 6649/ 0773466949**

(27661)(2.6.7)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



... சாலை ஆசிரியை திருமதி மரியஅன்ரனி ஜெசிந்தா அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி. குணதாசன் எலிசபெத்

அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம் குருநகர், யாழ்ப்பாணம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை தனியார் பஸ் சங்க உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர்

**பொ.கெங்காதரன்** அவர்களது சேவை மேன்மேலும் வளர அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிறீ இரும்புத் தொழிலகம்

டனுஜன், 769 வீதி, தனியார் பஸ் உரிமையாளர், மல்லாகம்.



## வாழ்த்துகின்றோம்



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் உபதலைவரும் பிரபல்யமான தொழிலதிபரும் சமூக சேவையாளரும், மனிதநேயருமாகிய

**லயன் ச.ஆறுமுகநாதன்**

அவர்களுக்கு 'தேசமான்ய லங்காபுத்திர விஸ்வகீர்த்தி' என்ற கௌரவப்பட்டம் இலங்கை WHOLE CEYLON NENA GUNA FOUNDATION அமைப்பால் வழங்கப்பட்டதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிறீ இரும்புத் தொழிற்சாலை
டனுஜன், தனியார் பஸ் உரிமையாளர்
மல்லாகம்.


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாவதி சச்சிதானந்தம்



பருத்தித்துறை,தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தம் கமலாவதி நேற்று (31.01.2013) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சி.சச்சிதானந்தத்தின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு- இராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், திருமதி மனோன்மணி, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசேந்திரா, சிறீமதிலீலா மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி றஞ்சினி,சிதம்பரேசன்(ஓய்வுபெற்ற கணக்காளர்,சுகாதார திணைக்களம்,லண்டன்), கமலானந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா),திருமதி ராஜினி(ward sister, ஆதார வைத்தியசாலை, மந்திகை), பத்மினி(ஜேர்மனி),குணசீலன் (ward master பொது வைத்தியசாலை- வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌரிபாலா(குகன் ஸ்ரூடியோ-பருத்தித்துறை), அம்பிகா,பாலகெங்காதரன்(ஆசிரியர்,யா/ஹாட்லிக்கல்லூரி), நந்தினி(ஆஸ்திரேலியா),ஞானசேகரன் (ஜேர்மனி),றட்னேஸ்வரி (ward sister பொது வைத்தியசாலை -வவுனியா) ஆகியோரின் மாமியாரும்,கணேசானந்தன்,காயத்திரி,துவாரகா,கார்த்திகா,கிருத்திகா, ரகுராம்,ராகவர்த்தனி,அஸ்வினி,ராகுலன்,துசிதா,மிதுஷா,ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.02.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00மணிக்கு பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஆனந்த பவனம்'
தும்பளை வீதி,
பருத்தித்துறை. (ஜ/6129)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி

மண்மகிழ 1983 - 10 - 20

கண்நெகிழ 2012 - 01 - 14



### அமரர் கணேஸ் தயாளன்(சேரன்)

தாய் தந்தையர்க்குத் தலை மகனாய் வந்துதித்தாய்!
மணம் முடித்து மகிழ்ந்திருந்தாய்!
குழந்தைகள் இருவரையும்
கண் எனவே காத்திருந்தாய்!
காலன் அவன் காத்திருந்து
கண் கலங்கவைத்து விட்டான்!

அன்னாரின் நினைவுநாளில் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

606,செல்வாநகர்,
கிளிநொச்சி. (26322)(5.6.7)

மனைவி,பிள்ளைகள் மாமன்மார்.


# இன்று முதல்

யாழ்.

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொழும்பில் !

தினமும் மாலை 3.00.மணிக்கு


உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தொடர்புகளுக்கு
078 284 5033
078 284 5044





## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் சிவயோகநாதன்

(Electrical Superitendant E.S)

யாழ்ப்பாணம், மல்லாகத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகம், மயிலணியை வதிவிடமாகவும் பின்னர் கனடா, மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிவயோகநாதன் 29.01.2013 செவ்வாய்க்கிழமை மொன்றியலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-தங்கம்மா தம்பதியரின் அருமை மகனும், விமலாதேவியின் (மொன்றியல்) அன்புக்கணவரும், ஷாமினி (UK), ரஜனி (மொன்றியல்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தன் (UK), நாவலன் (மொன்றியல்) ஆகியோரின் அருமை மாமனாரும், பூஜா (UK), அரோன் (மொன்றியல்), அர்ணி (மொன்றியல்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற விமலாதேவி, சாரதாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முருகையா, வரதராஜா மற்றும் குணதேவி (நோர்வே) அம்பிகாதேவி (ரொரன்டோ), சரோஜினிதேவி (மொன்றியல்), காலஞ்சென்றவர்களான மயிலுப்பிள்ளை, சிவசம்பு ஆகியோரின் மைத்துனரும், சிவரூபன் (USA), சிவகௌரி (Australia), சிவராமன் (UK), சிவானந்தன் (Australia), சிவானந்தி (Australia), சிவகுமார் (Toronto), துஷ்யந்தன் (Sri Lanka), துஷ்யந்தி (UK) , தனஞ்செயன் (Sri Lanka), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 4275 Sources Blvd, Dollard Des Ormeaux இல் அமைந்துள்ள Rideau Funeral Home, இல் 02.02.2013 சனிக்கிழமைமாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரையும் 03.02.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப ஒரு மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லத்துரை நாவலேஸ்வரர்
(நாவலன் குடும்பம்)

கனடா (29054)(6.7.11) T.P-015146842068




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி, பெப்.01

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒரு நோக்கு'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் ஜெ.சந்திரப்பிரகாஷ் மேற்படி சொற்பொழிவை நிகழ்த்துவார். (வ-8)

# பல்கலை. மாணவர்களை விடுவிக்கக் கோரி சென்னை இலங்கைத் தூதரகம் முற்றுகை

## எழுபதுக்கும் மேற்பட்டோர் கைது

கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணக் பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக்கோரி சென்னையில் இலங்கைத் தூதரகம் முன்னால் முற்றுகைப் போராட்டம் நடத்திய 70க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். கடந்த நவம்பர் 27ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மாவீரர் தினம் அனுஷ்டித்தனர். அவர்களைக் கைது செய்து சித்திவதை செய்து சிறைவைத்துள்ளது இலங்கை அரசு. அந்த மாணவர்களை விடுவிக்க வேண்டும் எனக் கோரியே நேற்றுமுன் தினம் தினம் காலையில் சென்னையில்இலங்கைத் தூதரகம் முற்றுகையிடப்




பட்டது. போர்க்குற்றம் - இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் அமைப்பினர் சார்பில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தை அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இரா.திருமலை ஒருங்கிணைத்தார். வீதியை மறித்து மறியலில் அமர்ந்த போராட்டக்குழுவினருக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பொலிஸார் அவர்களை அப்புறப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர். அப்போது முறுகல் நிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 70க்கும் மேற் பட்டவர்கள் கைது செய் யப்பட்டு, பொலிஸாரின் வாகனங்களில் ஏற்றிக் கொண்டு செல்லப் பட்ட னர். பின்னர்அவர்கள் அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர். (3)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

ஜேர்மன் தொழில்நுட்ப வலய (ஜீ.ரி.சற்) நிறுவனத்தின் சமூக இசைவான கல்வி நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் இடர்பாதுகாப்பு கல்வி தொடர் பாக நடத்தப்பட்ட வினா விடைப் போட்டியில் வெற்றிபெற்ற தென்மராட்சிகல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கு ம் நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நிறுவன வடமாகாண இணைப்பாளர் வீ.இராசையா, பாட இணைப்பாளர் யோகேஸ்வரன், வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரசிவம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவாஜந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர். போட்டியில் வலய மட்டத்தில் சித்தி பெற்ற 15 மாணவர்களுக்கு சான் றிதழ்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (3-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.1

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பிக்னெல் விளையாட்டு மைதானத்தில் கல்லூரி முதல்வர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் சந்திரராஜா, திருமதி உதயகுமாரி சந்திரராஜா ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (3-50)

★ ★ ★

சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பிரிவு பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் எஸ். நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3-36)

★ ★ ★

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.(3-78)

★ ★ ★

யாழ். அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனித சேவியர் ஆலய முன்றிலில் அதிபர் சோ.ஜெயதேவா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், சக்கோட்டை பங்குத் தந்தை த.நிருபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-13)

★ ★ ★

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகருமான கே.சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (3-78)

★ ★ ★

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கந்தசாமி ஞாபகார்த்த பாடசாலை விளையாட்டரங்கில் பாடசாலை அதிபர் செல்வி பிரதா நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இராஜரெட்ணம் இராஜேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக துணுக்காய் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பிரதீபா கிருஷ்ணபிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (3-86)

★ ★ ★

கரணவாய் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ச.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் கா.சந்திரகாந்தன் கலந்துகொள்வார். (253)


# Invitation for Bids (IFB)

**Zonal Education Office, Mullaitivu.**

1. The Chairman, Regional Procurement Committee on behalf of the Zonal Education Office, Mullaitivu now invites sealed bids from eligible and qualified bidders for the following civil works.

| s.no | Bid Code No. | Name of School & Description of Works. | Required grade of Bidder | Bid Security Rs. | Basic Estimate Cost (Mn) |
|---|---|---|---|---|---|
| 01. | NP/44/20/1/6/ TSEP/01 | Construction of 40' X 25' Teaching space for special Education at Mu/Valipunam SH School | C8 | 34550.00 | 3.451 |

2. Source of Fund for the above work is *Transforming School Education as the Foundation of a Knowledge Hub Project(TSEP) under World Bank*
3. The Period of Completion of each of these Services is 105 days from the Start date.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for above mentioned grade or above with the Institute for Construction Training and Development (ICTAD)
5. Interested bidders may obtain further information and inspect the bidding documents at the Zonal Education Office Mullaitivu during office hours
6. A complete set of Bidding Documents in English language may be purchased from the office of Zonal Education Office, School Works Branch,Mullaitivu by interested bidders on the submission of a written application to the date from 31.01.2013 until 20.02.2013 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non refundable fee of LKR 2,500/= the method of payment will be cash to the office of the Zonal Education Office, Mullaitivu
7. Bids shall be delivered to Zonal Education Office Mullaitivu on or before 14.00 hours on 21.02.2013Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a Bid Security on the name of Zonal Director of Education, Mullaitivu for rupees above mention which should be obtained either from a reputed Bank operating in Sri Lanka or from the Construction Guarantee Fund, valid for a period of 105 days (from 21.02.2013 till 05.06.2013) from the date of close of bids. The Bid Security should be "On-demand" & "Un-conditional" and on the format given in the Bidding Document.

**Chairman,**
**Regional Procurement Committee**
**Zonal Education Office,**
**Mullaitivu**

விளம்பரத்துக்கு
021
567 1111

**மணமகள் தேவை**

லண்டன்P.R, 1980 இல் பிறந்த, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 3 ஆம் பாதம் 5 '4'' திருவோணம் நட்சத்திரம், பாவம் 21, மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: வி.இல 4437, C/O உதயன்,361,கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (29005) (6.7.4)

23.01.2013 புதன்கிழமை சிதம்பரத்தில் நடைபெற்ற

**திருமண விருந்துபசார அழைப்பு**

மணமக்கள்
சிரஞ்சீவி M.நடராஜன் சர்மா
சௌபாக்கியவதி K.லலிதாதேவி

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் தை மாதம் 21 ஆம் நாள் (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் மணமகள் இல்லத்தில் (இல.343, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) நடைபெறும். எனவே தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பத்துக்களுடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்: ஸ்ரீமதி.கு.சாவித்திரி குமாரசாமி சர்மா
ஸ்ரீமான்.மணிக்குருக்கள்
ஸ்ரீமான்.ஸ்ரீமதி.கு.கோபாலன்சர்மா லஷ்மிதேவி தம்பதிகள்
ஸ்ரீமான்.ஸ்ரீமதி.ஆனந்தன் சர்மா ஜீவஹர்ஷினி தம்பதிகள்

**சேவை நலன் பாராட்டு**

**திருமதி மகாலெட்சுமி சோழங்கர் குமாரகுலசிங்கம்**

(B.Sc (Hons), PGDE)

யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலய முன்னாள் அதிபரும், தற்போது வரணிமகா வித்தியாலயத்தில் இணைந்து கல்விப் பணியாற்றி வருபவருமான திருமதி மகாலெட்சுமி சோழங்கர் குமாரகுலசிங்கம் இன்று [01.02.2013] வெள்ளிக்கிழமை ஓய்வு பெற்றுக் கொள்வதையிட்டு அவரது ஓய்வுக் காலம் ஆரோக்கியத்துடனும் மன நிறைவுடனும் அமைய எல்லாம் வல்ல இறைவன் அருளை வேண்டுகின்றோம்.



அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/வரணி மகா வித்தியாலயம்




## தடைகளைத் தாண்டி Mega ஆரம்பமாகிறது

கணினிக் கோப்புக்களை இணையத்தளத்தில் சேமிக்கும் சேவையை வழங்கி வந்த Megaupload தளமானது கடந்தவருடம் அமெரிக்க அரசால் தடைசெய்யப்பட்டிருந்ததுடன் நியூசிலாந்திலும் முடக்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக ஓடிட் Dotcom என்பவர் Mega எனும் நாமத்துடன் மீண்டும் சேவையை ஆரம்பித்திருந்தார்.

தற்போது இந்தச்சேவையின் மூலம் பயனர்களுக்கு 50GB வரையான இலவச சேமிப்பு வசதியை வழங்கப்போவதாக Kim Dotcom அதிரடியாக அறிவித்துள்ளார்.

இந்தச்சேமிப்பு கொள்ளளவு ஏனைய இணையத்தள சேமிப்பு வசதியானது Dropbox, Google Drive மற்றும் மைக்ரோசொப்டின் SkyDrive போன்றவற்றில் தரப்படும் இலவச சேமிப்பு வசதியைக் காட்டிலும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.




## Firefox இயங்குதளத்தைக் கொண்ட முதலாவது ஸ்மார்ட் கைபேசி அறிமுகமாகியது

Mozilla நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட Firefox இயங்குதளத்தினை (Firefox OS) அடிப்படையாகக் கொண்ட முதலாவது ஸ்மார்ட் கைபேசி சோதனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 3.5 அங்குல அளவு மற்றும் HVGA தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட தொடுதிரையினைக் கொண்ட இந்தக்கைபேசிகள் 1GHz வேகத்தில் செயலாற்றவல்ல Snapdragon S1 Processor மற்றும் பிரதான நினைவகமாக 512MB RAM ஆகிவற்றினை உள்ளடக்கிதாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இவற்றின் சேமிப்பு வசதியானது 4GB ஆகவும் அமைந்துள்ளது. இக்கைப்பேசிகள் விரைவில் விற்பனைக்கு வரும் என Mozilla நிறுவனம் தெரிவித்துள்ளது

## RIM அறிமுகப்படுத்தவிருக்கும் BlackBerry Z10 கைபேசியின் புகைப்படம்




RIM அறிமுகப்படுத்தவிருக்கும் கைபேசியின் புகைப்படம் வெளியானது.

தனித்துவமான தொழில்நுட்பத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் BlackBerry கைபேசிகளின் வரிசையில் Z10 எனும் முழுமையான தொடுகை முறையிலான செயற்பாடுகளை உள்ளடக்கிய கைபேசி ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் தற்போது குறித்த கைபேசியின் தோற்றத்தை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் இந்தக்கைபேசியானது 1280 x 768 Pixel Resolution மற்றும் 4.2 அங்குல அளவுடைய HD தொடுதிரையைக் கொண்டுள்ளதாக உருவாக்கப்பட்டுள்ளதோடு பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்பு வசதி உட்பட 1,800 mAh மின்கலத்தினையும் கொண்டுள்ளன.

## இணையத்தளத்தைப் பார்வையிடுகையில் புகைப்படங்களைத் தவிர்க்கும் வழி

இணையத்தளங்கள் அனைத்தும் அதிகளவில் புகைப்படங்கள் மற்றும் அனிமேஷன்களை உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றன.

எனினும் குறைந்த வேகம் உடைய இணைய இணைப்பான GSM/GPRS/EDGE போன்றவற்றில் இவ்வாறான இணையத்தளங்களை பார்வையிடும் போதும் மிகுந்த தாமதம் ஏற்படும். இத்தாமதத்தை தவிர்ப்பதற்கு பார்வையிட விரும்பும் இணையத்தளங்களிலிருந்து புகைப்படங்கள் தென்படுவதைத் தவிர்ப்பது ஒரு சிறந்த வழிமுறையாகும்.

இதனை கூகுளின் குரோம் மற்றும் Mozilla Firefox உலாவிகளில் இலகுவாக செயற்படுத்த முடியும்.

குரோம் உலாவியில் செயற்படுத்துவதற்கு

1. குரோம் உலாவியில் புகைப்படங்கள் தரவிறங்குவதைத் தடை செய்யவேண்டிய இணையத்தளத்தினுள் நுழையவும்

2. தொடர்ந்து குறித்த இணையப்பக்கத்திற்கான தகவல்களைப் பார்வையிடும் ஐகொனை கிளிக் செய்யவும்.

3. அதன் பின்னர் தோன்றும் Drop Down மெனுவில் காணப்படும் புகைப்படத்திற்கான ஐகொனை கிளிக் செய்து 'Always Block on this Site" என்பதைத் தெரிவு செய்து தளத்தை Refresh செய்யவும்.

Mozilla Firefox உலாவியில் ஐமேஜ் Image Block எனும் நீட்சியைப் பயன்படுத்துவதன் மூலம் இவ்வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இணையத்தள முகவரி
addons.mozilla.org




## கணினியில் பணிபுரிந்து கொண்டே உங்கள் உடல் நலத்தைப் பராமரிக்க நவீன சாதனம்

கணினி முன் தொடர்ச்சியாக உட்கார்ந்து பணிபுரிபவர்களுக்கு உடல் எடை விரைவாக அதிகரிப்பதுடன் நோய்களும் தொற்றிக்கொள்ள ஆரம்பிக்கின்றன.

அசைவின்றி ஒரே இடத்தில் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது. ஆனால் தற்போது இந்தப்பிரச்சினைக்குத் தீர்வாக Active Desk எனும் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. Jim Martin எனும் உட்டா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட இச்சாதனத்தை பயன்படுத்துவதன் மூலம் நாளொன்றிற்கு உடலிலிருந்து 300 – 800 வரையான கலோரி சக்தி வெளியேற்ற முடிகின்றது. அத்துடன் கால்கள் தொடர்ச்சியாகச் செயற்படுவதனால் இரத்த ஓட்டமும் சீராக பேணப்படுகின்றது. இதன் பெறுமதியானது 2 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகும்.



# தென்னியன்குளம் கிராமத்தில் தொல்லை கொடுத்து வரும் யானைகள்

துணுக்காய் தென்னியன்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

நான்கு புறமும் காடுகளால் சூழப்பட்டுள்ள மேற்படி கிராமத்தில், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கை மற்றும்தென்னை, மா, வாழை போன்ற பயன்தரு மரங்கள் என்பனவும் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை இரவு குடிமனைக்குள் புகுந்த காட்டு யானைகள் இரண்டு ஏக்கர் வரையான நெற்பயிர்கள் மற்றும் தென்னை, மா, வாழை ஆகிய பயன் தரு மரங்களையும் அழித்துள்ளன.

இவ்வாறு குறித்த கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் இரவு வேளைகளில் இந்தக் கிராம மக்கள் பெரும் அச்சத்துடனேயே தமது பொழுதைக் கழித்து வருகின்றனர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி-யாழ்ப்பாணம்
## கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் தரம்-2013

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர சாதாரண தரப் பயிற்சி நெறியில் 1ஆம் 2ஆம் பிரிவுகளில் சித்திபெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.

அல்லது

2. கூ.ப. (சாதாரண தர) பயிற்சி நெறியில் மூன்றாம் பிரிவில் சித்தி பெற்று 2 வருடம் கூட்டறவுச் சங்கத்தில் பணிபுரிந்த நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள் .

அல்லது

3. க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்ற நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்

அல்லது

4. வெளிவாரி மாணவர்களைப் பொறுத்து க.பொ.த(உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றவர்கள்.

அல்லது

5. கூட்டுறவு பணியாளர் சாதாரண பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள்

விண்ணப்ப முடிவு திகதி- 15/02/2013
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி-
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
இல.12,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களுடன் கல்விச் சான்றிதழ் பிரதிகளை இணைத்து விண்ணப்பிக்கவும்.

அதிபர்
கூ.ப.கல்லூரி,யாழ்ப்பாணம்.

(C/6190)(3,6)

பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு SPOKEN ENGLISH

A/L இல் வெற்றி...
பல்கலையிலும் வென்றிட...

இலவசம் ஆங்கிலப் பாடநெறியில் கலந்து கொள்ளும் சகலருக்கும்

SPOKEN SINHALA

சவால்களை வெற்றி கொள்ளும் பட்டத்தைப் பெற்றிட இன்றே உங்களைத் தயார்படுத்துங்கள்...

ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நிகரான Colombo ஆசிரியர் குழாமின் சிறந்த வழிகாட்டலில் மருத்துவம், பொறியியல், கலை மற்றும் வர்த்தக மாணவர்களுக்கு தனித்தனி பிரிவுகள்.

Workroom Based Practical English

Basic English, Advanced English, English Teacher Training, Diploma in English, IELTS

IISEEES NALLUR CAMPUS
762, Point pedro Road, Nallur. 0212224728/ 0777444225




## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்




கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி அம்பிகா சமேத
வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தின்
இராஜ கோபுரத்தை செதுக்கி வடிவமைத்துத் தந்த
வட்டுக்கோட்டை சிற்பாசாரியார்
**த.தவவீரசிங்கம்** அவர்களுக்கும்
அவரது குழுவினருக்கும் எமது ஆலய பரிபாலன
சபை சார்பாக மனமார்ந்த நன்றிகளையும்
பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அவர் மேன்மேலும் பல பாராட்டுக்களைப் பெற
எமது ஸ்ரீ பத்திரகாளி அம்பிகா சமேத
வீரபத்திரசுவாமி ஆசி புரிவாராக.

(C/6142)(2,6)

ஆலய பரிபாலன சபை. கல்வியங்காடு.




City & Guilds UK Engineering Courses




Civil Engineering
Quantity surveying
Mechanical Engineering
Motor Vehicle Engineering
Electrical & Eletronics Engineering

0214 666 699
0771 067 394

City & Guilds APPROVED CENTRE
SKILLS COLLEGE OF TECHNOLOGY
Jaffna Campus

### மானிப்பாய் பிரதேச சபையின்

# புதிய நிலையியற் குழு இதுவரை இல்லை

யாழ்ப்பாணம, பெப்.1

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் நிலை யியற் குழு கலைக்கப்பட்டுள்ளது.

புதிய குழு நியமித்தல் தொடர்பாக இதுவரை தலைவரோ அன்றி செயலாளரோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை இவ்வாறு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எதிர்கட்சி உறுப்பினர் வெ.அ. ஜோன்சன் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், திட்டமிடற் குழு, நிதிக் குழு, வீடமைப்புக் குழு, தொழில் நுட்பக் குழு என நான்கு நிலைகளில் நிலையியற் குழு செயற்படும்.

இதன்மூலம் பல்வேறு அபி விருத்திகளை இந்தக் குழு செயற்படுத்தி தலைவருக்கும் செயலாளருக்கும் அறிக்கை சமர்ப்பிக்கும்.

இந்தக் குழுவின் செயற்பாட்டுக்கு முதலில் குழுக்களைத் தெரிவு செய்ய சபை முன்வர வேண்டும்.

> புதிய குழு நியமித்தல் தொடர்பாக இதுவரை தலைவரோ அன்றி செயலாளரோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை

மேலும் காசோலைகளில் தலைவர் கையொப்பம் இடுவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பாக செயலாளர் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்கு கடிதம் எழுதி பதில் கிடைக் கும் வரை தலைவரே காசோலையில் கையொப்பம் இட வேண்டும்.

எனவே சபைக் கூட்டங்களில் தேவையானவற்றை மட்டும் நகர்த்தி தேவையற்ற வினாக் களை விலக்கி குறுகிய நேரத்தில் அபிவிருத்தியின் பால் செயற்பட முன் வர வேண்டும் என உறுப்பினர் வெ.அ. ஜோன்சன் தெரிவித்தார். (3-50)

# உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.1

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேறு விவரம் வருமாறு:-

**அருணோதயக் கல்லூரி, அளவெட்டி**

**வர்த்தகப்பிரிவு**

ம.மதீபன் - 3ஏ கி.குஜாலா-3ஏ, .செ.வைஷாளிகா- 3பி

**கலைப் பிரிவு**

த.காயத்தி-3ஏ, ச.கீர்த்திகா-3பி, செ.அகில்ராஜ்- 2பி,சி

**விக்டோரியா கல்லூரி, சுழிபுரம்**

தவராஜா வெங்கடேஸ்வரன்- 2ஏ,பி சிவகுமார் சிவசங்கர் -2பி,சி, விநாயகராஜா திருமாலவன் -2பி,சி, திலகேந்திரலிங்கம் பகீரதன்- ப,2சி, மனோகரன் பிரதீபன்- பி,2சி

**வர்த்தகம்**

சிவநாதன் ரமணன்- 3ஏ, பவானந்தன் பிரதீபா- 3ஏ,செல்வி நல்லையா அருள் றெமின்ரா- 3ஏ , தங்கராஜா -மதுரா 3 ஏ, சிவஞானசுந்தரம் யனார்த்தனன்-2ஏ,பி, யமுனா சிவஞானசுந்தரம் -2ஏ,பி, ஜீவானந்தன் ஜீவிதா- 2ஏ,ப, கணேசலிங்கம் கஜிதா -ஏ,2பி, குமரகுரு காங்கேயன்- 2ஏ,சி, மகேந்திரன் சுலக்சன்- ஏ,2சி, வரதராஜா கயூரி -ஏ,2சி, யோகேஸ்வரன் யோகிதா -ஏ,2சி,, கணேசராசா தர்சிகா- 3பி

**கலைப் பிரிவு**

குணரத்தினம் திலக்சி ஏ,பி,சி, பொன்ராசா கர்சினி ஏ,2சி, தவராஜா விந்துகா ஏ,சி,எஸ், சிவம் ஜெயரஞ்சினி பி,2சி, செல்வன் ஸ்ரீஸ்காந்தநாதன் மயுரன்பி,2சி, கந்தசாமி காருண்யா பி,2சி, திருச்செல்வம் ரஜிக்கா பி,2சி

**இளைவாலைக்காடு மகாவித்தியாலயம்**

**கணிதப் பிரிவு**

நடராஜா சாருஜன்3 ஏ, சிவஞானம் அனுதீபன்-2சி, எஸ்,

**விஞ்ஞானப் பிரிவு**

மகேந்திரம் பொன்வேல்-2பி, சி,தில்லைநாதன் தினேஷ்குமார்- 3சி, தங்கராசா சிந்துஜா -பி,சி.எஸ்

**கலைப் பிரிவு**

தங்கவேல் கலைச்செல்வன்- ஏ,2பி, வரதராஜன் நிரஞ்சனா -ஏ,பி,எஸ்.

**செங்குந்தா இந்துக்கல்லூரி**

**கலைப் பிரிவு**

ரட்ணகுமார் ரஜினா- ஏ,2பி, புவனேந்திரன் மீரா- 2பி,சி ,ரஞ்சிதா பாஸ் கரன் - ஏ,2சி, சாமினி சந்திரமோகன் -பி,2சி, செல்வன் சண்முகராஜா அருட்செல்வன்- பி,2சி. (3)

**வீடு அல்லது கட்டம் வாடகைக்குத் தேவை**

வவுனியாவில் கணினிப்பயிற்சி நிலையம் ஒன்றை நடத்துவதற்கு நகரை அண்மித்த பகுதியில் வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத்

தொடர்புகளுக்கு
0721717121, 0716182182

(c/6150)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.றோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி விளையாட்டு மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராகவும் கரவெட்டிப் பிரதேச செயலாளர் சிவசிறி விசேட விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார். (த-13)

## பொலிஸ் நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ். நகரின் மத்தியில் அமைந்திருக்கும் அவசர பொலிஸ் நிலையம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய பஸ் நிலையத்துக்கு எதிராகவுள்ள இந்த பொலிஸ் பிரிவின் நிலையத்தை தியாகிகள் அறக்கொடை நிறுவனம் புனர மைத்து கொடுத்துள்ளது.

இப் புதிய நிலையத்தை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா வைபவ ரீதியாக திறந்து வைத்தார். (3-17)

## வங்கிச் சேவை சனிக்கிழமையிலும்

யாழ்ப்பாணம்,பெப்.01

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக் கிணங்க மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை சனிக்கிழமையிலும் சேவையை நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளது என்று முகாமையாளர் சி.நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (ஓ)

## அரசுக்கு இப்போதும் ....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தைக் கொண்டுவர விழைகிறதோ அவ்வரசின் மொத்தச் சட்டவாக்கப் பிரதிநிதிகளின் (வருகை தராதோர் உட்பட) மூன்றில் இரண்டு பேர் அதனை ஆதரிக்க வேண்டும் என்பதுடன் அத்தீர்மானம் மத்திய அரசின் சாதாரண பெரும்பான்மையினாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசு சட்ட மாற்றம் ஒன்றைக் கொண்டுவர விழையுமிடத்து மூன்றிலிரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் (வருகை தராதோர் உட்பட) ஆதரவைப் பெறவேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதரவின்போது எந்த இனம் சார்ந்த பிராந்திய அரசு பற்றிப் பேசப்படுகிறதோ அந்த இனம் சார்ந்த பாராளுமன்ற பிரதிநிதிகளின் சாதாரண பெரும்பான்மை ஆதரவு அம் மூன்றில் இரண்டு பகுதியினரின் ஆதரவுக்குள் அடங்கியிருத்தல் வேண்டும். அத்துடன் அச்சட்டம் தொடர்பான பிராந்திய அரசு பிரதிநிதிகளின் (வருகை தராதோர் உட்பட) சாதாரண பெரும்பான்மையினர் மூலம் தொடர்புபட்ட பிராந்திய அரசாலும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

எவ்வாறெனினும் பிராந்திய அரசுகளின் அதிகாரத் தன்மையில் சமநிலை குழம்பாத விதத்திலும் ஏற்றத்தாழ்வு நிகழாத விதத்திலும் சட்டங்கள் அமைதல் வேண்டும்.

பரிந்துரைகள் ஏற்புடையவையாயின் அதுசார்ந்த தீர்வை முன்வைத்து, செயற்படுத்தி உலகநாடுகள் முன் இழந்த பெருமையை மீட்டெடுக்க இலங்கை ஆட்சியாளர்கள் முன்வருவார்களா?

★

# குற்றச்சாட்டுக்கள்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் அரசமைப்பு விதிகளில் தவறுகள் உள்ளதாகவும் அதனடிப்படையில் தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு சர்வதேச சட்ட விதிகளுக்கு முரண்படுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். தம் மீதான வழக்கை விசாரிக்க பிரதம நீதியரசர் அரசியல் அடிப்படையில் முடிவுகளை மேற்கொண்டதாவும், தம் மீதான வழக்கு விசாரணையின்போது சாட்சிகளை விசாரணைக்கு அழைக்கவில்லை எனவும், பிரதம நீதியரசரின் தன்னிச்சையான முடிவு காரணமாக தமது கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் மீறப்பட்டதாகவும் அவர் தமது அந்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியிருந்தார்.

எஸ்.பி.திஸநாயக்காவின் முறைப்பாட்டை விசாரணை செய்த ஐ.நா.மனித உரிமைகள் பேரவை, அவரது முறைப்பாட்டில் நியாயமிருப்பதாகக் கூறி, இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

ராஜபக்ஷ நிர்வாகத்தின் தற்போதைய நிலைப்பாட்டின்படி, அரசுக்கு எதிராக அத்தகைய முறைப்பாடொன்றை மேற்கொள்வது துரோகத்தனமானதொன்று என்பதும், மனித உரிமைகள் பேரவையின் தீர்ப்பு, இலங்கைக்கு எதிரான வெளிநாட்டுச் சதியின் ஒரு அங்கமே என்பதுமே ஆகும். அந்த வகையில், அமைச்சர் எஸ்.பி.திஸநாயக ஒரு துரோகி என்றாகிறார். அது மட்டுமன்றி முன்பொரு சமயம் மஹிந்த ராஜபக்ஷவும் வாசுதேவ நாணயக்காரவும் ஜெனீவாவுக்குச் சென்று இலங்கை அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்த விதத்தில் இன்று செயற்படுவார்களானால் அவர்களும் கூட துரோகிகள் எனப் பட்டம் சூட்டப்படுவர் என்பது நிச்சயமே.

### ஐ.தே.க. - ஜே.வி.பி. சந்தர்ப்பவாத கருத்து நிலைப்பாடு

இலங்கையின் இத்தகைய சிங்கள பேரினவாதப் போக்கின் மத்தியில், தமது அரசியல் இருப்பை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கில் ஐ.தே.கட்சி போன்று ஜே.வி.பியும் ஷிராணி பண்டாரநாயகாவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விவாதத்தின் இடைநடுவில் அரசின் நிலைப்பாட்டுக்குத் தாமும் ஆதரவு வழங்கும் விதத்தில் செயற்பட்டுள்ளனர். இவ்விரு கட்சிகளும் குற்றவியல் பிரேரணையைத் தாம் எதிர்ப்பதற்கான காரணமாக, அப்பிரேரணை நிறைவேற்றப்படுவதன் மூலம் வெளிநாட்டுத் தலையீடு அதிகரிக்க வாய்ப்புண்டாகுமெனக் காரணம் முன்வைத்திருந்தன.

இதற்கமைய ஜனவரி 16 ஆம் திகதியன்று கொழும்பில் இடம்பெற்ற ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமொன்றில் வைத்து கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா, பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம் அரசு, சர்வதேசத் தலையீட்டுக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளதாகக் குற்றம் சாட்டியிருந்தார். அது மட்டுமன்றி ஷிராணி பண்டாரநாயகாவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பாக தலையீடு மேற்கொள்ளுமாறு பொதுநலவாய நாடுகளின் அமைப்பிடம் கோரிக்கை விடுத்த ஐ.தே.கட்சியின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீரவுக்கு வாய்ப்பூட்டுப் போட ரணில் நடவடிக்கை மேற்கொண்டார்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ போன்றே, ரணிலும் கூட கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்களில் அவ்வவ்வேளைய இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்து சர்வதேச தரப்புகளிடம் விமர்சனங்கள் முன்வைத்துள்ளமை குறித்து சகலரும் அறிவர். தமக்கு மிக நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன மூலம் ஐ.நா.சபைக்கு இலங்கை அரசுக்கு எதிராக முறைப்பாடுகளை ரணில் அனுப்பி வைத்தமை குறித்தும் சகலருமறிவர்.

இதேவேளை ஜே.வி.பியின் தொழிற்சங்கத் தலைவர் லால்காந்த, இலங்கைக்கு எதிராக சர்வதேச சதி இடம்பெற்று வருவதாகவும், ஷிராணி பண்டாரநாயகாவின் மீதான அரசின் குற்றவியல் பிரேரணை நடவடிக்கைக்குப் பின்னர் அந்த நிலை மேலும் தீவிரமடைந்து வருவதாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இருந்தபோதிலும் ஜே.வி.பி., அரசின் அடக்கு முறைகளுக்கு உட்பட நேர்ந்த பல சந்தர்ப்பங்களில், அது குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் உதவியை ஜே.வி.பி.யினர் கோரி வந்தமையொன்றும் இரகசியமானதல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டிலிருந்த இலங்கை பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்பு, தமது செயற்பாடுகளை ஒடுக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி உதவுமாறு ஐ.நா.சபையின் பொதுச் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்ததுமுண்டு.

இன்றைய யுகத்தில், மனித உரிமை என்பது வெறுமனே உள்நாட்டுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படாத, உலகளாவிய ரீதியான உரிமையாகும். மனித உரிமைகளைக் காப்பாற்ற உள்நாட்டு வெளிநாட்டு ரீதியிலென்றல்லாது, சகல நிலைகளிலும் செயற்படும் உரிமை இலங்கை மக்களுக்கு உண்டு. அத்தகைய மனித உரிமைகளைப் பாதுகாக்க, இன்று இலங்கை முகம் கொடுக்க நேர்ந்துள்ள அரசமைப்பு சிக்கல்களுக்கு மத்தியிலும் சாதகமான பயன் கிட்டத்தக்க போராட்டமொன்றுக்கான அத்தியாவசியம் இன்று நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

★

# நெல்லியடி ம.ம.வி:
# வீதியோட்டத்தில் வென்றோர்





முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆண்கள்



முதல் மூன்று இடங்களைப் பெற்ற பெண்கள்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளை முன்னிட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வீதியோட்ட நிகழ்வு அண்மையில் நடை பெற்றது. இதில் வெற்றியீட்டியோர் விபரம்:

**ஆண்கள் பிரிவு**
முதலாம் இடம் இரகுநாதன் கிறிஸ்ரியன்
2 ஆம் இடம் நாகேஸ்வரன் பிரசாத்
3 ஆம் இடம் தேவேந்திரராசா இளம்சுதன்
4 ஆம் இடம் பிரபாகரன் பிரகாஷ்
5 ஆம் இடம் சிவராஜ் ஜெயபாரத்
6 ஆம் இடம் அன்ரனிமரியதாஸ் நவீன்
7 ஆம் இடம் சிவராஜா சிந்துஜன்
8 ஆம் இடம் ரதீஸ்குமார் சைனுஜன்
9 ஆம்இடம் தவராசா தனீஸ்வரன்
10 ஆம் இடம் செல்வரத்தினம் சங்கீர்த்

**பெண்கள் பிரிவு**
முதலாம் இடம் கந்தசாமி நிரஞ்சலா
2 ஆம் இடம் புஸ்பராசா லக்ஷனா
3 ஆம்இடம் மணிவண்ணன் தர்மினி
4ஆம் இடம் பாஸ்கரன் விதுஷா
5 ஆம் இடம் ராசேந்திரம் கோபிகா
6 ஆம் இடம் தேவச்சந்திரன் தாட்சாயினி
7 ஆம் இடம் ரவீந்திரன் சௌமியா
8 ஆம் இடம் குகதாசன் மதுசாயினி
9 ஆம் இடம் புஸ்பலிங்கம் அனோஜா
10 ஆம் இடம் செல்வநாயகம் துர்க்காயினி
(ந-8-86-422)

# கொக்குவில் இந்துக் கல்லூரியை பணிய வைத்தது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 28.4 பந்துப் பரிமாற்றங்கள்நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அனோஜன், கவாஸ்கர் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும், பிருந்தாபன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 9 ஓட்டங்கள் கிடைத்தன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்தசிலோஜன் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற. பந்துப் பரிமாற்றம் அடங்கலாக 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், பங்குஜன் 7.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அடங்கலாக 18 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், பார்த்தீபன் பவிதரன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 31.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் சத்தியன் 23 ஓட்டங்களையும், நிஷாந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த லோகதீஸ்வரன் 4.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அடங்கலாக 5 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அமிர்தயன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அடங்கலாக 7 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பிருந்தாபன் 2இலக்குளையும், துவாரகசீலன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 59.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துவாரகசீலன் 55 ஓட்டங்களையும், அமிர்தகன் 40 ஓட்டங்களையும், கபில்ராஜ் 33 ஓட்டங்களையும் அடித்தனர். உதிரிகளாக 14 ஓட்டங்கள் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பபிதரன் 20 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளையும், பார்த்தீபன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும்

சிலோஜன், பங்குஜன் முறையே ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 30.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.இதில் சத்தியன் 27 ஓட்டங்களையும்,சுலக்சன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கானாமிர்தன் 18 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், லோகதீஸ்வரன் 10.5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், விந்தாகரன் 5 பந்துபரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள். (ந-86-23)

# சதுரங்கத் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.1

இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்தும் தேசிய சதுரங்க அணிக்கான தெரிவுப் போட்டி 30 வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச தரப்பட்டியலிலுள்ள ஆண், பெண்களுக்கான போட்டிகளும் பெண்களுக்கான தெரிவுப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் இன்று 2 மணிக்கு முன்பதாக போட்டி இடம்பெறும் மண்டபத்தில் வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு, பங்கு பற்ற முடியும் என்று யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் செயலாளர் ஆதவன் தெரிவித்துள்ளார்.

(ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

எதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:

**பிற்பகல் 3.30 மணி**

★ விண்மீன் வி.க. அணி எதிர் றெட் றேஞ்சர்ஸ் வி.க.

**பிற்பகல் 4.30 மணி**

ஆனைக்கோட்டை யூனியன் வி.க. எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் வி.க.

★ ★ ★

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை மோதவுள்ள அணிகள் வருமாறு

**பிற்பகல் 3மணி**

இணுவில் அறிவொளி வி.க. எதிர் ஆலடி பிந்து புவனேஸ்வரி அம்மாள் வி.க.

★ ★ ★

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வட்டக்கச்சி இளந்தென்றல் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

★ ★ ★

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதும். (ந-23)

## தாச்சிப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.மாவட்ட தாச்சிசங்கத்தின் அனுசரணையுடன் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட விளையட்டுக்கழகங்களுக்கு இடையே தாச்சி சுற்றுப் போட்டி ஒன்றை விரைவில் நடத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது விண்ணப்பங்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சரஸ்வதி விளையட்டுக்கழகத்தின் தலைவர் அல்லது செயலாளர் ஆகியோரை தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-23 -288)

# வேகத்தை விடமாட்டேன்

"பந்துவீச்சின்போது எந்தக் காரணத்துக்காகவும் எனது வேகத்தைக் குறைத்துக்கொள்ள மாட்டேன்" என்று தெரிவித்துள்ளார் ஷமி அஹமட்.





இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளராக சமீபத்தில் அறிமுகமானவர் பெங்கால் வீரர் ஷமி அஹமட் (வயது-22). இதுவரை 5 போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர், 4 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக அறிமுகமான முதல் போட்டியிலேயே ஓட்டப் பெறுமற்ற 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசி, இந்திய அளவில் சாதனை படைத்தார்.

தனது எதிர்கால செயற்பாடு குறித்து ஷமி அஹமட் மேலும் கூறியதாவது:

"எனது பந்துவீச்சைப் பொறுத்தவரையில் வேகமும், 'ஸ்விங்' செய்வதும் தான் பெரும் பலம். அதேநேரத்தில், பந்தைச் சரியான இடத்தில் 'பிட்ச்' செய்வதும் முக்கியம் என்று தெரியும். இதற்காக எனது வேகத்தை மட்டும் குறைத்துக் கொள்ளமாட்டேன். ஏனெனில், இது தான் எனது மிகப்பெரிய பலம்.

எனது திறமை மற்றும் கடின உழைப்பின் மீது நம்பிக்கை கொண்டவன் நான். இப்போது இந்தளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளேன் என்றால், எனது வேகம்தான் முதல் காரணமாக இருந்தது. போட்டிகளில் எனக்காக அணித்தலைவர் டோனி களத்தடுப்பு வியூகம் அமைப்பது மகிழ்ச்சி தருகிறது. இதற்கேற்ப, இப்போது பந்துவீச முயற்சித்து வருகிறேன்.


ரஞ்சி போட்டிகளின் போது, பொறுமையாக இருந்து கிரிக்கெட்டை நிறையக் கற்றுக்கொண்டேன். ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரையில் பவுன்ஸர், மித வேகம் எனப் பலவாறு பந்துவீச வேண்டும். டெஸ்ட் போட்டிகளில் அப்படியல்ல. பொறுமைதான் மிகவும் அவசியம். ஏனெனில், துடுப்பாட்டக்காரர்கள் திறமை மிக்கவர்கள். இதனால் பந்துவீச்சாளர்களுக்கு விடா முயற்சி தேவை. துடுப்பாட்டக்காரர்கள் தவறு செய்யும் வரை காத்திருக்க வேண்டும்.

கிரிக்கெட்டில் வளர வேண்டும் என்றால் டோனி, காம்பீர், விராத் ஹோக்லி, யுவராஜ் சிங் ஆகியோரது துடுப்பாட்டத்தைப் பார்த்தாலே போதும், நிறையக் கற்றுக் கொள்ளலாம். இதே போன்று, பெங்கால் பயிற்சியாளர் டபிள்யூ. வி.ராமன், கொல்கத்தா அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் வாசிம் அக்ரமும் நிறையக் கற்றுக் கொடுக்கின்றனர். இவர்கள் உதவியுடன் 'யோர்க்கர்' முறையில் பந்துவீச முயற்சித்து வருகிறேன். - என்றார்.

(ந)

# மீண்டும் நடால்...

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி டென்னிஸ் வீரரான ரஃபேல் நடால் கடந்த ஜூன் மாதம் விம்பிள்டன் டென்னிஸ் 2 ஆவது சுற்றில் தோல்வியடைந்தார். அதன் பின்பு இது வரை எந்தப் போட்டிகளிலும் அவர் பங்கேற்கவில்லை.



இடது கால் மூட்டு காயத்தால் பாதிக்கப்பட்ட அவர் கடந்த ஆண்டு இறுதியில் களம் திரும்பத் திட்டமிட்டு இருந்தார்.

ஆனால் அந்தச் சமயத்தில் அவருக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டதால் அவர் களம் திரும்புவது தாமதமானது. இந்நிலையில் நீண்ட இடைவெளிக்கு பின்பு நடால் பெப்ரவரி 4ஆம் திகதி சிலியில் தொடங்கும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் களமிறங்கவுள்ளார்.

அதைத் தொடர்ந்து பிரேஸில் பகிரங்க டென்னிஸ் தொடர், மெக்ஸிகோ பகிரங்க டென்னிஸ் தொடர் போன்றவற்றிலும் நடால் பங்கேற்க இருக்கிறார்.

தனது சொந்த ஊரான மஜோர்காவில் நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபட்ட நடால் தெரிவித்ததாவது,

"4 மாதங்களுக்குப் பின்பு நான் மீண்டும் டென்னிஸ் விளையாடப் போகிறேன்.

ஆனால் நீண்ட இடைவெளிக்கு பின்பு களமிறங்குவதால் எனது கால்மூட்டு எந்தளவுக்கு ஒத்துழைக்கும் என்பதை அறியமுடியாதுள்ளது.

இந்த மூன்று போட்டித் தொடர்களிலும் நான் தொடர்ந்து விளையாடினால் சரியான முறையில் தயாராகியிருக்கிறேன் என்று கருதுவேன்" - என்றார்.

(ந)

# அயல்வீட்டு நீச்சல் குளத்தை எட்டிப்பார்த்தாரா டில்ஷான்?

இலங்கை வீரர் டில்ஷான் பக்கத்து வீட்டின் நீச்சல் குளத்தில் குளிக்கும் பெண்களை எட்டிப் பார்த்தார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் அதிரடித் தொடக்க வீரர் திலகரட்ன டில்ஷானின் பக்கத்து வீட்டில் ரேணுகா டி. கோஸ்டா என்ற பெண் 2010 ஆம் ஆண்டு முதல் வசித்து வருகிறார். இவரது கணவர் ஈராக்கில் பணி புரிகிறார். இவரே, டில்ஷான் மீது பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதில், "டில்ஷான் வீட்டில் வைத்துள்ள இரகசியக் கமரா எங்கள் வீட்டில் உள்ள நீச்சல் குளத்தைக் கண்காணிக்கும் வகையில் உள்ளது.



இதனால் எங்கள் அந்தரங்கம் பாதிக்கப்படுகிறது. டில்ஷானும் அவரது மனைவி மஞ்சுளாவும் நான் குளிக்கும்போது கமராவின் அருகில் இருந்து பார்க்கின்றனர்" என்று தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ரேணுகாவும் மஞ்சுளாவும் நல்ல நண்பர்களாக இருந்தனர். ஒருமுறை டில்ஷானின் விருந்து நிகழ்ச்சிக்கு ரேணுகாவை அழைத்துள்ளார் மஞ்சுளா. இதன்போது ரேணுகாவின் 5 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்களை 4 கோடி ரூபாவுக்கு தரும்படி டில்ஷான் கேட்டுள்ளார்.

இதற்கு, ரேணுகாவின் கணவர் சம்மதித்தார். ஆயினும் ரேணுகாவும் மகள்களும் மறுத்துவிட்டனர். இது தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டதால் தான் இப்படி அவர் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது குறித்து டில்ஷானின் மனைவியான மஞ்சுளா தெரிவித்ததாவது:

எனது கணவர் பிரபல கிரிக்கெட் வீரர். அவரது புகழைக் கெடுக்கும் நோக்கோடுதான் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்பின்னர் வீட்டுக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த கமரா சுவரில்தான் வைக்கப்பட்டுள்ளது என்பதையும் பக்கத்து வீட்டு நீச்சல் குளத்தைப் பார்ப்பது போல அது பொருத்தப்படவில்லை என்பதையும் பொலிஸார் உறுதிப்படுத்தினர் - என்றார்.

இதேவேளை

"தற்போது நான் ஆஸ்திரேலியாவில் உள்ளேன். நாடு திரும்பியதும், ரேணுகா மீது அபாண்டமாகப் பழி போட்டமைக்காகச் சட்ட நடவடிக்கை எடுப்பேன்"- என்று டில்ஷான் தெரிவித்துள்ளார்.

(ந)

# சென்னையில் ஏலம்

ஆறாவது ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலம் முதன்முறையாக சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.,) சார்பில் 20/20 போட்டிகள் கடந்த 5 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்றன. இதன் ஆறாவது தொடர் வரும் ஏப்ரல் 3ஆம் திகதி தொடங்கி மே 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில், பங்கேற்கும் வீரர்கள் ஏலம் முதன் முறையாக சென்னையில் பெப்ரவரி 3ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து வீரர்கள் உட்பட உள்ளூர் வீரர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஐந்து ஆண்டு இடைவெளிக்குப் பின்பு, சமீபத்தில் இந்தியா சென்ற பாகிஸ்தான் அணி 20/20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று திரும்பியது.

இதனால், கடந்த நான்கு ஆண்டுகளாக ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்காத பாகிஸ்தான் வீரர்கள், ஆறாவது தொடரில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஆனால், காஷ்மீரில் இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதால், இரு நாடுகள் உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டது. இதனால், ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்க இருந்த பாகிஸ்தான் வீரர்களின் ஆசை கனவாகிப்போனது.

கடந்த ஏலத்தில், இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா, 10 கோடி ரூபாவுக்கு சென்னை அணியால் வாங்கப்பட்டார். இம்முறை இவருக்கு இன்னும் கூடுதல் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ந)

**NEW ECONOMICS COLLEGE**
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (பெருமாள் கோவில் அருகில்)

பாடசாலைக் கல்விச் சேவையில் நன்கு பரிச்சயமான யாழ்-கொழும்பு பிரபல பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

**A/L 2015 வர்த்தகப் பிரிவு**

* பொருளியல்- திரு.NB. சுஜீதரன் B.A(Jaf), H.N.Dip.in.Acc (Wesley College -Colombo-09)
* வணிகக்கல்வி- திரு. S.K.பாலசபேஷ் H.N.Dip-in.Acc (Jaffna College - Vaddukoddai)
* கணக்கீடு- திரு. K.B.பாலகஜன் B.Com (Jaf), H.N.Dip.in.Acc (St.Patrick's college -Jaffna)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 02.02.2013 சனி காலை 9.00 மணி

# பாகிஸ்தானின் எண்ணம் கனவாகியது

ஐ.பி.எல். கிரிக்கெட்டைப்போல் தங்கள் பங்குக்கு சர்வதேச வீரர்களை அழைத்து கிரிக்கெட் விழா கொண்டாட நினைத்த பாகிஸ்தானின் எண்ணத்தை ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை கனவாக்கியது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டை அடுத்து வங்கதேசம், இலங்கை ஆகிய அண்டை நாடுகளிலும் லீக் கிரிக்கெட்டுகள் நடைபெறுகின்றன. அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட் நடைபெறுகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானும் பாகிஸ்தான் சூப்பர் லீக் என்ற ரி20 உள்நாட்டுத் தொடரை நடத்த அறிவித்திருந்தது.

இதற்கு ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் உள்ள எந்த வீரரையும் அனுமதிக்க முடியாது என்று ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் பங்கேற்கும் வீரர்கள் பாதுகாப்பு அச்சமின்றி விளையாட உறுதியளிக்கப்பட்டுள்ளது... பாகிஸ்தான் தருவதாக அறிவித்திருந்தும் பயனில்லை. ஆஸ்திரேலியா கூறினாலும், இந்திய கிரிக்கெட் வாரியத்தின் நன்மதிப்பை பெறவும் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் அநாவசிய கோபத்துக்கு ஆளாகவேண்டாம் என்றும் எடுக்கப்பட்ட முடிவு என்றே கூறப்படுகிறது. (நி)

**விற்பனைக்கு**

சில காலம் பாவித்த Nokia கைத்தொலை பேசிகள் (Nokia -E5, C2, LG-5365) கண்ணாடிச் சாப்பாட்டு மேசை, Hero Honda பிளஷர் மோட்டார் சைக்கிள் (கறுப்பு) விற்பனைக்குண்டு.
0721869299
(29068) (6.7.4)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(28772) (1.5.4)

**CHEMISTRY**
**Paper Class 2013**
**துரித மீட்டல்**

A.லோகநாதன் (B.Sc.,PG D.E., M.Ed)
நாளை (2-2-2013) சனிக்கிழமை 4 மணி
T.P: 077 7464889.
* வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்.DCM இல்
(29:07) (6.7.4)

**A/L Day Class**
**கலை, வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம்-04.02.2013 திங்கள் 8.00 மணி
* வழமையான ஆசிரியர் குழாம்.
**NEW ECONOMICS COLLEGE**
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (பெருமாள் கோவில் அருகில்)

**வேலை வாய்ப்பு**

புதிதாகத் திறக்கப்பட விருக்கும் 3 கிளைகளுக்கு 30 பதவி வெற்றிடங்கள்.
(Direct Marketing International)
* Marketing and Sales
Sales and Distributors
Sales Supervisors
Average Income <15000-20000>
No Work Experience
Qualifications :O/L, A/L
Contact: 077 1906728, 077 8602777, 021 7200867.
(29007) (6.7.4)



**A/L 2012 பரீட்சை முடிவுகள்.....!**
**அடுத்தது என்ன?**

17 வருட கால அனுபவமும், பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு வளமான எதிர்காலத்தையும் உருவாக்கிக் கொடுத்த எமது நிறுவனம் உங்களுக்கும் வழிகாட்ட காத்திருக்கின்றது.

**கலந்துரையாடல்**

விடயம் :- உள்நாட்டு / வெளிநாட்டு உயர்கல்வியும், வேலைவாய்ப்பும்
காலம் :- 09.02.2013 சனிக்கிழமை காலை 10.00 மணி
இடம் :- IIS City Campus [200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்]

காலம் பொன்னானது.....
விரைவாக சிந்தியுங்கள்....செயற்படுங்கள்......




இன்றே இந்த நிமிடமே உங்கள் வளமான எதிர்காலத்தை நோக்கி முதல் அடியினை எடுத்து வையுங்கள், கை கொடுக்க நாம் காத்திருக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி [வைத்தீஸ்வரா சந்தி அருகில்], யாழ்ப்பாணம்
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna
**சிங்களம்**
புதிய பிரிவு ஆரம்பம்: 02.02.2013
சனி, ஞாயிறு : மாலை 4.00 - 5.30
T.சாம்சன்

**கணக்கீடு**
A/L 2013
கிரயக் கணக்கீடு
ஆரம்பம்: நாளை
பிரிவு I - 11am
பிரிவு II - 4.30pm
A/L 2014
தனி வியாபார முடிவுக் கணக்கு
ஆரம்பம்: நாளை
பிரிவு I - 6 am
பிரிவு II - 2 pm
A/L 2015
காசேடு
ஆரம்பம்: நாளை
பிரிவு I - 7am
பிரிவு II - 3pm
By: S.தவா
யூனிவேர்சல்
கந்தர்மடம்

**COLLEGE OF CHEMISTRY**
Palam Road, Kantharmadam
**PHYSICS**

| A/L Day Class | A/L 2015 |
|---|---|
| நடைபெறுகின்றன. | ஆரம்பம் கருவிகள் |
| Sat/Sun 7.45- 9.15 | Fri/Sat/Sun |
| Tue/Thu 3.00- 4.30 | 4.30- 6.00 |

N.Kapilan B.sc

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் கிழக்கு ஞான வைரவர் கோயில் வடக்குப்பக்க முன் ஒழுங்கையில், 300m தூரத்தில் வீட்டுடன் சேர்ந்த $5\frac{1}{2}$ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொ.பே:- 0777675097 0777065366
(29051)(3.6.7)

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பிரதான வாசலின் எதிர்ப்பக்கம் உள்ள 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொ.பே:- 0775288107
(29052)(3.6.7)

**Architectural CAD Centre**
Sun Britsh Business Management College(Pvt)
No.26,Station Road,Vairavapulliyankulam,Vavuniya
**Personal-Group Classes**
யாழ் வவுனியா
**Auto CAD**
**2D-Drawing & 3D-Modeling**
Lecturer By : Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD Software(2D & 3D)
Faculty of Engineering. University of Peratheniya(S-L)
Cert. in 2D-Drawing & 3D-Modeling in Auto CAD.
Open University of Sri Lanka
Cert. in Auto CAD-2010 (1st Class).University of Colombo
Cert.in Auto CAD (1st Class-B.Top)
Information Technology Park Ministry of Rehabilitation
Dip.in Engineering Drawing & Auto CAD(1st Class)
IIS-International University - Dublin.
Contact No:0718617972 --- 0242226649

**To Become as a PHP Programmer**
php பார்க்க...
http://gendernetwork.org/phpnatives

**PHYSICS பௌதிகவியல்**
2013 A/L 2014 A/L
2015 A/L Day Classes
முத்தட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு. By.Kajan
(0213734114)

# மரண அறிவித்தல்

## சதாசிவம் தட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற முதலியார், மாவட்ட நீதிமன்றம்,மல்லாகம்.)



காரைநகரைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் தட்சணாமூர்த்தி நேற்றுமுன்தினம் (30.01.2013) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-கெங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவயோகராணியின்(தேவி) அன்புக் கணவரும், ஏரம்பமூர்த்தி, பரமேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கையா, தவமணி, இராசமணி, காலஞ்சென்ற கணேசரத்தினம் மற்றும் புஸ்பலீலாவதி, அரியராசா, செல்வராசா,மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(01.02.2013) வெள்ளிக்கிழமை காலை 9.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிவளவு ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவில். தொ.பே.: 021 321 8246

தகவல்:
சிவயோகராணி (தேவி-மனைவி)
(29058)(5-6-7)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
**Advanced Diploma in English**

இக்கற்கை நெறியானது:-

உயர்தர ஆங்கில Diploma வும் ஆங்கில மொழி கற்பதும் 6 மாதங்கள் அடங்கிய நிறைவான பல அம்சங்களைக் கொண்ட ஒரு கல்விநெறி. இந்நெறி ஆங்கில இலக்கியத்தினையும் பிரயோக மொழியினையும் பேச்சையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- மேலும் ஆங்கிலத்தினைப் பகுத்து வகுத்து விரிவாக்கி ஆங்கில இலக்கியத்தினூடாகவும் அவையல்லாத ஏனைய நூல்களுக்கூடாகவும் அறிவைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.
- ஆங்கில அறிவைப் பெற்று மேலும் அதை விருத்தியாக்கி அதோடு சேர்த்து ஏனைய துறைகளும் அடங்கிய மொழியியல், ஆங்கிலம் கற்பித்தல் போன்றவற்றை உருவாக்க உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக் கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

**விசேடமாகக் கவனிக்க வேண்டியவை**

* ஆங்கிலத்தில் உயர்தரத் தகமை பெற்றுக்கொள்ள முடியும்.
* அரசாங்க நிறுவனங்களில், தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற உதவும் கற்கை நெறி.
* எதிர்காலத்தில் ஆங்கில ஆசிரியராக வர இருப்பவர்களுக்கான கற்கை நெறி.
* ஆரம்பநிலை ஆங்கில ஆசிரியர்கள் உயர்தர நிலைக்கு இக்கற்கை நெறியைக் கற்பதன் மூலம் தம்மை மாற்றிக் கொள்ள முடியும்.

**காலம் : 6 மாதம்**

Week Days 9.00 - 12.00, 3.00 - 5.00
Week Ends 11.30 - 1.30, 3.00 - 5.00

புதிய வகுப்புக்கள் Batch I - 01.02.2013 Batch II - 04.02.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஆசிரியர்களுக்கு சான்றிதழ்

மட்டக்களப்பு,பெப்.1

இந்துநாகரிக பாடத்துக்கான பயிற்சிச் செயலமர்வை நிறைவுசெய்த ஆசிரியர்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கேமலோஜினிகுமரன், மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் எழில்வாணி பத்மநாதன், கலாசார உத்தியோகத்தர் நிர்மலா கருணானந்தராசா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## தேவை

மரவள்ளிக் கிழங்கு சீவும் இயந்திரம் மற்றும் 4 அடி விட்டம் கொண்ட இரும்புத்தாச்சி உடனடியாக தேவை.

தொ.பே:- 0771573997

(29060)(3.6)

www.ebuybazaar24.com Online Shop & Matrimony
www.ebb24.com உலகத் தமிழர்களை திருமண பந்தத்தில் இணைக்கும் பாலமாக இணையத்தில்
EBB PROPOSAL
இப்போது இனிய உதயம்!
உங்கள் துணையை எங்கள் இணயத்தில் தேடுங்கள்!
இலவச பதிவு!, சிதளவகருக்கு இலவச சேவை!
அறிமுகச்சலுகை! 1வருட சேவைக்கட்டணம் 3990.00
(இச்சலுகை எதிர்வரும் 28.02.2013 வரை மட்டுமே)
இணய வசதிகள் இல்லாதவர்கள் இலவச விண்ணப்பப்படிவத்திற்கு அழையுங்கள்.
தொலைபேசி: 021 791 7470
www.ebb24.com
இலங்கையில் நீங்கள் எந்த மூலையில் இருந்தாலும் உள்ளூர் அலுவலகத்தில் பணம் செலுத்தி சாதிகளை வாங்கலாம்!

## மரண அறிவித்தல்



**நல்லதம்பி இராசலிங்கம்**
M.Sc., FCMA, FCCA, MBIM, DPFM Senior Lecturer

வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், இல. 12-3/3, றோகினி றோட்,,வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராசலிங்கம் அவர்கள் 30-12-2013 புதன்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரி (பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரி ஆசிரியை)யின் அன்புக் கணவரும், Dr.மலர்விழி, பகீரதன் (லண்டன்), காலஞ்சென்ற இளங்கோ (கனடா) மற்றும் Dr.வள்ளுவன் இராசலிங்கம் (அமெரிக்கா), திருமதி கயல்விழி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. அ. பகீரதன் (லண்டன்), திருமதி தயாளநிதி (கனடா), திருமதி நாகநிமலினி (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், அரவிந்தன், ஆரபி, அருள்விழி (வித்யா), அகல்விழி (சத்யா), திவ்யா, அகல்யா, அவிநாஷ் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

கொழும்பு வாழ் உறவினர்கள், நண்பர்களின் அஞ்சலிக்காக அமரரின் உடல் பொரளை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் 01-02-2013 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை வைக்கப்பட்டு இறுதிச்சடங்கிற்காக சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரி வீதியில் உள்ள அன்னாரது "குறிஞ்சி" இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இறுதிச்சடங்குகள் அவரது இல்லத்தில் 03-02-2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்வதற்காக பிற்பகல் ஒருமணியளவில் விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மலர்விழி : T.P.: 0776948131
வள்ளுவன் : T.P.: 0772858616

"குறிஞ்சி" இந்துக்கல்லூரி வீதி,பண்டத்தரிப்பு.
T.P. : 0212250453, 0213215026

(F5859)(2.6.7)

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலையின் முதல்வர்
வே.கா.கணபதிப்பிள்ளை
அவர்களின் அன்பு மாமியார்
**மாணிக்கம் குலமணி**
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
அவர்கள் அமெரிக்காவில் 31.01.2013 அன்று அமரத்துவமுற்ற செய்தியை அறிந்து எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலைக் குடும்பம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

(C/8133)(3.6.7)

## அமைதியான மன நிறைவான வாழ்விடத்தை தேடுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திரு வீதியில் அமைந்துள்ள கடலும் கடல் சார்ந்த இரம்மியமான சூழலில் உள்ள தியான - யாத்திரிக மண்டபத்தில் நிரந்தரமாக தங்குவதற்கு விரும்புவோர் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

இப்படிக்கு : காப்பாளர் / நிர்வாகத்தினர்.
Dr. கண்ணா, சித்தன்கேணி. தொ.பே : 0776028734

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவைபரீட்சையில் சித்தி பெற்று பண்டாரவளை கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக பதவியேற்றுள்ள,
**சிவசம்பு மதியழகன்**
(B.com.Hons,Dip.in.Edu (merit),SLEASIII)
அவர்களை மேன்மேலும் பதவிஉயர்சிகள்பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(29010)(3.6)

வாமதேவன் (G.S)
குடும்பத்தினர்.

## தரம்-05புலமைப்பரிசில்மாணவர்க்கு ஓர் நற்செய்தி

2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு தபால் மூலமான கற்றல் சேவை ஆரம்பம் (வினாத்தாள்,புத்தகங்கள்)

நீங்கள் செய்ய வேண்டியது

**மாணவர் பெயர்,முகவரி, தொலைபேசி இல.** என்பவற்றை எம்மிடம் பதிவு செய்வதன் மூலம் நாடு முழுவதிலிருந்தும் வெளியாகும் வினாத்தாள்கள்,புத்தகங்கள், CDக்கள் என்பவற்றை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: பதிவுக்கு கட்டணம் இல்லை.
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
பதிவு காலம் 01.02.2013 15.02.2013 வரை
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
021 222 9881. (சி/8135)(8.7.4)

வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும்
சற்குரு.ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 166 ஆவது

### ஆராதனை விழா - 2013

**காலம்:**
நிகழும் நந்தன வருடம் தைத்திங்கள் 21 ஆம் நாள் (2013.02.03) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை

**இடம்:**
யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**தலைவர்:**
திரு.செ.உதயகுமார்
(யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளரும், வ.இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்)

**பிரதம விருந்தினர்:**
பேராசிரியர் V.P.சிவநாதன்
(கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு.வை.செல்வராஜா
(மாகாணக் கல்விப்பணிப்பாளர், வட மாகாணம், மருதனார்மடம்)
திரு.வே.தி.செல்வரட்ணம்
(ஓய்வுநிலை பிரதிச் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு)


**கௌரவ விருந்தினர்கள்:**
திரு.ஆ.இராஜேந்திரன்
(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வட மாகாணம், மருதனார்மடம்)
திரு.S.பிறேமகாந்தன்
(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வட மாகாணம், மருதனார்மடம்)
திரு.S. நந்தகுமார்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்)
திரு.S.சேதுராஜா (அதிபர், யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்)

வட இலங்கைச் சங்கீதசபை,
யாழ்.வலயக் கல்வி அலுவலகம், நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி/8128)(2.6.7)

சி.சிவராஜன்,
செயலாளர்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

## 21ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**முத்துத்தம்பி இரத்தினவேலு**
(சந்தனம்)

மலர்வு
25★02★1943
உதிர்வு
09★02★1992

ஆண்டுகள் மறைந்தாலும்
அன்பான உம் முகம்
மீண்டும் மீண்டும் வந்து எம்மை
மிகவும் வருத்துதப்பா!

என்றும் உம் நினைவில்
மனைவி, பிள்ளைகள், மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.
சேச்லேன், கூழாவடி, ஆனைக்கோட்டை.
பிறேம் நகைமாடம், யாழ். வீதி, மானிப்பாய். (29108)(2.6.7)

## மரண அறிவித்தல்கள்



**பொன்னம்பலம் அன்னம்மா**
(அம்மாக்கா)

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அன்னம்மா நேற்று முன்தினம் (30.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, கந்தையா, பொன்னம்மா, சின்னம்மா, மாணிக்கம், சுப்பிரமணியம், தாமோதரம்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (28850)(6.7.11)

தகவல்:
ந.இராசலட்சுமி
(பெறாமகள்),
சு.போகன் (மருமகன்).

## மாணிக்கம் குலமணி

(சிறுப்பிட்டி வடக்கு,நீர்வேலி)



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவில் வசித்தவருமாகிய திருமதி மாணிக்கம் குலமணி நேற்று (31.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் (முன்னாள் அதிபர், சிறுப்பிட்டி இ.த.க பாடசாலை, முன்னாள் தலைவர், அச்சுவேலி MPCS) அவர்களின் அன்பு மனைவியும் Dr.கணேசராஜா (U.S.A),காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இரத்தினேஸ்வரி (கனடா),மங்களேஸ்வரி(மருத்துவத் தொழிநுட்பவியலாளர்-U.S.A),கமலாதேவி, பத்மாதேவி, சிவானந்தராஜா (பொறியியலாளர் U.S.A) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.விஜயா(U.S.A), காலஞ்சென்றவர்களான பத்மநாதன் (முன்னாள் கணக்காய்வு பரீட்சகர்), குமாரசாமி (பொறியியலாளர்) மற்றும் பஞ்சலிங்கம் (கணக்காளர் U.S.A), கணபதிப்பிள்ளை (அதிபர், ஆசிரியர் கலாசாலை,கோப்பாய்), செல்வராசா (ஓய்வுநிலைக் கிராம அலுவலர்,சாவகச்சேரி),யஜி(U.S.A) ஆகியோரின் அன்பு மாமியாரும், நந்தகுமார்,நளினி(U.K), அமெரிக்காவில் வசிக்கும் Dr.ராஜ், விவேக்,Dr.ஷீலா, கோகுலன், நிவேதினி மற்றும் கனடாவில் வசிக்கும் இரத்தினகுமார்,நிதர்சினி மற்றும் நிலானி (ஆஸ்திரேலியா), பிறேமராகவன்(சித்தமருத்துவத்துறை மாணவன், யாழ்.பல்கலைக் கழகம்),கோபிகா (சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம்,கைதடி), கௌசிகா ஆகியோரின் பேர்த்தியும் UK இலுள்ள சங்கர்சனன், சிவேதினி,யாதவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(02.02.2013) சனிக்கிழமை அமெரிக்காவில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கணேசபுரி'
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (29061)(5-6-7)

தகவல்: திருமதி க.காமலாதேவி
(மகள்)